அமுதசுரபி

ஏப்ரல் 1995 விலை ரூ. 6





அமுதசுரபி

ஏப்ரல் – 95 மலர் : 47

யுவ – சித்திரை இதழ் : 12

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே – பாரதியார்

பொன்விழா ஆண்டை நோக்கி!

சித்திரை பிறந்தது. வெயிலின் கடுமை பரவத் தொடங்கினாலும், வசந்தம் வருகிறது என்ற நினைப்பு மனத்தில் புதிய உற்சாகத்தைத் தருகிறது.

20-ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் இருக்கிறோம். புதிய நூற்றாண்டை வரவேற்க ஆயத்தமாக வேண்டும். சமூகம் -அரசியல் - அறிவியல் - தொழில் துறைகளில் இந்த நூற்றாண்டின் படிப்பினைகள் நமக்கு மிகப் பயன்படும்.

வீடியோ – வருகையினால் எழுத்து – நூல்கள் – இவற்றின் வருங்காலம் எப்படி இருக்குமோ என்று கற்றவர்களே அச்சப்படு கிறார்கள். நம்மைவிட ஒரு நூற் றாண்டு முன்னணியில் நிற்கும் மேற் றிசை நாடுகளிலும், ஜப்பானிலும் மின்னணு யுகத்தின் முன்னேற்றத் தால் அச்சு – அச்சு தொடர்பான தயாரிப்புகள் பாதிக்கப்படாதிருப் பதைக் காணலாம்.

திரைப்படம் -வீடியோ- தொலைக் காட்சியைப் பார்ப்பதில் நேரத்தைக் கழிப்பதில் உள்ள ஆர்வத்தை நூல் களைப் படிப்பதிலும் காட்டினால் இலக்கியம் வளரும். இலக்கிய வளர்ச்சிதான் ஒரு நாட்டின் பெருமைக்கு அளவுகோல்!

பொன்விழாவை நோக்கி வெற்றி நடைபோடும் உங்கள் இலக்கிய இதழ் அமுதசுரபியின் அடுத்த இதழ் 49-ஆம் ஆண்டின் முதல் இதழ். தொடர்ந்து இலக்கிய விருந்துக்குக் குறைவில்லை. ●



பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா, கௌரவ இலக்கிய ஆலோசகர் : என். வி. சுப்பிரமணியம், ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன், இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார், அட்டைப் பட போட்டோக்கள் : யோகா. ஆண்டு சந்தா : ரூ. 72/– தனி இதழ் விலை : ரூ. 6/– ஆயுள் சந்தா : ரூ. 1000/–

பட்ஜெட் 1995

எஸ். இராஜரத்தினம்

ஒவ்வொரு பட்ஜெட்டிலும் மத்திய அரசும், மாநில அரசும் தங்களுடைய ஆண்டு வரவு செலவுக் கணக்குகளைச் சமர்ப்பிக்கின்றன. இந்த ஆண்டு மத்திய நிதி நிலை அறிக்கையை நிதியமைச்சர் டாக்டர். மன்மோகன் சிங் மார்ச் 15 ஆம் தேதி சமர்ப்பித்தார். இந்த அண்டு மத்திய அரசுக்குத் தேர்தல் ஆண்டாக இருப்பதால் வரிகள் அதிகரிக்கப் படமாட்டா, ஓரளவு குறையலாம் என்பதே எல்லாரும் எதிர்பார்த்த ஒன்று. ஆயினும் அரசுக்குள்ள நிதிப் பிரச்னைகளினால் எந்த அளவுக்குக் குறைக்க முடியும் என்பதில் கூடவே சந்தேகமும் இருந்தது. பணவீக்கத்தைக் குறைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதும் ஒரு கேள்விக்குறியாக இருந்தது.

விலைவாசி ஏற்றத்திற்கு மறைமுக வரிகள் ஒரு காரணம் என்பதால் மறைமுக வரிகள் ஓரளவு சிமெண்ட், சிகரெட் தவிர எல்லா உற்பத்திப் பொருள்களிலுமே 5 சதவிகிதத்திற்குக் குறையாமல் குறைக்கப்பட்டிருக்கிறது. இறக்குமதிகளுக்கும் கணிசமான அளவில் வரி குறைக்கப்பட்டிருக்கிறது. சிமெண்ட்டிற்கு வரி கூடினாலும் கூட அதற்கு அதிக விலை கிடைப்பதால் இந்த வரி ஏற்றத்தை இலாபத்திலிருந்தே உற்பத்தியாளர்கள் ஈடுசெய்வார்கள் என்ற நம்பிக்கைதான் இந்த வரி ஏற்றத்திற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. வரிக்குறைப்பினால் விலைவாசி குறையுமா என்றால் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். நுகர்வோர், அவசியமானால் தவிர அதிக விலை கொடுத்து அத்தியாவசிய மற்ற பொருள்களை வாங்குவதைத் தள்ளிப் போடுவதன் மூலமே விலைவாசியேற்றத்தை ஓரளவு குறைக்க முடியும். ஆனால் உணவு, உடை போன்ற அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதைத் தள்ளிப் போட முடியுமா என்ன?

நமது பொருளாதாரத்தில் இதுவரை இருந்து வந்த ஒரு நல்ல அறிகுறி, நம் மக்களிடமுள்ள சேமிப்பு மனப்பான்மைதான். ஆனால் வருடா வருடம் பல நுகர் பொருள்கள் நல்ல விகிதங்களில் வெளிநாட்டுப் பொருட்களுக்கு ஈடாகக் கிடைப்பதால் அவற்றின் விற்பனை அதிகரித்து சேமிப்பு குறைந்து இருப்பது நமது நாட்டிற்கு அவ்வளவு நல்லதல்ல. மறைமுக வரிக் குறைவினால், விலை வீக்கம் குறைந்தால் அந்தக் குறைவு சேமிப்பாக இருந்து உற்பத்தித் தொழில்களுக்கு முதலாகக் கிடைத்தால், அது தரும் வளர்ச்சியைப் பொருளாக வாங்கும்போது அவர்கள் தருவதில்லை.

மறைமுக வரிகளைக் குறைத்து நேர்முக வரிகளைச் சிறிதளவே குறைத்தது பொருளாதார நோக்கில் சிறந்தது. ஏனெனில் மறைமுக வரிகள் ஏழைகளைப் பாதிக்கும். நேர்முக வரிகள் வருமானம் உள்ளவர்களை மட்டுமே பாதிக்கும். இந்த பட்ஜெட்டில் வரிக்குரிய குறைந்தபட்ச வருமானம் ரூ. 35,000லிருந்து ரூ. 40,000 எனக் கூட்டப்பட்டிருக்கிறது. அதே சமயம் வங்கிகளிலிருந்து வரும் வட்டி, கம்பெனிகளிலிருந்து பெறப்படும் பங்குத் தொகை, யூனிட் ட்ரஸ்ட் முதலிய சேமிப்புகளில் சேமிக்கப்படும் தொகைக்குக் கிடைக்கும் வட்டி, பங்குத் தொகை ஆகியவற்றிற்குக் கொடுக்கப்பட்ட கழிவு ரூ.10,000லிருந்து ரூ. 13,000 ஆகக் கூட்டப்பட்டிருக்கிறது. வரிக்குரிய குறைந்தபட்ச வரித் தொகை ரூ. 5,000 கூட்டப்பட்டு இருப்பதால் ரூ. 40,000க்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்கள் எவருக்கும் ரூ. 1,000 வரி குறையும்.

பணியில் ஊதியமாகப் பெறப்பட்ட வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு உச்சவரம்பு ரூ. 15,000க்கு உட்பட்ட அளவிற்குக் கழிவாகப் பெறலாம். இதனால் இப்

போதைய நிலவரப்படி 35,
வரை ஊதியமாகப் பெறுபவர்
வரி செலுத்த வேண்டியதில்ல
அவர்களுக்கு வட்டி முதலிய
மானம் ரூ. 13,000 இருந்த
ரூ. 68,000 வரை வரி செலு
வேண்டியதில்லை. நம் நாட்டி
சராசரி வருமானத்தைப் பார்க்
போது, இந்த வரிச் சலுகைகளை
குறைவாக மதிப்பிட முடியாது.

புதிதாக அறிவிக்கப்பட்ட வ
சலுகைகள் மறைமுக வரிகளை
பொறுத்த வரை உடனடிய
அமலுக்கு வருகின்றன. ஆனா
நேர்முக வரிகளைப் பொறு
வரையில் அவை வரும் ஆண்டி
பெறப்படும் வருமானத்திலிரு
மட்டுமே கிடைக்கும். வரும் ஆ
டில் தாக்கல் செய்யவேண்டி
வரிப்படிவத்திற்கு சென்ற ஆ
டில் அறிவிக்கப்பட்ட வ
சலுகைகள் மட்டுமே இருக்கும்.

இந்த வரிச்சலுகைகளை ஒ
மத்தியதரக் குடும்பம் அனுபவி
வேண்டியிருந்தால் அது என்
செய்ய வேண்டும்? செலவை
குறைத்தால் மறைமுக வரிக
குறையும்; சேமிப்பு கூடும்.
அந்தச் சேமிப்பை வ
சலுகைக்குட்பட்ட முதலீடுகளி
ஈடுசெய்தால் வருமான வ
குறையும். பிரிவு 88இன் க
பொது வைப்பு நிதி, தேசி
சேமிப்பு பத்திரங்கள், வ
சலுகைக்குட்பட்ட பரஸ்பர நிதிக
(ரூ. 10,000 வரை) தேசிய சேமிப்
நிதி ஆகியவற்றில் ரூ. 60,000 வ
முதலீடு செய்யலாம். செய்
முதலீட்டுக்கு 20% வரித் தள்ளுப
உண்டு. வட்டிக் கணக்கு பார்க்கு
போது இந்த வரிச்சலுகையை
கணக்கில் கொள்வது ஒரு தேவை
அது போலவே, பிரிவு 88 இ
கிடைக்கும் வரிக் கழிவு வ
மானத்திலிருந்து கிடைக்கிறது.
13,000 வங்கி வட்டி பங்குக
மூலம் பெறப்பட்டால் வ
மானத்திலிருந்து கழிவு இருப்
தால் அதற்காக நாம் பெறு
ஆதாயம் நமது உச்ச வரம்பு வ
விகிதத்தைப் பொறுத்தே இரு
கிறது. வருட வருமானம் ரூ
1,20,000க்கு மேல் போனால் இந்த
கழிவு ரூ. 13,000 என்றால் ரூ. 5,20
வரி குறைகிறது. வருமானம் ரூ
60,000 – ரூ. 1,20,000இல் இருந்தா

அஸோசியேடட் பிஸினஸ் கிரெடிட்ஸ் லிட்

1982 ஆம் ஆண்டு சேலத்தில் தொடங்கப்பட்டு இன்று 8 கிளைகளோடும் சுமார் 540 லட்ச ரூபாய் டெபாசிட்டுகளோடும் வளர்ந்துள்ள அஸோசியேடட் பிசினஸ் கிரெடிட் முதன் முறையாக தனது பங்குகளைப் பொதுமக்களுக்கு விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளது. சுமார் 10,00,000 பங்குகள் ரூ. 10/- என்ற விலைக்கே பொதுமக்களுக்கு வெளியிட்டு தனது முழுவதும் வரப்பெற்ற முதலீட்டை (Fully paid up capital) 3 கோடி ரூபாய்க்கு உயர்த்தத் திட்டமிட்டுள்ளது.

கடந்த 13 ஆண்டுகளாகத் திறம்பட நிர்வகித்து 1992 இல் ரூபாய் 49.42 லட்சமாக இருந்த மொத்த வருமானத்தை 1994 மார்ச் மாதம் முடிய ரூபாய் 297 லட்சமாக உயர்த்தியுள்ளது.

எல்ஐசியின் குழந்தைகள் பணம் திரும்பப்பெறும் பாலிசி

இன்றைய காலகட்டத்தில் குழந்தைகளின் கல்விக்காகவும், வளர்ச்சிக்காகவும் அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது. இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்ய, தற்போது எல்ஐசி எளிய முறையில் செயல்படும் ஒரு புதிய பாலிசியை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி குழந்தையின் 18ஆவது வயதில் பிரிமியம் செலுத்துவது நிறுத்தப்படுகிறது. 26ஆவது வயதுவரை உயிர்ப் பாதுகாப்பளிப்பதுடன் 18,20,22, 24ஆவது வயதில் முறையே 20% 20% 30% 30% என்று பாலிசித் தொகையை திரும்ப அளிக்கிறது. இத் தொகை கட்டாயம் அவர்களின் மேல்படிப்பிற்கோ, தொழில் செய்யவோ உதவும். இத்துடன் அல்லாமல் 26ஆவது வயதில் உறுதியளிக்கப்பட்ட தொகையாக இன்சூர் செய்யப்பட்ட ஒவ்வொரு ரூ. 1000/-க்கும் ஓர் ஆண்டுக்கு ரூ. 80/- வீதம் தருகிறது. பாலிசிதாரர் நடுவே இறக்க நேரிட்டால், உயிர்ப் பாதுகாப்பின் விளைவாக, இடையில் எவ்வளவு தொகை திரும்பப் பெற்றிருந்தாலும், இன்சூர் செய்யப்பட்ட தொகையும், அதுநாள் வரை கணக் கிடப்பட்ட உறுதித் தொகையும் அளிக்கப்படும்.

—டிஆர்ஜி

ரூ. 3,900 வரி குறைகிறது. குறைந்த வரி நிலையில் இருப்பவர்களுக்கு வரி ரூ. 2,600 குறைகிறது. குறைந்த பட்ச வருமானத்திற்கு உட்பட்டவர்களுக்கு இதனால் ஒரு இலாபமும் இல்லை. சேமிப்புகளை இம்மாதிரி உள்ளவற்றில் ஈடுசெய்தால், அந்த அளவுக்கு சுமை குறைகிறது என்பதைப் பார்த்து முதலீடு செய்ய வேண்டும்.

பொதுவைப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டி வருமானத்திற்கு வரி கிடையாது. அது வரிக்குட்பட்ட வருமானமாகக் கருதப்படமாட்டாது. ஆனால் தேசிய சேமிப்புப் பத்திரங்கள் எட்டாவது தொகுதியில் பணத்தை ஈடுசெய்தால், வருமானத்தில் சேர்த்து வரும் வட்டியை பிரிவு 88 இல் கழிவாகக் கிடைக்கும் ஏனைய வரவுகளுடன் ரூ. 13,000க்கு உட்பட்டு இருந்தால் அந்த வட்டி கழிவாகப் பெறப்படுகிறது. அந்த வட்டிக்கு வரி இல்லாமல் போகிறது. அந்த வட்டி மறுபடியும் அதே திட்டத்தில் ஈடுசெய்யப்படுவதால் அதற்கும் பிரிவு 88இன் கீழ் 20% வரித்தள்ளுபடி கிடைக்கிறது. அதனால் அந்த வட்டிக்கு இரட்டிப்புச் சலுகை கிடைக்கிறது.

இதையெல்லாம் கணக்கில் கொண்டால் 20% வரி கட்டும் ஒருவருக்குப் பொது வைப்பு நிதியில் செலுத்தும் பணம் 12% வட்டிதான் என்றாலும் வரிச் சலுகையினால் 25.24 ஆகிறது. 30% வரியும் 40% வரியும் கட்டுபவர்களுக்கு வட்டிவிகிதம் முறையே சுமார் 28%, 40% ஆகும். தேசிய சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்பவர்கள் பிரிவு 88 வரம்பிற்கு (தற்போது ரூ. 10,000, வரும் ஆண்டு ரூ. 13,000) உட்பட்ட வட்டி வாங்குபவர்களாக இருந்தால் பொது வைப்பு நிதியைவிட அதிக வருமானம் கிட்டும். வயது வராத குழந்தைகளின் (மைனர்) வருமானம் தாய் அல்லது தந்தையைச் சார்வதால் பொது வைப்பு நிதியில் இருந்து வரும் அவர்களது வருமானம் தந்தை அல்லது தாய்க்கு அதிக வருமானம் இருப்பினும் கூட வரியில் இருந்து தப்பிக்கும்.

இந்த பட்ஜெட்டில் ஊனமுற்றோருக்கு ஒரு முக்கிய சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. உடல் ஊனமுற்றோருக்கு மற்றவர்களுக்குக் கிடைக்கும் குறைந்தபட்ச வரி விலக்குத் தொகையாக ரூ. 40,000க்கு மேல் மேலும் ரூ. 40,000 கிடைக்கும். இது நடப்பு ஆண்டு வரை ரூ. 20,000 வரை மட்டுமே இருந்தது. ஊனமுற்ற குழந்தைகளின் பெற்றோர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 15,000 வரிக் கழிவு தரப்பட்டு வருகிறது. இத்துடன் ஒரு புதிய ஆயுள் காப்புத் திட்டத்தின் கீழ் அந்தப் பெற்றோர் குழந்தைகளுக்காக எடுக்கப்படும் திட்டத்தின் கீழ் செலுத்தப்படும் சந்தாத்தொகை ரூ. 20,000 வரை கழிவாகக் கிடைக்கிறது. இதுவும் ஒரு நல்ல சலுகையே. ஆனால் உடல் ஊனம் என்பது வருமான வரிச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் மூலமே ஒத்துக் கொள்ளக் கூடியதாகும். பார்வைக் குறைவு, காது கேளாமை, கை, கால் ஊனமுள்ளவர்கள், மூளை வளர்ச்சி குன்றியவர்கள் என்ற அளவிற்கு ஊனம் இருந்தால் இந்தச் சலுகை கிடைக்கும் என்பதை விதி முறைகளின்படி பதிவு பெற்ற அரசு மருத்துவர் ஒருவரால் சான்றளிக்கப்பட்ட பின்னரே சலுகை அளிக்கப்படும். புற்றுநோய், செயலிழந்த சிறுநீரகம் உடையவர்கள், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் போன்றவர்களுக்கு இதுவரை சலுகை அளிக்காதது ஒரு குறையே.

வரிச்சலுகை பற்றி ஓரளவு வருமானமுள்ள ஒவ்வொரு குடிமகனும் தெரிந்து வைத்துக் கொண்டால் அதனால் பயனடைய முடியும். ௐ

மாம்பலம் தியான மையம்

அன்னையை மனதால் நினைந்து அதனால் மனத்தை தியானம் நாடி வரும் பொழுது அன்னையொளி மனத்தை நிரப்புவது மனம் தியானத்தின் மையமாவதாகும். அன்பர்கள் பலர் கூடி ஓரிடமாக தியானம் செய்யும் அமைப்பை சென்னையில் நிறுவிய பொழுது, அது வீடுதோறும் பரவ வேண்டும் என்று விரும்புவது முறையல்லவா . என நினைத்தேன். இன்று சென்னையில் பல வீடுகளில் அன்பர் ஒரு சிலர் சேர்ந்து வாரம் ஒரு முறை தியானம் செய்யும் அமைப்புள்ளது. சென்னையின் எல்லாப் பகுதிகளுக்கும் உரியது தியான மையங்கள். மார்ச் 17ம் தேதி தி.நகரில் பஸ் ஸ்டாண்ட்க்கு பக்கத்தில், 28 ஸ்ரீனிவாச தெருவில் (ஹோட்டல் அருணா அருகில்) இது போன்ற மையம் ஒன்றை திறக்க எடுத்த முயற்சி வெற்றி பெற்றுள்ளது. இங்கு தினமும் அன்பர்கள் காலை, மாலையில் வந்து தியானம் செய்யும் ஏற்பாடுள்ளது.

புத்தகங்களை விற்கும் ஏற்பாடும் உள்ளது. மேலும் போட்டோக்களையும் விற்கலாம். மாதம் ஒரு முறை ஞாயிறன்று மாம்பலத்தில் பொது இடத்தில் - பள்ளி போன்ற இடங்களில் - அன்பர்கள் கூடி தியானம் செய்யும் ஏற்பாட்டையும் மேற்கொண்டுள்ளோம். அவ்விவரமும் மேற் சொன்ன இடத்தில் கிடைக்கும்.

அன்பர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுதும், தியான மையங்கள் பரவி வரும் பொழுதும், இவ்விடங்களின் புனிதம் மனத்தின் தூய்மையால் பாதுகாக்கப்பட வேண்டும். மனம் தூய்மையானால் மையம் வந்தவுடன் அது அன்னையின் சந்தோஷத்தால் நிறைந்து துள்ளும். அதுவே மனம் தூய்மையானது என்பதைக் காட்டும்.

அன்னையை நாடுவதால் வாழ்வு புனிதப்படும் என்று அன்பர்கள் அறிந்து மையத்திற்கு வந்து, மனத்தின் புனிதத்தை இனிமையாக்கிக் கொள்வது விரும்பத் தக்கது.

நல்லது மட்டுமே அன்னை வாழ்வில் நடக்கும்.

மகிழ்ச்சி மட்டுமே மனத்திற்குரியது.

அளவுகடந்த தெம்பு உடலில் ஊறுவது அன்னையால்

என்பன போன்ற பல்வேறு கருத்துக்களை, நடைமுறையில் பலனாகப் பெறும் இடம் தியான மையம். 4, 5 அன்பர்கள் சில மணி நேர சேவையை அளிக்க முன் வந்துள்ளனர். மையம் சேவையால் மட்டும் நடக்க வேண்டும் என்பதால், முன்வரும் அன்பர்கள் சேவையை ஏற்க முடிவு செய்துள்ளோம்.


புதிய வெளியீடுகளான 'ஆத்மசோதனை', 'குடும்பம்' தற்சமயம் கிடைக்கும்.

'அமுதசுரபி' கட்டுரைத் தொகுப்பான 'புண்ணியபூமி' அடுத்த மாதம் முதல் கிடைக்கும்.

மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி, பாண்டிச்சேரி-11

சிதம்பர சுவாமிகளின் அருள் வலிமை பூரணமாக நிலை நாட்டப் பெற்ற திருப்போரூரில் திரு முருகனின் அருளாட்சி பல்லாயிரம் ஆண்டு களுக்கு மேலாக நிலைத்து நிற்கும்

தாமரைக்கண்ணன்



அடியவரின் மாயையைப் போக்குபவன், திருச்செந்தூர் முருகன். பக்தர்களின் கருமத்தைப் போக்குபவன், திருப்பரங்குன்ற முருகன். வணங்குபவரின் ஆண வத்தை அழிப்பவன், திருப் போரூர் முருகன். இம் மூவரும் முறையே, கடல் அலை, மண், விண்ணில் எழுந்தருளி பக்தர் களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

ஏறத்தாழ நானூறு ஆண்டு களுக்கு முன்பு, தென்பாண்டி நாட்டில் சிதம்பர கவிராயர் என்னும் அருளாளர் அவதரித்தார். திருமுதுகுன்றத்தில் வாழ்ந்த சித்தாந்த ஞான சூரியனான குமாரதேவரின் சீடராகி ஞானம் பெற்றார். குமாரதேவரின் குரு வருளுக்குப் பாத்திரரானார். பின்னர், அவருடைய ஆணைப்படி மதுரை வந்து மீனாட்சி அம்மையை வழிபட்டார். பல நாள்கள் வெறும் பச்சை அறுகினை மட்டும் உண்டு 'மீனாட்சி கலிவெண்பா' பாடி னார். மீனாட்சி அம்மையும் மயில் வடிவில் தோன்றி, 'திருப்போரூர் திருத்தலத்தைச் செம்மைப்படுத்தி, உயர்நிலைக்குக் கொண்டு வர' சிதம்பர சுவாமிகளுக்குக் கட்டளை யிட்டார்.

சுவாமிகள் திருப்போரூருக்கு வருகை புரிந்தார். அந் நாளில் திருப்போரூர் முழுவதும் பனங் காடாகவே காட்சியளித்தது. இப் போது உள்ள பெரிய திருக்குளம் சாதாரண ஒடையாக இருந்தது.

ஊருக்கு மேற்கே உள்ளது, பிரணவ உருவில் உள்ள சக்தி வாய்ந்த மலை. அதன் அருகில் வேம்படி விநாயகர் கோயில். சுவாமிகள் அங்கே தங்கி விநா யகரை வழிபட்டு வந்தார். அவர் எண்ணம் எல்லாம் மதுரை அங்கயற்கண்ணி அம்மை கட் டளையிட்ட திருமுருகன் திருக் கோயில் பற்றியே இருந்தது.

திருப்போரூர் செல்வோம் திருமுருகன் அருள் பெறுவோம்.



ஒருநாள், ஒரு வெண்பனை மரத்தடியில் திருமுருகனின் திருவுருவம் கண்டு மகிழ்ந்தார். உடனே புத்துணர்ச்சி பெற்றார். அவருடைய மனவலிமையாலும், தவ வலிமையாலும் மக்களுக்குத் திருநீறு அளித்து நோய்களையும் வினைகளையும் போக்கி, அவர்கள் தந்த பணத்தைக் கொண்டு கந்தசுவாமி கோயிலைக் கட்டினார். தினசரி வழிபாடுகள் செவ்வனே நடைபெற வழி வகுத்தார்.

சிதம்பர சுவாமிகள் திருப்போரூர் எல்லையில் உள்ள கண்ணுவர்பேட்டையில் தங்கி, அங்கே திருமடம் ஒன்றை நிறுவினார். அங்கிருந்தே கோயில் வழிபாடுகளையும் கோயில் வளர்ச்சியையும் கவனித்து வந்தார். கோயிலின் சிறப்பை விளக்கவும் வழிபாடு முறைகளைச் செம்மைப்படுத்தவும் 'திருப்போரூர் சந்நிதி முறை' என்ற நல்ல நூலை இயற்றினார்.

ஒருமுறை கோவூரைச் சேர்ந்த சிவசங்கரன் என்பவர், கந்தசுவாமி கோயிலுக்கு வந்து வணங்கி விட்டு சிதம்பர சுவாமிகளைத் தரிசித்தார். சுவாமிகள் அவருடைய நோயைப் போக்கி ஆட்கொண்டு, தன் பெயரில் உருவாக்கிய ஆதீனத்தை அவரிடம் ஒப்படைத்து, அவருக்கு 'சிவசங்கர சுவாமிகள்', என்னும் திருநாமம் சூட்டினார்கள்.

பின்னர், புத்தர் பகவான் நிர்வாண நிலையடைந்த வைகாசித் திங்கள் பௌர்ணமி விசாக நட்சத்திரத்தில் (கி.பி. 1659) சிதம்பர சுவாமிகள் பரிபூரண நிலையை யடைந்தார்கள். சுவாமிகள் கி.பி 1645இல் திருப்போரூருக்கு வருகை தந்து, தமது அருள்வலிமையை நிலைநாட்டிச் சென்றுள்ளார்கள். அவ்வருள் வலிமை இன்று பதினான்காம் பட்டமாகப் பொறுப்பேற்றிருக்கும் ஸ்ரீசிதம்பர சிவஞான சுவாமிகள் வரை ஞானஒளி வீசிப் பரவி வருகிறது. இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு திருமுருகனின் அருளாட்சி நிலைத்து நிற்கும்.

"செருக்காலே மிகுந்த கடற்சூர் மாளவென்ற
திறற்சேர் வேல்கை கொண்ட முருகோனே



திணைக்கேள் காவல்கொண்ட குறத்தேன் மாதுபங்க
திருப்போரூ ரமர்ந்த பெருமாளே"
என்றும்

"சகல லோகமும் ஆசறு
சகல வேதமுமே தொழு
சமர மாபுரி மேவிய பெருமாளே"
என்றும்

அருணகிரிநாதர் போற்றிப் புகழ்கிறார், இவ் இறைவனை!

கோயிலின் கருவறை மண்டபம், மூர்த்திகளின் திருவுருவங்கள், இயந்திரத் தாபனம் யாவற்றையும் சிதம்பர சுவாமிகளே அமைத்தார்கள்.

பின்னர் கடந்த 400 ஆண்டுகளாகக் கோயில் படிப்படியாகத் திருமதில், திருக்கோபுரங்களுடன் வளர்ச்சி பெற்றது. கருவறைத் திருச்சுற்றுக் கோட்டங்களில் விநாயகர், முருகர், கொற்றவை ஆகியோர் உள்ளனர்.

கருவறையில் வள்ளி, தெய்வயானையுடன் திருமுருகர் சுயம்புவாகக் காட்சியளிக்கிறார். சுயம்புவாக இருப்பதால், அபிடேகம் இல்லாமல் புனுகுச் சட்டம் சார்த்தப் பெறுகிறது. கருவறையில், ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் அமைத்துள்ள 'தீர்த்த சக்கரம்' என்னும் யந்திரத்திற்கு நாள்தோறும் பூசைகள் நடைபெறுகின்றன.

உள் திருச்சுற்றுக்கு வெளியே தெய்வயானை, வள்ளியம்மை கோயில்கள், உற்சவ முருகர் கோயில்களும் வெளித் திருச்சுற்றில் சிதம்பர சுவாமிகள் உள்ளிட்ட வேறு பல கோயில்களும் உள்ளன.

இராஜகோபுரத்தை ஒட்டியுள்ள முப்பது இரும்புத் தூண்களைக் கொண்ட உயர்ந்த வட்ட வடிவ மண்டபமும் கொடி மரமும் பிரமிக்கத்தக்கவை.

வள்ளையார் ஓடை என்று அழைக்கப்பட்ட இடமே இப்போது பெரிய திருக்குளமாக உருவாகியுள்ளது.

விக்கிரம சோழன் ஆட்சியில் (கி.பி.1128) சிறுகுன்ற நாட்டு செம்பாக்கத்துக் கிராம மக்கள் ஆயிரம் குழி நிலத்தை, சுப்பிரமணிய சுவாமி கோயிலில் விழாக்கள் நடத்தக் கொடுத்துள்ளனர்.

காரண ஆகமம், காமிக ஆகமம், குமார தந்திர ஆகமம் ஆகிய ஆகம விதிகளின்படி பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

சித்திரை, ஆடி, தை, மாசி, பரணி மற்றும் கிருத்திகைகளில் சிறப்பு அபிடேகங்களும் பூசைகளும் நடைபெறுகின்றன. கந்த சஷ்டி விழா, சிதம்பர சுவாமிகளின் வைகாசி விசாக மகா குருபூசை விழா, தைப்பூசம் தெப்ப உற்சவம், மாசி பிரம்மோற்சவம், திருப்படித் திருவிழா முதலானவை, பல்லாயிரக்கணக்கான மக்கள் தரிசித்து மகிழும் விழாக்களாகும்.

காடு, மலை, கடல், வயல்கள் சூழ நான்கு நிலங்களின் எழிலோடு விளங்கும் திருப்போரூர் சென்னையிலிருந்து 42 கி.மீ. தூரத்தில் உள்ளது. சென்னை, செங்கற்பட்டு, மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களிலிருந்து பேருந்து வசதிகள் நிறைய உள்ளன.

திருப்போரூர் செல்வோம்; திருமுருகன் திருஅருளைப் பெறுவோம்.



கேரள 'கதக்களி'

வண்ணப்படங்கள், கட்டுரை: யோகா



இயற்கைக் காட்சிகள் களிநடமிடும் கேரளத்திற்குச் சென்றிருந்த போது ஒருநாள், கொச்சியில் 'கதக்களி' நடனம் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

கடந்த இருபத்திமூன்று வருடங்களாக தினமும் மாலையில் கொச்சி வரும் வெளிநாட்டு யாத்திரிகர்களுக்காக 'கதக்களி' நடனம் நடத்தி வருகிறார் திரு பி.கே. தேவன் என்பவர்.

நாற்பது பேர் உட்கார்ந்து பார்க்கக்கூடிய சிறிய தியேட்டர். ஆறு மணிக்கே வெளிநாட்டு 'டூரிஸ்ட்கள்' வர ஆரம்பித்து விடுகிறார்கள். மேடையில் மேக்கப் நடந்து கொண்டிருக்கிறது. ஆண் வேடம் போடும் நடிகர் மல்லாந்து படுத்துக் கொண்டிருக்க, பெண் வேடம் போடும் மற்றொரு நடிகர் அவர் முகத்தில் மேக்கப் செய்து கொண்டிருக்கிறார்.

கதக்களி ஒப்பனை எவ்வாறு செய்கிறார்கள் என்பதையும் வெளிநாட்டவர்கள் நேரில்பார்க்க ஒரு சந்தர்ப்பமாகவும் அது அமைகிறது. 6.45க்கு முகத்திற்குப் போடும் ஒப்பனை முடியும் தருவாயில் இந்த அமைப்பின் இயக்குநர் பி.கே.தேவன் அந்தச் சிறிய மேடையில் தோன்றி எல்லாரையும் வரவேற்கிறார். பின்பு தெளிவான ஆங்கிலத்தில் எல்லாருக்கும் புரியும் விதமாக சில விளக்கங்களைக் கூறத்

"சற்று முன்பு நீங்கள் இங்கே இரண்டு நடிகர்கள் முகத்தில் மேக்கப் போட்டுக் கொண்டிருந்ததைக் கவனித்தீர்கள். இந்த ஒப்பனைக்கு உபயோகப்படுத்தும் வண்ணம் பஞ்ச வர்ணம்: அதாவது ஐந்து வர்ணங்கள் மஞ்சள், சிவப்பு, பச்சை, வெள்ளை, கறுப்பு ஆகியவையாகும். இந்த ஒப்பனைக்கு மூலப்பொருள் பூமிக்கு அடியில் விளையும் மஞ்சள் கிழங்கை அரைத்து அதனுடன் ஊதாப் (நீலம்) பொடியைச் சேர்க்கும் போது பச்சைக்கலரும், சிவப்புப் பொடியைச் சேர்க்கும் போது சிவப்புக் கலரும் கிடைக்கின்றன. மஞ்சள் பூசுவது முகத்திற்கு ஆரோக்கியமானது. இந்தியாவில் சமைக்கும் பொருளுடன் மஞ்சள் சேர்த்தே சமைப்பார்கள். அதற்குக் காரணம் உணவில் ஏதாவது விஷத்தன்மை இருந்தாலும் அதை முறிக்கும் சக்தி மஞ்சளுக்கு உண்டு. மேலும் தென்னாட்டு மங்கையர் பொதுவாக மஞ்சள் பூசியே குளிப்பார்கள். தோலில் உள்ள கிருமிகளை இந்த மஞ்சள் போக்குவதுடன் பெண்களின் உடலின் கை, கால் போன்ற இடங்களில் தேவை இல்லாமல் வளரும் உரோமங்களையும் முகத்தில் வளரும் முடிகளையும் போக்குகிறது. மேலும் இந்த ஒப்பனை பொருள்கள் தேங்காய் எண்ணையில் கலந்து தான்அரைக்கப்படுகின்றன-தேங்காய் எண்ணெய் தோலுக்கு மிகுந்த சக்தியையும் பளபளப்பையும் உண்டாக்கக் கூடியது. தினம் தினம் ஒப்பனைக்காக தேங்காய் எண்ணெய் உபயோகப்படுத்தும் போது முகத்தின் தோல் நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறது.

கேரள நாடு என்பதற்கு அர்த்தமே, தேங்காய் வளரும் நாடு என்றுதான் பொருளாம். கேரளத்தில் எல்லாவற்றிற்குமே பெரும்பாலும் தேங்காய் எண்ணெயைத்தான் பயன்படுத்துவார்கள். பிறந்த குழந்தைக்கு ... ஆம் நாள் தேங்காயெண்ணை... பூசி குளிப்பாட்டுவார்கள். பொ... வாக, தேங்காய் எண்ணெ... உடம்பில் தேய்த்துக்கொண்டுதா... கேரளப் பெண்கள் தினமும் கு... பது வழக்கம். இது தோலு... மிகவும் ஆரோக்கியம் என்பதே... உடம்பில் ஒரு பளபளப்... நிரந்தரமாக ஏற்படுத்தும். கேர... தின் உணவு சமைக்க உபயோ... படுத்துவதும் தேங்கா... எண்ணெய்தான்"

என்று கூறிக்கொண்டே ஆ... வேடம் போடுபவரின் கிரீடத்... கையில் எடுத்து வைத்து... கொண்டு, "இந்தக் கிரீடத்... மூன்று நிலைகள் வைக்கப்பட்டு... ளதை நீங்கள் காணலாம். அத... காரணம் கூறுகிறேன். இந்... சமயம் என்பது மூன்று நி... யாகப் பிரிந்து வணங்கப்படுகிற... அதாவது

முதல் நிலை - பிரம்மா...
- தொடக்...

இரண்டாம் நிலை - விஷ்ணு...
- வாழ்க்...

மூன்றாம் நிலை - சிவன்...
- முடிவு...

என்று மூன்று பிரிவாக இந்... சமயக் கோட்பாடு அடங்கிவி... கிறது என்று சுருக்கமா... கூறுவர். இந்து சமயம் மிக... தொன்மையான சமயம். இந்... சமயத்தில் ஏன் பல்வேறு வ... யான கடவுள்களை வணங்... கிறார்கள் என்று நீங்கள் கேட்... கூடும் இந்துக்கள் இதிகாசத்... மிகவும் ஈடுபாடு கொண்டவர்க... நம்மைப் படைத்த கடவுள் ச... ஒன்றே. அந்தச் சக்தியைப்ப... யுடன் ஈடுபட பல கதைகளை... புனைந்து அதனை மக்களு... எடுத்துக்கூறி, அவர் களிடை... பக்தி மார்க்கத்தை ஏற்படு... னார்கள். இந்து சமய அடிப்ப... யில்தான் 'கதக்களி' நடனமு... வடிவமைக்கப்பட்டுள்ளது" என... கூறி அன்றைய நடனத்தி... பகுதியை விளக்கிச் சொன்னது... கதக்களி நடனம் தொடங்கி... ஒன்றரை மணி நேரம் கதக்... நடனத்தில் ஒன்றியிருந்து நட... முடிந்தவுடன் அங்கிரு... புறப்பட்டோம்.

யோகா '95

இந்தியச் சற்றுலா வளர்ச்சி
ாட்டுக்காக "Visit India
(இந்தியாவுக்கு வருகை
கள் '91) கொண்டாடப்பட்ட
மத்திய அரசாங்கத்தில்
ாத துறையின் அமைச்சராக
தவர் திரு. எம்.ஓ.எச். பருக்
காயர்.

விழா ஒன்றில், 'இந்தியப்
டு மேன்மேலும் பல்கிப் பெருக
ாசனத்திற்குப் புத்துயிர் தர
டும்' என்று திரு. பருக்
காயர் பேச - அந்த
தையின் செயல்பாடுதான்
அரசின் சுற்றுலா வளர்ச்சித்
நடத்தி வரும் யோகாசனத்
ழாக்கள்.

3-ஆம் ஆண்டு - முதல்
ாசனத் திருவிழாவையும்
ும் ஆண்டு - இரண்டாம்
ாசனத் திருவிழாவையும்
ய சுற்றுலாத் துறையினர்
ம் யோகாசனத் திருவிழாவை
95 முதல் 12-3-95 வரை
சரி, உப்பளம், இந்திரா காந்தி
யாட்டு அரங்கத்தில் வெகு
க நடத்தினர்.

தாடக்க விழாவிற்குப் புதுவைச்
மன்ற உறுப்பினர் மாண்புமிகு
ஆறுமுகம் தலைமையேற்க,
செயலாளர் திரு. பி.வி.
ராஜ் ஐ.ஏ.எஸ். வரவேற்புரை
னார்.

புதுவை மாநில முதல்வர்
புமிகு வெ. வைத்தியலிங்கம்
விளக்கு ஏற்றி விழாவைத்
கி வைக்க - சுற்றுலாத் துறை
நர் திரு. வி. சிவசண்முகம்
ுரையாற்றினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில்
வையாளர்கள் வரிசையில்
திருந்த அரசு செயலாளர் திரு.
செல்வராஜ் ஐ.ஏ.எஸ்.,
ிடம் பேசினோம்.

புண்ணிய பூமியாக இந்தப்
மண்ணைக் கருதுகிறேன்.
ந்தர், அன்னை, மகாகவி
ார், பாரதிதாசன் போன்ற



அறிஞர் பெருமக்கள் வாழ்ந்த இந்த மண், யோகாசனத்தையும் உலகம் முழுக்கப் பரப்புவதில் முன்னணியில் இருக்கிறது. யோகம் உடல் நலத்திற்கு மட்டுமன்று; மனத் திடத்திற்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம்." என்றவர் நடந்து கொண்டிருந்த கருத்தரங்கில் ஆழ்ந்திருந்தார்.


கருத்தரங்கில் படிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் நூலாகத் தொகுக்கப்படும். சிறப்பு அழைப்பாளர்களாக 350 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். இதில் 30 பேர் வெளிநாட்டவர். அத்துடன் 40 யோகாசன நிபுணர்களும் மூன்றாவது யோகாசனத் திருவிழாவில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

வந்திருந்த அத்தனை பேர்களுக்கும் தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகளைச் சிறப்புறச் செய்திருந்த சுற்றுலாத்துறை இயக்குநர்
வி. சிவசண்முகம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்.

ஒரு புறம் கருத்தரங்கம், மறு பக்கம் வயது வாரியாக யோகாசனப் போட்டிகள் என்று வரிசையாக நிகழ்ச்சிகள் வரையறுக்கப்பட்டு சிக்கலில்லாமல் யோகாசனத் திருவிழா கோலாகலமாகப் புதுவையில் அரங்கேறிக் கொண்டிருந்தன.

புதுவை முதல்வர் மாண்புமிகு வெ. வைத்தியலிங்கம், "இந்தியாவில் யோகாவைக் கொண்டாடும் முதல் மாநிலமாக புதுவை திகழ்கிறது" என்று தொடக்க விழாவில் பேசியது முற்றிலும் உண்மையே!

- நாகராஜ குமார்.



—ஸ்ரீ ஜகத்குரு காவியம்—
எழுதியவர் :
புலவர் வே.பிரபாகரன்
விலை : ரூ. 30-00
கிடைக்குமிடம் : அமுதசுரபி,
145, லிங்கச் செட்டி தெரு,
சென்னை- 600 001.

'அமுதசுரபி'யுடன் 'இந்தியன் வங்கி' இணைந்து நடத்திய காப்பியப் போட்டியில் முதல் பரிசு பெற்ற காப்பியம், புலவர் வே.பிரபாகரன் எழுதிய ஸ்ரீ ஜகத்குரு காவியம்.

ஸ்ரீ ஜகத்குரு காவியத்தை ஸ்ரீராம் டிரஸ்ட் (அமுதசுரபி வெளியீட்டாளர்) நூலாக வெளியிட்டனர்.

இந்த நூலை காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வெளியிட்டார்.

சென்னை, சிருங்கேரி பிரவசன மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 'அமுதசுரபி'யின் ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன் அவர்களுடன், ஏராளமான எழுத்தாளர்களும், வாசகர்களும் கலந்து கொண்டனர். எழுத்தாளர்கள் தாங்கள் எழுதிய நூல்களை ஸ்ரீ ஜயேந்திரருக்கு அளித்து ஆசி பெற்றனர். ஸ்ரீ ஜகத்குரு காவியத்தின் வெளியீட்டிற்குப் பிறகு ஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகள் அருளுரை வழங்கினார்.

அன்பர்கள் அனுபவம்

1

ஒரு சூபரிண்டெண்டெண்ட் இன்ஜினீயரான அன்பருக்கு, அவர் நண்பர் எழுதிய கடிதம், நண்பர் இதய நோயாளி என இன்ஜினீயர், அன்னைக்குப் பிரார்த்தனை செய்தார். அவர் பெற்ற கடிதமாவது :

"அன்புள்ள பாலு!

... நான் BHEL ஆஸ்பத்திரியில் 60 நாளாக இருப்பது உங்களுக்குத் தெரியும்... Angiogram என்ற டிரீட்மெண்ட் கொடுத்தனர். அவர்கள் உபயோகப்படுத்திய dye எனக்கு ஒத்துக் கொள்ளவில்லை. reaction இருந்தது. என் இதயம் நின்றுவிட்டது. என்னைப் பார்க்கும் டாக்டர் அமெரிக்காவிலிருந்து வந்தவர். எலக்ட்ரிக் ஷாக் கொடுத்து நின்ற இதயத்தைச் செயல்படுத்தி விட்டனர். எப்படியோ நான் பிழைத்தேன். 8 ஆம் தேதி angio plasty செய்யப் பட்டது. அது பலன் தராவிட்டால், ஆப்பரேஷன் செய்ய வேண்டும் என்றனர். கடவுள் துணை நின்றார். அது பலித்துவிட்டது. கடவுள் கிருபை யாலும், உங்களைப் போன்றவர் பிரார்த்தனை யாலும் என் உயிர் பிழைத்தது".

"அன்னை எங்கள் வீட்டில் அனைவர் உள்ளத்திலும் குடிகொண்டுள்ளார்கள். 'அமுத சுரபி' வந்தால் தங்கள் கட்டுரையைப் படிப் பேன். அதைக் கேட்டு அன்பர்கள் அனைவரும் அன்னையின் பக்தர்களாகி விட்டார்கள். அத்துடன் தங்களது பிரச்னைகளும் தீர்ந்து போயின என என்னிடம் சொல்வார்கள். அதைக் கேட்கும் பொழுது என் உள்ளம் புளகாங்கிதம் அடையும்".

மாநாடு நடத்திய எழுத்தாள அன்பர் எழுதுவது :

"மிகச் சாதாரணமான என்னை அன்னை புகழின் உச்சிக்கு அழைத்துச் செல்கிறார். நண்பருக்கு மகுடம் சூட்டுகிறார். எனக்கே பிரமிப்பாக இருக்கிறது. இதெல்லாம் 'நாமா' என ஆச்சரியப்படுகின்ற அளவுக்கு, தொட்ட தெல்லாம் வைரமாக ஒளிவீசுகிறது".

"நான் என் கஷ்டங்களை அன்னையிடம் முறையிட்டு, காணிக்கை அனுப்பி மனம் உருகிப் பிரார்த்தனை செய்ததில் அன்னை யின் ஆசி கிடைத்து மனநிம்மதியடைந்தேன்".

"ஒருமுறை 'அமுதசுரபி'யில் அன்னை அவர் களின் கட்டுரையைப் படித்துப் பார்த்தேன். அன்னையின் படம் எனக்குக் கிடைக்க வேண் டும் என மனத்துள் அன்னையை நினைத்து வேண்டிக் கொண்டேன். ஆச்சரியப்படும் வகை யில் 20 நாள்களில் எங்கள் சொந்தக்காரர் ஒருவர் என் வீட்டுக்கு வந்து அன்னை ஸ்ரீ அரவிந்தர் படங்கள் தந்தார்".

"அன்னையின் திருவடிகளுக்கு நமஸ்காரம் செய்து எழுதியது. சென்ற வருடம் ஏப்ரல் மாதத்தில் எனக்கு வயிற்றில் ஆப்பரேஷன் நடை பெற்றது. அது சமயம் Operation Success ஆக வேண்டும் எனத் தங்களைப் பிரார்த்தித்ததன் விளைவாக operation success ஆகியது. அதன் பின் எழுதிய கடிதத்தில் என் தங்கைக்குத் திருமணம் நடக்க வேண்டுமென்றும், என் பெரிய



'கர்மயோகி'

புக்காவின் வீட்டுப் பிரச்னை நல்லபடியாக டியவேண்டும் என்றும் பிரார்த்தித்து முதியிருந்தேன். மேற்படி என் தங்கைக்குத் ருமணமும், அக்கா வீட்டுப் பிரச்னைக்குத் ர்வும் சென்ற பிப்ரவரி 1986 இல் நடந்தன. ான் யாருக்காக மனமுருகிப் பிரார்த்தனை சய்தாலும் அது உடனே நிறைவேறுகிறது".

"என் இரண்டாம் மகன் P.U.C. 76% வாங்கி ாஸ் பண்ணினான். Engg. சேர வேண்டுமென ntrance Exam எழுதினான். எங்களுக்கு வண்டியவர் ஒருவர் கட்டாயம் B.E. சீட் ாங்கித் தருவதாகச் சொன்னார். அதன்படி .Sc. சேர்ந்திருந்த அவன், அங்கிருந்து தன் ர்டிபிகேட் எல்லாம் வாபஸ் வாங்கிவிட்டான். ப்போது B.E. சீட்டும் கிடைக்கவில்லை. பணம் ட்டிச் சேர ரொம்பவும் கேட்கிறார்கள். இத ால் மனத்திற்கு மிகவும் கவலையாகவும், ம்மதியில்லாமலும் இருக்கிறோம். அவனுக்கு E.சீட் கிடைத்து, சேர வேண்டும் என அன்னை டம் கேட்டுக் கொள்கிறேன். அன்னை எங்கள் னக்கவலையைத் தீர்த்து வைப்பார் என்று ம்பிக்கை கொண்டு இந்த letterஐ அவர் ன் சமர்ப்பிக்கின்றேன். என்னாலான இந்தக் ாணிக்கையையும் அனுப்பி வைக்கிறேன்.

By ...."

அன்னையிடம் letter எழுதி வைத்த மறு ாளே அவனுக்கு B.E. Seat கிடைத்துவிட்டது. ணம் கட்டித்தான் சேர்ந்தான்.

"Respected Sir,

I prayed to the Divine Mother for success in e plus two exams conducted by CBSE - New elhi and I got something beyond my wildest spirations For the marks I scored I was warded a scholarship by the Central Board of econdary Education"

"என் கடிதத்தில் முக்கியமாக என்னுடைய ரண்டு புத்திரர்களுக்கும் விவாஹம் முறையே வருஷம், 5 வருஷம் முன் நடந்தது. சந்தான ாக்கியம் ஏற்படவில்லை. நாங்கள் பலவித ான பரிகாரங்களும், தெய்வப் பிரார்த்தனை ளும் செய்தும், வேண்டிய வைத்தியங்களுக்கு றைய செலவு செய்தும்கூட நல்ல பலன் துவும் கிடைக்கவில்லை. ஆயினும் 'அமுத ாபியில் தாங்கள் எழுதிவரும் அன்னையின் ாருணாசியால், பல பேருக்கு இம்மாதிரியான குறைகளுக்கு நல்ல பலன் ஏற்பட்டிருக்கும் கட்டுரைகளையும் படித்து வரும் நான், ஏன் நாமும் இம் முயற்சியைச் செய்து பார்க்கக் கூடாது என, தங்களுக்கு எழுதி 'அன்னை'யிடம் என்ன முறையான தியானம் செய்ய வேண்டும் எனக் கேட்டு எழுதியிருந்தேன். தாங்களும் உடனே விவரமான கடிதம் எழுதியிருந்தீர்கள். அதன்படி என் மூத்த குமாரனும், அவன் மனைவியும், உங்கள் கடிதம் கிடைத்த தினம் முதற்கொண்டு, 'அன்னை'யை மனத்தில் தியானம் செய்து பிரார்த்தனை செய்யத் தொடங்கி விட்டார்கள். மாதம்தோறும் அன்னையின் அருளாசி கோரி ஒரு சிறிய காணிக்கையும் அனுப்பி வருகிறோம். "அன்னை"யின் , அருளாசி அவர்களுக்குக் கிடைத்துவிட்டது. சென்ற 14.10.86 அன்று அவர்கட்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்து விட்டது என்ற சந்தோஷச் செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்".

"அன்னையும், அன்பர்களும் கட்டுரையைப் படித்து அதில் உள்ள ஆசிரம முகவரிக்கு என் எளிய காணிக்கை ரூபாய் ஆறுமட்டும் அனுப்பி வைத்தேன். என் மனத்திலுள்ள கஷ்டங்களை மனதார அன்னையிடம் வேண்டிக் கொண்டேன். தங்களது கட்டுரையில் கண்டபடி அன்பர்கள் அடைந்து வரும் நன்மைகள், அன்னையின் அருளால் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மட்டுமே நான் காணிக்கை அனுப்பி வைத்தேன். ஆனால் SRI அன்னையின் படத்துடன் கூடிய ரோஜா இதழ் பிரசாதம் வரும், தொடர்ந்து இன்று வரை அன்னையால் ஆசி கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. இன்று அன்னை எனக்கு ஆயுள் முழுதும் பாதுகாப்பு, ஆரோக்கியம், வேண்டிய செல்வம் தந்து, என் ஏழைமையைப் போக்குவேன் என்று தனது கருணைமிக்க ஆசியால் என்னை மகிழ்ச்சிக் கடலில் அமைதியாக வாழ்க்கை நடத்த ஆசீர்வாதம் செய்துள்ளார்கள்".

"சில மாதங்கள் முன்பு நான் உங்களிடம் அன்னையின் அருள் கிடைக்கும்படி வேண்டுதல் செய்தேன்.

இப்போது என் கஷ்டங்கள் நீங்கியுள்ளதாக நம்புகிறேன். வெகுநாள்களாக விலகிச் சென்றிருந்த என் திருமணம் இப்போது முடிவு செய்யப்பட்டு நாளை மறுநாள் நடக்க இருக்கிறது".

"புதுவை ஆசிரமத்திற்கு எழுதி வரவழைத்த அன்னையின் திருவுருவப்படத்தை நாங்கள்

எல்லாரும் வணங்கி வருகிறோம். அன்னையின் எல்லையில்லா அருளைப் பெற்ற அன்பர்களின் வரலாறுகளைப் படித்து வருகிறோம். சமீபத்தில் ஒரு சிறிய சிக்கலில் இருந்து விடுபட அன்னையை மிகவும் வேண்டியதில் 24 மணி நேரத்திற்குள் அந்தச் சிக்கல் நிவர்த்தியாயிற்று. அன்னையின் அருளை எண்ணி மெய் சிலிர்க்கிறோம்".

"என்னுடைய ஊருக்கு வந்த பிறகு நாள்தோறும் அலுவலகத்திற்குச் செல்லும் முன்பு அன்னை - அரவிந்தர் உருவப் படத்திற்கு வழிபாடு செய்து வந்தேன். அன்னையின் அருள் விரைந்து செயல்பட்டது. எனது அலுவல கத்தில் மேலதிகாரிகளுக்கும் எனக்கும் இடையே இருந்த மனஸ்தாபமும், கருத்து வேற்றுமையும் நீங்கி சுமுகமான உறவு முகிழ்க்கத் தொடங்கியது.

அதுமட்டுமல்ல. பதவி உயர்வோடு தற்போது எனது அலுவலகத்தில் நான் விரும்பிக் கேட்டிருந்த இடத்திற்கே எனக்கு மாற்றல் கிடைத்துவிட்டது...

நான் எத்தனையோ தெய்வங்களை வேண்டியும், முறையிட்டும் முடிவு காணப் படாத எனது பிரச்னைகளை அன்னையின் அருள் தீர்த்து வைத்தது என்றால் அது மிகையாகாது.

எனது வாழ்க்கையில் நான் கடந்த காலத்தில் இழந்து நின்ற நிம்மதியையும் தேக ஆரோக்கியத்தையும் சிறுகச் சிறுக மீண்டும் பெற்று வருகிறேன்".

"நான் கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு படித்து, பட்டம் பெற்று, வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருந்தபோது, அன்னைக்கு என்னால் முடிந்த ஐந்து ரூபாய் மட்டும் காணிக்கை செலுத்தி மனமுருகப் பிரார்த்தித்தேன். எட்டே நாள்களுக்குள் நான் எந்த வேலையை வேண்டினேனோ அதே வேலை உடனே கிடைத்தது".

"என் கணவர் 32 வருடங்களாக வேலை வாய்ப்பு ஏதுமின்றி இருந்தார். அவரும் அன்னையின் அருளாசி பற்றிக் கேள்விப் பட்டு, சென்ற வருடம் 17.12.85 அன்று தனக்கு ஒரு வேலை கிடைக்கப் பிரார்த்தித்து எழுதி, னார். அன்னையுடைய ஆசீர்வாதத்தால் அவருக்கு 27.1.86 இல் வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் காளையார் கோயில் ஒன்றியத்தில் மேற்பார்வையாளராக பணி நியமனம் கிடைத்தது".

4

நாட்டைப் படித்து விட்டு ஏட்டைப் படித்ததால் என்னுடைய அனுபவ ஞானம் புதுப்போக்கிலே சென்றது. என் இதயத்தில் இருக்கும் ஒலி என்னவென்று எனக்குத் தான் தெரிகிறது.

பாரதியின் மூலம் பழைய இலக்கியங்களை - கம்பனை, வள்ளுவனை, இளங்கோவை அறிந்து கொண்டேன்.

தேசத்தின் பெருமைகளையெல்லாம் 'சரித்திரம்' என்று ஒரு பாடத்தில் படித்துக் கேட்டுக் கொண்டிருப்பதைவிட, அவன் பாடியிருக்கின்ற 'ஹிந்துஸ்தானம்' - எங்கள் நாடு; எங்கள் தேசம்; எங்கள் தாய், என்ற தலைப்பிலே பாடுவான். அவற்றில் அவ்வளவு செய்திகளையும் குவித்திருக்கிறான். அந்தப் பாடல்களே - பள்ளியில் படிக்கிற சரித்திரத்தை மிகுதியாக - தேச பக்தியைப் போதிக்கின்றன.

இந்தியாவின் சரித்திரப் பெருமைக்குரிய நாயக - நாயகியர் யார் யாரோ - அந்தக் கதை முழுவதும் பாடங்களில் வரவில்லையானாலும், அவற்றைப் படித்துக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தை அவை எனக்கு ஏற்படுத்தின.

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே...' என்று தொடங்கி, 'வந்தே மாதரம்... வந்தே மாதரம்! என்று வணங்கேனோ?' என்று பாடல்களை முடிக்கிறான். இதல்லவோ, சரித்திரப் பாடம்?

அந்தப் பாடல்களையெல்லாம் படிக்கின்றபொழுது சரித்திரம் மறைமுகமாகவும் சுருக்கமாகவும் நமக்குப் போதிக்கப்படுகிறது.

எப்படி அவன் சரித்திரத்தைப் போதிக்கின்றானோ, அதே போன்று 'வடக்கிலே இமயமலை பாப்பா - தெற்கில் வாழும் குமரி முனை பாப்பா - கிடக்கும் பெரிய கடல் கண்டாய்; அது கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா' என்ற பாடலில் பூகோளத்தையும் போதிக்கிறான்.

இந்த எல்லைகள் பற்றி நான் முதலில் பயின்றது பாரதியிடந்தான். ஒரு குழந்தைக்கு பூகோளப் படத்தைப் போட்டு இதுதான் இந்தியா என்று காட்டுவதைவிட, இரண்டு வரிகளை நினைப்பிலே ஊன்றியிருக்கிறான்.

'ஜாதிகள் இல்லையடி பாப்பா; குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்று பாடுகிறான். பாரதி மீது பக்தியோடு படிக்கும்போது பாப்பாவின் மனத்தில், ஜாதி எதிர்ப்புணர்ச்சி பதிந்து விடுகிறது.

'என் இலக்கிய வாழ்க்கை'

சிலம்புச் செல்வர்
ம.பொ.சி



இந்தப் பாடலில் வேண்டுமென்றே 'தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்தம்' - தமிழ் மகள் என்றாலே அவ்வைதான்! அங்கே அவ்வையார் பெயரைச் சொல்லவில்லை. 'தமிழ் மகள்' எனச் சுட்டிச் சொல்லியிருக்கிறான்.

சமூக சீர்திருத்த இயக்கத்தைப் பெரியார் வளர்த்தார்; அண்ணா வளர்த்தார் என்பார்கள். என்னைக் கேட்டால் - இராமலிங்கரும் பாரதியும் என்பேன். அவை இசைப் பாடலாக - பழகு தமிழிலே இலக்கிய நயம் கொண்டதாக - இருக்கின்றன.

சந்தி இருக்கிறதே அது பெரும் சங்கடத்தைச் செய்கிறது, என் மாதிரி ஆட்களுக்கு. பாரதி, சந்தி பிரித்துப் பாடியிருப்பதால் எளிதில் பொருளுணர முடிகிறது.

ஒருமுறை சந்தி பிரித்து சிலப்பதிகாரத்தை, மணிமேகலையை வெளியிட்டார்கள். சந்தி இருப்பதால் நிறையப் பேர் பழைய இலக்கியங்களைப் படிக்க முடியாமல் போய்விட்டது.

பாரதி செய்த பெரும் தொண்டு, பாடும்போதே சந்தி பிரித்துப் பாடிவிட்டார்; பாட்டை எழுதும்போதே சந்தி பிரித்து பழகு தமிழில் எழுதியிருக்கிறார்.

அதனால், கொச்சைத் தமிழில் எழுதியிருக்கிறார் என்று அர்த்தமில்லை. பழகு தமிழில் எழுதினார். அது என்னைப் பெரிதும் கவர்ந்தது; பொருள் புரிந்து கொண்டேன்; மனத்தில் பதிந்தது.

இந்தக் காரணங்களால் பாரதிதான் என்னைத் தமிழ்ப் பூங்காவில் உலாப் போகச் செய்தான். பண்டைய சங்க காலப் புலவர்களிடமும் உலாப் போகச் செய்தான்.

விடுதலைப் போரில் நாங்கள் சிறையில் அடைபட்டிருப்போம். காலையில் எங்களை அறையிலிருந்து திறந்துவிட்ட உடனேயே எல்லாரும் சேர்ந்து பாரதி பாடலைப் பாடுவோம், தேச பக்திப் பாடல்களைப் பாடுவோம். அதுதான் தெய்வ பக்தி; தேச பக்தி.

பிறகு மாலையிலே அறைகளுக்குக் கொண்டு போய்

ிரவில் தூக்கம் வரும்வரை - அப்போது இலக்கியப் பாடல்கள்; ங்கப் பாடல்கள் - ஒன்றும் தெரியாது. தூக்கம் வரும்வரை பாரதி பாடல்களைத்தான் பாடிக் கொண்டிருப்போம்.

ஒவ்வோர் அறையிலும் எல் ாரும் பாடுவார்கள். அந்தக் ாட்சியை இப்போது நினைத்துப் பார்த்தாலும் காதில் ஒலிக்கிறது.

ஒவ்வோர் அறையிலும் தூய ுள்ளம் படைத்தவர் - 'சி' வகுப் பிறகு வருபவர்கள் - பரம தரித்தி ர்கள்தானே? பரம தரித்திரர்கள் அவன் தரித்திரத்திலேயும் அவன் வாழ்வை விட தேச விடு லை பெரிது என்று எண்ணிச் சிறைக்கு வந்த அந்தத் தியாக ாணிக்கங்கள் - தனித் தனியே அறையிலிருந்து பாடிய அந்த ஒலியில் பாரதியைப் பார்த்தேன்.

நெல்லையிலிருந்து வந்த ஒருவர். 'போலீஸ் புலி கூட்டம்; ம் மேல் போட்டு வருகுது பார் ண்ணோட்டம்' என்று பாடுவார். அது பாரதி பாடல் அல்ல; யாரோ பாடியது.

பாரதி பாடல்கள் மட்டுமல்ல; இப்படி சாதாரணமானவர்கள் னைந்த சில பாடல்கள்கூட ாட்டில் பரவியிருந்தன. தேச க்திப் பாடல்களைவிட, கவி ாஸ்கரதாஸ் போன்று நாடகங் ளுக்குப் பாட்டு எழுதியவர்கள் நிறைய இருந்தார்கள்.

'கொக்கு பறக்குதடி பாப்பா' என்று தொடங்கி, 'அந்த பரங்கிக் கொக்கு', 'இந்த பரங்கிக் கொக்கு' என்று வெள்ளையரைத் தூஷித்து, நாடக மேடையில் பாடுவார்கள். அந்த மாதிரி பாடல்களைப் பாடியதற்குக் கூட சிறை புகுந்து ல்ல பெயரெடுத்தார்கள் என்று சொல்லலாம்.

பாரதி பாடல்களால் சரித்திரச் செய்திகள் எனக்குக் கிடைத்தன. பின்னாளில் சரித்திர நூல்களைப் படித்தேன்.

முன்னாள் பாரதப் பிரதமர் ஆர். வெங்கட்ராமன், ஒரு சமயம் சரித்திரத்தை நூற்றாண்டு' நூற் ாண்டாகப் பிரித்துப் போட வேண்டும். 17 ஆம் நூற்றாண் டிலே - 18 ஆம் நூற்றாண்டிலே என்று போட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

எந்த எண்ணத்தில் அவர் அப்படிச் சொன்னார் என்று எனக்கு விளங்கவில்லை. ஆனால் பொதுப்படையாக நம்முடைய சரித்திர நூல்கள் திருத்தி அமைக் கப்பட வேண்டும்.

இப்போது சரித்திரமும் எனக்கு இலக்கியமாகி விட்டது. 'இலக் கியம்' என்பதிலே, கற்பனைகள் நிறையக் கலந்து, சரித்திரச் செய்திகள் குறைவாக இருக்கும். உரைநடையில் எழுதப்பட்ட சரித் திர நூல்கள் இருக்கின்றனவே, - அந்தச் சரித்திர நூல்கள், எனக்கு இலக்கியச் சுவையைத் தரு கின்றன.

சரித்திரம் படிக்கிறோம்; பிரெஞ்சுக்காரனுக்கும், பிரிட்டிஷ் காரனுக்கும் சண்டை, இந்தியா வில்! அதில் இந்தியர்கள் இரண்டு பக்கமும் அணி பிரிந்து சோல்ஜர் களாக இருந்து இருக்கிறார்கள்.

அப்பொழுது வெள்ளைக் காரர்கள் எழுதினார்கள். 'நொய்க் கஞ்சி காய்ச்சினால், நொய் அரிசியை எங்களுக்குக் கொடுத்து விட்டு வெறும் கஞ்சித் தண்ணியை மட்டும் இந்தியர்கள் குடித்து எங்களுக்காக உயிர் விட்டார்கள்' என்று சொல்கிறார்கள். இது பாராட்டுக்குரியதல்ல.

'இரண்டு பேருமே திருட்டுப் பசங்கடா, ஓடிப் போங்கடா, என்று எண்ணத் தோணலையே நம் மக்களுக்கு, என்று அந்தப் பாடத்தைப் படிக்கின்றபோது தோன்றும்.

நான் பாரதி பாட்டைப் படித்து தேச பக்தனாகி - பருவமடைந்த பின்னர்தான் - திரும்பவும் சொல் கிறேன், 'நாட்டைப் படித்து விட்டு பின் ஏட்டைப் படித்தவன்' என்று.

சரித்திரத்திலே எனக்குப் புதிய ஒளி பிறந்தது. சரித்திராசிரி யர்களுக்குப் புரியாத உண்மைகள் புரிந்தன. ஒரு சான்று சொல் கிறேன்.

சரித்திர ஆசிரியர்கள் எல்லாரும் கட்டபொம்மனை,. 'கொள்ளைக்காரன்'. 'கொலை காரன்' என்று எழுதியிருந்தார்கள். முதலில் வரலாறு எழுதத் வெள்ளைக்காரர்கள். பின்னர் அவர்கள் புளுகியதையே நம்மவர் களும் புளுகினார்கள்.

எனக்கு என்ன தோன்றியது? ஒரு வெள்ளைக்காரன், அவர்கள் ஆட்சியை எதிர்த்தவனை, எப்படி உண்மையாக எழுதியிருப்பான்? என்று தோன்றியது.

எப்படியோ பிரிட்டிஷ்காரனை எதிர்த்திருக்கிறான்; பாஞ்சால ஆட்சியை இழந்திருக்கிறான்; தூக்கில் போடப்பட்டிருக்கிறான். தூக்கில் ஏறியவன் இந்தியன் - குறு நில மன்னன்; தூக்கில் ஏற்றியவன் கிழக்கிந்தியக் கம்பெனிக்காரன்.

ஆக, ஏறியவனுக்கும் ஏற்றியவ னுக்கும் உள்ள தேச வேற்றுமை, இன வேற்றுமை. அந்தக் காலத் தில் நாட்டில் ஆங்காங்கு நடந்தது - அது மன்னர் சகாப்தமாக இருந் தது - சிப்பாய்ப் புரட்சி!

நான் 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற நூலில் அப்படித் தான் மன்னர் சகாப்தம் - திலகர் சகாப்தம் - காந்தி சகாப்தம் என்று மூன்று சகாப்தங்களாகப் பிரித்து எழுதினேன்.

அந்த நிலையை வைத்துப் பார்க்கின்றபோது இதைப் பற்றிய உண்மையை ஆராய வேண்டும் என்று - ஆர்ம் என்பவன் ஆறு வால் யூம்கள் எழுதியிருக்கிறான் - பெரிய புத்தகங்கள் அவை. எனக்கு ஆங்கில ஞானம் சொற்பம்தான் உண்டு. அந்தச் சொற்ப ஞானத்தை வைத்துக் கொண்டு - அந்தப் புத்தகங்களையெல்லாம் படித்தேன். அதையெல்லாம் பார்த்த பிறகுதான் - கட்ட பொம் மன் உண்மையில் கொள்ளைக் காரன் அல்லன்; அந்த மாதிரி வர்ணம் தீட்டி வெள்ளையர்கள் பழி சுமத்தினார்கள், அவன் பெயரில், என்று புரிந்தது.

அதில் வெற்றியும் அடைந்து விட்டேன். மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டு விட்டது. 'விடுதலைப் போரின் நூற்றாண்டு' என்று ஒரு டாக்குமெண்டரி படம் மத்திய அரசினர் தயாரித்தார்கள். அதில் முதலில் கட்டபொம்மனை விட்டு விட்டார்கள், பாரதியை மட்டும் சேர்த்திருந்தார்கள்.

→

நான் டில்லிக்குப் போய் இது
ஷியமாக சண்டை போட்டு
அதில் கட்டபொம்மனைச் சேர்க்
ம்படி செய்தேன். அதிலிருந்து
பார்த்தால், சரித்திரம் எனக்கு
இப்போது இலக்கியமாகி விட்டது
என்பேன்.

தமிழகச் சரித்திரத்தில் நான் எத்தனையோ மாற்றங்களைக் கொண்டு வந்தேன். அதில் கட்டபொம்மன் பகுதி பெரிதும் முக்கியம்.

சிதம்பரம் பிள்ளை எவ்வளவு முக்கியமானவராக இருந்தாலும் - இரண்டு ஆயுள் தண்டனை அடைந்தவர் அவர் - அவரைக் கூட இந்த நாடு பல ஆண்டு காலம் போற்றவில்லை; புறக்கணித்து விட்டது. என்ன காரணமோ?

என் சாதனைகளால் - பாரதி எனக்குச் சரித்திர ஆசிரியன்; தாசிரியன்; கவிதை ஆசிரியன்; தேச பக்தியைப் போதித்த ஆசான் - இத்தனையுமாக பாரதி எனக்குப் பயன்பட்டான்.

பாரதி பக்தர்கள் எல்லாருக்கும் அப்படித்தான் பயன்பட்டானா? பாரதியைப் படித்தவர்களெல் லாம் ஏன் சிவஞானம் ஆகவில்லை? இதற்கு பதில் சொல்வதற்கில்லை. என் அதிர்ஷ்டம். பாரதி மூலம் நான் எல்லாச் சிறைகளிலும் புகுந்தேன்.

இதுவரை நான் 148 நூல்களை எழுதினேன். அதிலே 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' - இராம லிங்க சுவாமியைப் பற்றியது - ஒன்று. இதிலும் திரும்பவும் சொல் கிறேன். பாரதிதான் எனக்கு ஆசான். பாரதி எழுதிய கட்டுரை யொன்றில், 'இந்தப் பூவுலகில் ஒரு புரட்சி எழப்போகிறது. அதற்கு இந்தியா தலைமை தாங்கும்; தமிழ்நாடு வழிகாட்டப் போகிறது. எங்ஙனமெனில் எம் மதமும் சம்மதம் என்று இராம லிங்க சுவாமிகள் தோன்றியதே அன்று!' என்று.


வேனிலே! வா!

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

சித்திரையே! சித்திரையே! வா, வா! உன்றன்
சிங்காரத் தூரிகையால் உலகை மாற்று.
நித்திரைக்கே தூபமிடும் – பனிமுட் டத்தை
நெருப்பிலிடு! சுறுசுறுப்பை நெஞ்சில் ஏற்று.
முத்து முத்தாய்ச் சோலைவனச் செடிகள் எல்லாம்
முகச்சிரிப்பை உதிர்ப்பதற்கே வரங்கள் காட்டு.
தித்திக்கும் கனிவகையைப் பலாவை, மாவை
'சீர்வரிசை'ப் படையலிடு! பசிப்பேய் ஓட்டு.

கொதிக்கின்ற பரிதிக்கு மேலும் மேலும்
கோபத்தை மூட்டுவதேன்? ஓ, ஓ! ஆழி
கொதிக்கவைத்துப் புகைமுகிலை உருவாய் ஆக்கிக்
குளிர்மழையால் பயிரெல்லாம் செழிக்கத் தானா?
அதிசயந்தான், உவர்நீரைச் சுவைநீ ராக்கும்
அற்புதங்கள் நிகழ்த்துகின்றாய்; நன்றி. ஆனால்
புதிரென்ன? நீபடைத்த மேகக் கூட்டம்
பொய்ப்பதும் ஏன் பருவமழை? நீதி தானா?

பழுத்தஇலை உடைஇழந்த மரங்க ளுக்கும்
பச்சைவண்ணப் பட்டாடை போர்த்து. 'பாழும்
எழுத்துவிதி மாறாதா?' என்றே தேம்பும்
இளைஞருக்கே நம்பிக்கை உரத்தை ஊட்டு.
கழுத்துயர்த்திப் பார்க்கின்ற இமயம் கூட
கரையட்டும் உன்னாலே – ஆறா கட்டும்.
கொழுத்தசில கோமான்கள் செல்வம் ஓடி
குப்பன்களும் வளமைபெற வழிகள் தீட்டு.



அறவுரையும், அறிவுரையும்

"புல், பூண்டு, செடி, கொடி, மரம் - இவற்றைத் 'தாவரம்' என்னும் ஒரே சொல்லில் அடக்கிவிடலாம்.

உலகத்தைப் படைத்த இறைவன் - உயிரினங்களைப் படைத்த இறைவன், உயிர் கொடுத்த இறைவன் அவை வாழ உணவு கொடுக்க வேண்டாமா? இயங்கு உயிர்கள் வாழ உணவாகப் படைக்கப்பட்டவையே புல், பூண்டு, செடி, கொடி, மரம் - தாவரம். இறைவன் உயிரினங்கள் வாழத் தந்த வரம் - தாவரம்.

இயங்கு உயிரினங்கள் அனைத்தும், இப் பூவுலகத்தில் பிறந்துவிட்டதும் தம் உயிர் வாழ்க்கைக்கு உணவைத்தானே நாடி நிற்கின்றன! உணவைத் தேடித் தேடித்தானே இறுதிவரை உழைத்துக் கொண்டிருக்கின்றன! போராடிக் கொண்டிருக்கின்றன! எத்தனையோ வகைகளில் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன! உழைப்பதெல்லாம் இவ்வுலகில் உயிர்தாங்கி வாழ்வதற்கு வேண்டிய உணவுக்குத்தானே!

பிறரை வணங்குவதும், கெஞ்சிக் கேட்பதும், திரைகடல் ஓடித் திரவியம் தேடுவதும், பிறரைப் பெரியவராகப் பாவித்துப் போற்றுவதும், செல்வரைப் புகழ்ந்து பாட்டுப் பாடுவதும், பூமியை ஆளுவதும், பாழாய்ப்போன இந்த உடலை வளர்ப்பதற்கு வேண்டிய வயிற்றுணவுக்குத் தேவையான ஒரு நாழி அரிசிக்குத்தானே, வீணிலே உழல்கிறோம்!

"சேவித்தும், சென்றுஇரந்தும் தெண்ணீர்க்
கடல்கடந்தும்
பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும்
-போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்".

(பாவித்தும் - பிறரைப் பெரியவர்களாகப் பாவித்துப் போற்றியும்; போவிப்பம் - உழல்கின்றோம் - செலுத்துகின்றோம்.)

அப்பப்பா, துன்பம் தரும் இந்த வயிறு, ஒரு நாளைக்குப் பட்டினி கிட என்றால் ஏற்கிறதா? உணவு நிறையக் கிடைக்கின்ற போது இரண்டு நாள்களுக்குச் சேர்த்து வைத்துக் கொள் என்றால் இணங்குகிறதா? நான் படும் வேதனையை ஒருநாளும் புரிந்து கொள்ளாத இந்தப் பொல்லாத வயிற்றை வைத்துக் கொண்டு உயிர் வாழ்வது தொல்லையாக இருக்கிறதே?

"ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளைக்கு ஏல்என்றால் ஏலாய்-ஒருநாளும்
என்நோய் அறியா இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது".

(இடும்பை - துன்பம், ஏல் - ஏற்றுக்கொள்.)

டாக்டர்
தி. முத்து கண்ணப்பர்



எனவே, உயிர் வாழ்வதற்கு இன்றியமை யாததே உணவுதான். அத்தகைய சிறப்பு வாய்ந்த உணவைக் கொடுப்பவை புல், பூண்டு, செடி, கொடி, மரம் – தாவரம்தானே?

'நாங்கள் இவ்வுலகில் வாழ்வதற்கு வேண் டிய உணவாகிய வரத்தைத் தா!' என்று தாவ ரத்தை உயிரினங்கள் வேண்டி நிற்கின்றன. (தா வரம்!) என்று கூறுவதும் பொருந்துமல்லவா?

தாவரத்தின் பெருந் தொகுதிதானே காடு? காடுகள் இன்றேல் மழையேது? மழையின்றேல் நீரில்லை; நீரின்றேல் உயிரினங்கள் வாழுமோ?

எனவே, மழையின் முக்கியத்தைப் பற்றி வள்ளுவர் 'தானே உயிர்களுக்கு உணவாக இருப்பதும், வேண்டிய உணவைப் படைத்துத் தருவதும் மழை'

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி; துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை'

என்று கூறுவது தாவரத்துக்கும் பெரிதும் பொருந்துமல்லவா?

(துப்பார்க்கு – உண்பவருக்கு; துப்பாய துப் பாக்கி – (உண்பார்க்கு) நல் உணவுகளை உண் டாக்கி, துப்பார்க்கு – உண்பவர்களுக்கு, துப் பாயதும் – தானே உணவாகப் பயன்படுவதும்)

தாவரம் உணவு மட்டும்தானா தருகின்றது, மணம் தருகின்றது; பூத்துக் குலுங்கி நின்று காண்பதற்கு எழில் மிகு காட்சி தருகின்றது. சிலவகை இலைகளையும் மலர்களையும் தொட்டால், உடல் இன்பத்தால் புளகாங்கிதம் கொள்கிறது. இலைகளினூடே காற்றுப் புகுந்து வீசும்போது எழும் அந்தச் சலசலப்பு ஓசை செவிக்கு இன்பம் தருகின்றது.

ஒரு காதலன் கண்டும், கேட்டும், உண்டு சுவைத்தும், மோந்தும், தொட்டும் பெறும் ஐவகை இன்பங்களையும் ஒருங்கே தன் அருமைக் காதலியிடம் பெறுகிறான்.

"கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள."

(ஐம்புலனும் – ஐம்புலன்கள் வழிப் பெறும் இன்பமும், ஒண்டொடி – ஒளிமிக்க வளை யல்கள் அணிந்த நங்கை.)

என்று வள்ளுவர், தன் காதலியின்பால் காத லன் பெறுவதாகக் கூறும் அத்தகு ஒருங் கிணைந்த ஐம்புல இன்பங்களையும் செடி கொடி மரங்களும் நமக்குத் தருகின்றனவே."

இவ்வாறெல்லாம் எண்ணமிட்டவாறே, ஒரு குளிர்ந்த மரநிழலில் அமர்ந்திருந்தார், ஒரு நாள், நம் அவ்வை அன்னையார். வெளியே கோடைக்காற்று வெப்பத்தை வாரி வீசிக் கொண்டிருந்தது.

"இந்தக் கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைக் கிடைத்த குளிர் மரம்; மர நிழல்... இந்த நிழல் எவ்வளவு இன்பமாய் இருக்கிறது!

மரங்கள் தியாகத்தின் முழு உருவங்கள். நிழல் தந்து, மலர் தந்து, மணம் தந்து, காய் தந்து, கனி தந்து, தம் இலை தழைகளையும் கூட உணவாகத் தந்து காக்கின்றனவே! உணவுக்குப் பின் மக்களுக்குத் தேவை உறையுள் – தங்கி வாழ இருப்பிடம் – வீடு. அந்த வீட்டுக் கூரையாகவும், கதவு, பலகணி, கட்டில், நாற்காலி முதலியவற்றுக்கான பலகை களுக்குத் தம் கிளைகளையும், அடிமரம், துண்டுப் பகுதிகளையும் தருகின்றன. இலை களையும், வேர்களையும், பட்டைகளையும் பிணி நீக்கு மருந்தாக அளிக்கின்றனவே! ஏன் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத பிராண வாயுவையும் அல்லவா தருகின்றன! தீ மூட்ட விறகாகின்றன. பசுமையோடு உயிர் கொண் டிருந்தும் உதவுகின்றன. செத்தும் உதவு கின்றன. சுருங்கக் கூறின் அடி முதல் முடி வரை அனைத்தையுமே தந்துதவுகின்றன. உலக உயிரினங்களின் வாழ்க்கைக்குத் தம்மை முழுவதுமாகக் கொடுத்து விடுகின்றனவே! ஆதலின் இம் மரம், செடி கொடிகளை தியாக ஜீவன்கள் என்று கூறுவது மிகையாகா தல்லவா?

→

ஆனால், இந்த மரம், செடி, கொடிகளுக்கு விலங்கினம் இழைக்கும் கொடுமை அளவற்றது. அவை வேண்டிய அளவு இலைகளையும், தழைகளையும் மட்டும் தின்று விட்டுவைப்பதில்லையே, கிளைகளை முறித்து, தண்டுகளையும் அடிமரங்களையும் இறுகப் பற்றி இழுத்து உடைத்து அடியோடு அழித்துவிடுகின்றனவே! ஐயறிவு படைத்த விலங்கினங்களை விட இவற்றுக்குப் பெருந்தீங்கு விளைப்பவர் ஆறறிவு படைத்த மனிதர்களே என்பதை நினைக்க நினைக்க நெஞ்சம் குமுறுகிறதே! தேவைக்கேற்பக் கிளைகளையும்,, தழைகளையும் மட்டும் பதமாக உடைத்தோ, வெட்டியோ பயன்படுத்திக் கொண்டால் அவை மீண்டும் உயிர் கொண்டு வாழ்ந்து, மேலும் மேலும் வேண்டியவற்றைத் தந்து உதவிக் கொண்டிருக்குமே! ஈவு இரக்கமில்லாமல் அடியோடு வெட்டிக் கொன்று விடுகிறார்களே, அந்தக் கொடுமையை எவ்வாறு கூறுவது?

ஆனால், அம் மனிதப் பதர்கள் செய்யும் கொடுமையைப் பொருட்படுத்துவதில்லை. அம் மரங்கள் அவற்றை வெட்டிச் சாய்த்துக் கொல்லும் வரை, அவ்வாறு கொடுமை செய்பவருக்கும், கொடிய வெயிலை மறைத்துத் தம் நிழல் தந்து காத்தும், பிற வகைகளிலும் உதவுகின்றனவே. ஆ, ஆ..! என்னே இவற்றின் தியாக வாழ்வு! என்று மேலும் ஆழ்ந்து சிந்தித்து வியப்பில் ஆழ்ந்திருந்த அவ்வை அன்னையின் முகத்தில், ஏதோ அரிய கருத்து ஒன்றைக் கண்டது போன்ற புன்முறுவல் தோன்றியது.

"ஆம், தியாக ஜீவன்களாகிய இம் மரங்களைப்போல், அறிவுடைய பெருமக்கள் - நல்லவர்கள், பிறர் தமக்கு எவ்வளவுதான் கொடுமைகளும், வேதனைகளும், தீமைகளும் செய்தாலும் அவற்றைச் சிறிதும் எண்ணாமல் - பொருட்படுத்தாமல் அவர்களுக்குத் தாம் இவ்வுலகில் வாழும் வரை, தம்மால் ஆன உதவிகளைத் தொடர்ந்து செய்து காப்பாற்றுவார்கள்.

அந்தக் கருத்தினைத்தான் இம்மரம் நினைவுறுத்துகிறது" என்று மெல்லப் பேசிக் கொண்டார்.

பின்னர், இக் கருத்தினை ஒரு கவிதையாகவே பாடி விட்டார் நம் பெருமாட்டியார். அதுதான்,

"சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். (மூதுரை - 30)

என்னும் பாடல்.


(சாந்தனையும் - சாகும்வரை, தாம்; அவரை ஆம்தனையும் காப்பர் - அவர்கள் (அறிவுடைய பெரியோர்கள்) தமக்குத் தீமை செய்தவர்களுக்குத் தம்மால் முடிந்தவரை உதவி செய்து, காப்பாற்றுவர். மாந்தர் - மனிதர்கள், குறைக்கும் தனையும் (மரங்கள் தம்மை) வெட்டிச் சாய்த்துக் கொல்லும் வரையிலும்)

அபிராமி அந்தாதி

தேவகி முத்தையா


22. கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே பனிமால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்திங்கு இனிப் பிறவாமல் வந்தாண்டு
கொள்ளே.

மென்மையான இளவஞ்சிக்கொடி போன்றவளே, அபிராமி! மென்மைமிகு கொடியாய் இருப்பினும் கொடிக்கு மேன்மையான பற்றுக்கோடாகவுள்ள கொம்பாயும் இருப்பவளே... அடியனாகிய எனக்குப் பக்குவம் இல்லா விடினும் பழுத்திட அருள் செய்தவளே! வேதங்களின் நறுமணமானவளே! பனிபடர்ந்த குளிர்ச்சி பொருந்திய இமயமலையின் (இமவானின்) மகளாகப் பிறந்து பெண்யானை போல் கம்பீரப் பொலிவு மிக்கவளே! பிரமன் முதலாகிய தேவர்களைப் பெற்றெடுத்த அன்னையே! அடியேன் இப்பிறவி முடித்து, இனி இவ்வுலகில் மீண்டும் பிறவாதவாறு எனை ஆட்கொண்டு அருள்வாயாக.



23. கொள்ளேன் மனத்தில் நின் கோலமல்லாது; அன்பர்
கூட்டந்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே! உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே! அளியவென் கண்மணியே!

எனது உள்ளத்தில், அன்பிற்கும் அருமைக்கும் உரியதாகிய உனது திருவுருவக்கோலம் அன்றிப் பிறிதொன்றையும் உட்கொள்ளேன்! உன் அடியார் கூட்டத்தை விட்டுச் சிறிதும் அகலேன்! வேறு சமய நெறிகளை விரும்பேன்! பரந்த மூவுலகிற்கும் உள்ளே உறையும் முலப்



பொருளே! அவையனைத்தையும் கடந்து நிற்கும் வெளிப்பொருளே! என் உள்ளத்தில் விளைந்த ஆனந்தமாகிய தேனே... அவ் வானந்தத் தேனை உண்டதால் விளையும் மகிழ்ச்சியாயும் இருப்பவளே... எளியேனது கண்ணின் மணியாகத் திகழ்ந்து அருள் புரிபவளே!

24. மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே!

சிவந்த நிறமும் ஜோதியும் படைத்த மாணிக்க மணியானவளே! அம்மாணிக்கத்தின் ஒளியாகக் - காந்தியாக இருப்பவளே... ஒளி பொருந்திய மாணிக்க மணிகள் கோக்கப்பட்ட அணியே! அணியும் அணிக்கு அழகினைத் தருபவளே... உன்னைப் புகல் அடையாத வர்க்குப் பிறவிப் பிணியைத் தோற்றுவித்து, உன்னைப் புகல் அடைந்ததும் அப்பிறவிப் பிணியைப் போக்கவல்ல மருந்தாக இருப் பவளே! விண்ணவர்க்குப் புதுமைகளைக் காட்டிய விருந்தானவளே... நினது திருவடித் தாமரைகளை வணங்கிய பிறகு வேறு ஒரு வரையும் வணங்க மாட்டேன்.

25. பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே இனி உன்னையான் மறவாமல்நின் றேத்துவனே.

உன் அடியவர்களின் பின்னே சென்று வழிபாடு செய்து, பிறவிப் பிணியை அறுக்கும் வழியினை முயன்று தவம் செய்து அடைந் தேன். பிரம்மன், விஷ்ணு, ருத்திரன் என்ற மும் மூர்த்திகளுக்கும் தாயானவளே! இவ்வுலகில் உள்ள அனைவர்க்கும் அபிராமி எனும் பெயருடன் கூடிப் பிறவிப் பிணி தீர்க்கும் அரு மருந்தானவளே! எனக்கு இவ்வுலக வாழ்வில் உன் அடியாரைப் பேணுதலும், பிறப்பறுக்கும் நிலையைத் தரும் உன்னை ஏத்துதலும் அன்றி வேறு என்ன பேறு இருக்கிறது? இப்பிறவி யில் உன் மீது கொண்ட பக்தி சற்றேனும் குறையாது, அசையாது, திசை மாறாதிருக்க உன்னைப் போற்றிப் புகழ்ந்து வாழ்வேன்.

26. ஏத்தும் அடியவர் ஈரேழ் உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே மணம்நாறும்நின்
தாள்இணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே.

உன்னை ஏத்தும் அடியவர்கள் யாரெனில் பதினான்கு உலகினையும் படைத்தும், காத்தும், அழித்தும் செயற்படும் மும்மூர்த்திகள் ஆவர். மணம் பொருந்திய கடம்பமலரினை அணிகின்ற அபிராமியே... உயர்ந்த வேதங்களும் பல சிறந்த அடியவர்களின் தோத்திரங்களும் தொடர்ந்து புகழ்மாலை சூடியதால் நறுமணம் கமழும் நின் திருவடித் தாமரைகளில் எளியனான எனது இவ்வந்தாதி ஏற்றுக் கொள்ளப் பெறுவது சிரிப்பிற்குரியதாகும்!

27. உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்மபதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின்
அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே.

வஞ்சனையுடன் கூடிய இப்பிறவி எனும் தளையினைத் தகர்த்துவிட்டாய். என் உள்ளம் கசிந்து உருகும் அன்பினைத் தோற்று வித்தாய். உனது திருவடித் தாமரைகளை என் சிரமேல் சூட்டிக் கொள்வதே எனது பணியாக என்னிடம் ஒப்படைத்தாய். என் மனத்தில் உள்ள தூசியையும் மாசினையும் உனது அருளாகிய புனித நீரால் போக்கி மனம் முழுவதையும் தூய்மை மயமாக்கினாய். பேரழகு பொருந்தி யவளே! இவ்வாறு எல்லா வகையிலும் அருள் பாலித்த நின் பெருங்கருணையை என்ன வென்று எந்தச் சொற்களால் வருணிப்பேன்!

28. சொல்லும் பொருளும் எனநடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே! நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

சொல்லும் அதன் பொருளும் எவ்வாறு பிரிவின்றி இரண்டற்ற ஒன்றாய்த் திகழ்கின் றனவோ, அவ்வாறே நடனமாடும் உன் துணைவரான நடராஜப் பெருமானிடமிருந்து எப்பொழுதும் பிரிவின்றி உடனிருந்து தழுவி நிற்கும் மணம் கமழும் பூங்கொடி போன்றவளே! புத்தம் புது மலரைப் போன்ற உன்னுடைய திருவடிகளை இரவும் பகலும் தொழுவோர்க்கு அழிவில்லாத அரச போகமும், நற்பயனைத் தரவல்ல தவநெறியும், வீடு பேறான சிவ லோகமும் விரைவில் கிட்டும்.

29. சித்தியும் சித்திதரும் தெய்வமாகித் திகழும்பர
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

அஷ்டமா சித்திகளாக இருப்பவள் திரிபுர சுந்தரியான நீயே! அச்சித்திகளின் வடிவில் திகழ்ந்து அருள் செய்யும் பராசக்தியும் நீயே! சக்தி தழைத்தோங்க ஏதுவாக இருக்கும் பர சிவமும் நீயே! தவத்தை முயன்று கடைப்



ராகம் : ஸஹானா　　　　தாளம் : ஆதி



அயோத்யா ராமன்

பல்லவி

உனக்கென்றொரு கோயில் வேண்டுமா ராமா?
உனக்கென்றொரு கோயில் வேண்டுமா? - எம்
உள்ளமெனும் கோயில் வந்தமர்ந்தாட் கொண்ட (உனக்கென்று)

அனுபல்லவி

தனக்கென்றே தந்தை தந்த தரணிதனைத்
தம்பிக்கீந்து மனம் உவந்து வனம் புகுந்த (உனக்கென்று)

சரணம்

போர் எதுவும் தீண்டாப் புண்ய அயோத்தியில்
பார் அதிர மதங்கள் மூட்டிய பெருந்தீ
அணைந்திடவே அன்பு தழைத்திடவே - உந்தன்
கணை மறந்து கருணை மழையெனவே வருவாய் (உனக்கென்று)



ஸுஜாதா விஜயராகவன்

பிடிப்போர் அடையும் முக்தியாக இருப்பவளும் நீயே! அந்த முக்திக்கு வித்தாக, விதையாக இருப்பவளும் நீயே! அம் முக்திக்கு மூலமான விதையினின்று முளைத்து எழும் மெய்ஞ்ஞானமாகிய புத்தியும் நீயே! அப்புத்தியின் உள்ளேநின்று, காக்கும் அருட்சக்தியும் நீயே!

30. அன்றே தடுத்தென்னை ஆண்டு கொண்டாய்
　　　　　　　　கொண்டதல்ல வென்கை
நன்றே உனக்கு இனிநான் என்செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின்திருவுளமே
ஒன்றே! பலவுருவே! அருவே! என் உமையவளே!

முன்பே என்னைத் தடுத்து ஆண்டு கொண்டருளிவிட்டாய். அவ்வகையில் தடுத்தாண்டு கொள்ளவில்லை என்று நீ கூறுவது நன்றோ இல்லை... நன்றாகாது. இனி நான் என்ன செய்தாலும், நடுக்கடலுள் சென்று விழுந்தாலும் என்னைக் கரைசேர்ப்பது உனது கடமை ஆகும். ஒப்பற்ற தனிப்பொருளே! பல வடிவங்களில், உருவங்களில் திகழ்பவளே! உருவமே இல்லாது அருவாக இருப்பவளே! என் உமாதேவியே!

31. உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார் இனி எண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒருதாயுமில்லை
அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே!

உமாதேவியான நீயும் உமாதேவியான உன்னை இடப்பாகத்தில் கொண்ட எம்பெருமானும் ஒரே உருவில் (அர்த்தநாரீசுவரக் கோலத்தில்) தோன்றி அந்த ஏகவடிவத்தின் மகிழ்ச்சியில் என்னை ஆழ்த்தி, என்னை ஆட்கொண்டு, உங்களிடம் சரணடையச் செய்து அருள்புரிந்தீர்கள். இனி நான் எண்ணிப் பார்ப்பதற்கும்கூட வேறு சமய நெறி ஏதும் இல்லை என்றாகிவிட்டது. என்னை இனிப் பெற்றெடுக்கும் மானிடத் தாயும் இல்லை. மூங்கில் போன்ற தோள்களைக் கொண்ட மகளிர் மீது கொண்ட ஆசையும் (பெண்ணாசை) உன் அருளால் என்னைவிட்டு அகன்றுவிடும்.

சங்கப்பலகை

கணித அறிவுக்கு விருந்து

(ஆசிரியர் - க.க. ராம லிங்கம், விலை - ரூ. 12.00)

"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என்கிறது முது மொழி. எண்களை படிப்படை யாகக் கொண்ட கணிதம் சுவை யானது மட்டுமல்ல; வியப்பான பல கருத்துகளையும் உள் ளடக்கிக் கொண்டிருக்கிறது என்பதனை இந்நூலின் மூலம் கற்றுத் தெளியலாம். மாண வர்களுக்கும், மற்றும் அனை வருக்கும் மிக்க பயனுள்ள நூலாகும்.

சாந்தினி

(ஆசிரியர் - கஜமுகன். விலை - ரூ. 10)

'சாந்தினி' என்ற இக்கதை சுதந்திரப் போராட்ட காலத்தை நிலைக்களனாகக் கொண்டு புனையப்பட்ட கதை. ஆர்ப் பாட்டமில்லாத யதார்த்தமான எளிய நடையில் அமைந்துள்ளது கதை. தேச நலனுக்காகத் தங்கள் வாழ்க்கையைத் தியா கம் செய்த பலரில் இக்கதைத் தலைவி சாந்தினியும் ஒருத்தி என்பதைத் தமது படைப்பில் அருமையாகச் சித்திரித்து இருக்கிறார்.

காளையார் கோயில் ரதம்

(ஆசிரியர் - கோவி. மணி சேகரன். விலை - ரூ. 22.00)

'காளையார் கோயில் ரதம்' என்ற சிறுகதையின் தலைப் பைக் கொண்ட பதினான்கு சிறுகதைகள் அடங்கிய இந்தத் தொகுப்பிலுள்ள அனைத்துக் கதைகளும் நெஞ்சத்தைத் தொடும் வகையில் அமைந் துள்ளன.

மர்ம பங்களா

(ஆசிரியர் - பி.எஸ். மணி. பக்கங்கள் - 90. விலை - ரூ. 12.00)

விளையாட்டும் வினையும், சாக்பீஸ் திருடன், காட்டில் சர்க்கஸ், யமதர்பார், பாடும் சாக்கு, கோளாறு எங்கே, மர்ம பங்களா ஆகிய ஏழு சிறு நாடகங்கள் மாணவர்கள் படிப்பதற்கும், நடிப்பதற்கும் ஏற்ற வகையில் அமைந் துள்ளன. ஒவ்வொரு நாடகமும் ஒவ்வொரு போதனையில் சிறந்து மாணவர்கள் தங் களைச் செதுக்கிக் கொள்ளத் துணை நிற்கிறது. சிறுவர் விரும்பும் சிறு நாடக நூல்.

சின்னக் கமலா

(ஆசிரியர் - ரா.கி. ரங்க ராஜன். விலை - ரூ. 44.00)

இந்நூலாசிரியர் இந்தக் கதையில் உயிரூட்டமான பாத்தி ரங்களை உலவ விடுவதற்காக, சென்னை சிற்பக் கல்லூரிக் கும், சிற்பி நாகப்பா அவர் களின் கலைக்கூடத்திற்கும் சென்று திரட்டிய தகவல் களைக் கொண்டு நாவலை அழகுற அமைத்துள்ளார்.

தொழிற்கல்லூரியில் முதல் வராகப் பணியாற்றும் பிரபு, அவர் மனைவி நோய்வாய்ப் பட்டு, படுத்த படுக்கையாகக் கிடப்பதைக் கண்டு வேதனை யுற்று அநாவசியச் செலவு களையெல்லாம் தவிர்த்து சுவிட்ஸர்லாந்துக்கு அழைத்துப் போக விழைகிறார். அவரது வாழ்வில் சந்தர்ப்ப வசத்தால் புகும் பெண் கமலா மீது அன்பு கொண்டு 'சின்னக் கமலா' என அழைத்து அவள் விருப்பத்தை நிறைவேற்றுவதை அழகாக வருணித்திருக்கிறார்.

மேற்கண்ட ஐந்து நூல்களை யும் வெளியிட்டவர்கள் : கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 600 017.

ஆசையால் ஆபத்து

(ஆசிரியர் - பொன். பரமகுரு. வெளியீடு - வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17. பக்கங்கள் 136. விலை - ரூ. 18.00)

குற்றங்கள் குறைய வேண் டும். குற்றவாளிகள் திருந்த வேண்டும். சட்டங்களை அறிய வேண்டும். தத்துவங்களைத் தரிசிக்க வேண்டும். இவற் றைப் பின்னணியாகக் கொண்டு தன் முப்பத்தாறு ஆண்டு காவல் துறை அனுப வங்களை, கதைகள் போன்று கூறுகிறார் நூலாசிரியர். படிக்க வேண்டிய நூல்.

பூந்தோட்டத்தில்

(ஆசிரியர் - டாக்டர் கமலி ஸ்ரீபால். வெளியீடு - திருமகள் நிலையம். 55. வெங்கட்நாரா யணா சாலை, தி. நகர், சென்னை - 17. பக்கங்கள் - 103. விலை - ரூ. 16)

குறிஞ்சி, பாரிஜாதம், ஜாதி மல்லி, வேப்பம், அத்தி ரோஜா, மருக்கொழுந்து போன்ற பூக்களைத் தலைப்பு களாகக் கொண்ட கட்டுரை களில் மணம் வீசும் அற்புத மான கருத்துகள் மனநிறைவை உண்டு பண்ணுகின்றன. அனுபவங்கள் அனைவருக்கும் எவ்வாறெல்லாம் தக்க சமயங் களில் தகுதியில் மிக்க வற்றைக் கற்றுத் தரும் என் பதை எளிய நடையில் விறு விறுப்புடன் எடுத்துக் கூறும் இது ஓர் அறிவு மணக்கும் தோட்டம்.

ஞாபக சக்தியை வளர்ப்பது எப்படி?

(ஆசிரியர் - எஸ். இரகு நாதன், வெளியீடு - ஆர்.ஆர். நிலையம், 32/2, அம்மையப்பன் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14. பக்கங்கள் - 96. விலை - ரூ. 15.00)

→

ஞாபகம், படித்தவருக்கும் பாமரருக்கும் பணக்காரருக்கும் ஏழைக்கும் பொதுவானது. ஞாபக மறதி விளைவிக்கின்ற அளவும் முன்னேற்றத் தடைகளாகின்றன. அதனால் ஞாபக மறதி ஏற்படப் பல்வேறு காரணங்களையும் எடுத்துக் கூறுகிறது இந்நூல்.

பாண்டியன் பரிசு - பக்கங்கள் - 94. விலை - ரூ. 10.00 தமிழியக்கம் - பக்கங்கள் - 52. விலை - ரூ. 5.00. அழகின் சிரிப்பு - பக்கங்கள் - 48. விலை ரூ. 4.00

(மேற்கண்ட மூன்று நூல்களையும் வெளியிட்டோர் - பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017.)

பாவேந்தர் பாரதிதாசன் படைத்த அழகு தமிழ்க் கவிதைகள் தனித்தனி நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. நற்றமிழ்க் கவிதைகளை நாளும் விரும்புவோர் போற்றி வரவேற்கக் கூடிய தேன்சிந்தும் கவிதைக் கனிகள்.

இயற்கை உணவே நோய் தீர்க்கும் மருந்து

(ஆசிரியர் - மூ.ஆ. அப்பன். வெளியீடு - இந்து பப்ளிகேஷன்ஸ், 2, முத்துகிருஷ்ணன் தெரு, தி. நகர், சென்னை - 600 017. பக்கங்கள் - 360. விலை - ரூ. 100.00)

பழந்தமிழகத்தில் ஆற்றல் மிகுந்த மருத்துவ முறையாய் விளங்கிவந்த சித்த வைத்திய முறை இடையில் சிறிதுகாலம் அலோபதி வைத்தியப் பரம்பரைக்கிடையே அமிழ்ந்து கிடப்பதாகத் தோன்றினாலும் அண்மைக் காலத்தில் அது விசுவரூபமெடுத்து நிற்பதை நாடறியும்.

சித்தவைத்தியத்தின் ஒரு கூறாக, மருந்து மாத்திரைகளின் உதவி எதுவும் இல்லாமலேயே இயற்கை உணவையே மருந்தாகக் கொண்டு, தீர்க்க முடியாத வியாதிகள் எனச் சொல்லப்பட்ட பெரும் வியாதிகளுக்கெல்லாம் கூடத் தீர்வு கண்டு, மற்ற வைத்திய முறைகளுக்குச் சவால் விட்டு நிற்கிறது.

இயற்கை உணவை உட்கொள்வதையே சிகிச்சை முறையாக மேற்கொண்டு, தனக்குற்ற தொழு நோயினின்றும் விடுபட்டு வெற்றிகண்ட நூலாசிரியர் மூ.ஆ. அப்பன், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பெரு நோக்கில், நாட்டு மக்கள் பலரும் நன்மையடையும் பொருட்டு, பல்வேறு இயற்கை உணவு முறைகளைத் தெளிவாக நூல் முழுவதும் விவரித்திருக்கிறார்.

இயற்கை உணவு முறையைக் கடைப்பிடித்தால் எந்த வியாதியைப் பற்றியும் அச்சப்படத் தேவையில்லை என்று ஆணித்தரமாகத் தன் அனுபவத்தின் மூலம் எடுத்துக் காட்டியுள்ள ஆசிரியர், இதற்குத் துணையாக இம் முறையின் மூலம் குணமடைந்து மனமகிழ்ந்த எண்ணற்ற அன்பர்களின் சான்றுக் கடிதங்களையும் பட்டியலிட்டுத் தொகுத்துத் தந்திருக்கிறார்.

எந்த நோயையும் விரட்டியடிக்கும் ஆற்றலையும், வழிகளையும் எடுத்துக் கூறும் இந்நூல் தமிழ் மக்களுக்குக் கைகண்ட ஒரு மருந்தாகத் திகழ்ந்து வாழ்வில் நம்பிக்கையூட்டுகிறது.

எய்ட்ஸ் நோய்களும் பாதுகாப்பு முறைகளும்

(ஆசிரியர் - கே. சந்தான கிருஷ்ணன், பி.எஸ்ஸி., எம்.ஏ., வெளியிட்டோர் - மணிமேகலைப் பிரசுரம், த.பெ. எண் - 1447, 4. தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017. பக்கங்கள் - 110. விலை - 15.50)

படித்த மக்களைப் பீதிக்கு உள்ளாக்கி, அரசின் திட்டங்களில் ஒன்றாகவும் ஆகிவிட்ட எய்ட்ஸ் நோய் தோன்றக் காரணத்தை எடுத்துக்காட்டி அதனை வராமல் தடுப்பது பற்றி நூல் எடுத்துக் கூறுகிறது. ஹெய்தி தீவிலிருந்து ஆப்பிரிக்க தாமிரச் சுரங்கங்களில் வேலை பார்க்கச் சென்று பின்னர் ஹெய்திக்குத் திரும்பியவர்கள் தான் இந்த நோயை உலகில் பரப்பினார்கள் என்பதை ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். ஓரினச் சேர்க்கை, போதை ஊசிப் பழக்கம் போன்றவற்றால் எய்ட்ஸ் நோய் தீவிரமாகப் பரவுவதை நூல் கூறுகிறது.

இந் நூலில் சித்த மருத்துவத்தில், இதர மருத்துவங்களில் மருந்து இருக்கிறதா என்பதை ஆசிரியர் ஆய்வு செய்துள்ளார். அண்மைக் காலம் வரை எய்ட்ஸ் பற்றிக் கிட்டிய தகவல்களை, சிகிச்சை முறைகளை நூல் ஆசிரியர் நன்கு தொகுத்துத் தந்திருக்கிறார். எய்ட்ஸ் பற்றி நிறையத் தெரிந்து கொள்ள நூல் உதவும்.

"ஏழையின் பசு"
(வெள்ளாடு வளர்ப்பு)

(ஆசிரியர் - டாக்டர் பா. மரியதாசு. வெளியீடு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 90. பக்கங்கள் - 102. விலை - ரூ. 20.00)

ஏழையின் நண்பனாகவும், சொத்தாகவும் உள்ள வெள்ளாடுகள் குறித்து இந்நூலில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. உலக வெள்ளாடுகள் தொகை

ில் 41% ஆப்பிரிக்காவிலும், 37% இந்தியாவிலும் உள்ளன என்று ...ரும் இந்நூலில் இனங்கள், ...ளர்ப்பு முறைகள், இன ...ிருத்தி, தீவனம் அளித்தல், ...நோய்த் தடுப்பு முறைகள் ...போன்றவற்றை விளக்கி, இது ...ர் ஆதாயமான தொழில் ...என்றும் வலியுறுத்தியுள்ளார் ...ஆசிரியர். வெள்ளாடு வளர்ப்ப ...ர்கட்கு மிகவும் பயனுள்ள ...ால்.

—

இந்திய வர்த்தக சங்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

(பதிப்பாசிரியர் - லேனா ...மிழ்வாணன், எம்.ஏ., வெளி ...டு - மணிமேகலைப் பிரசுரம், ...பெ. எண் 1447 எண் 4, தணி ...ாசலம் சாலை, தியாகராய ...கர், சென்னை - 600 017. ...க்கங்கள் - 128. விலை - ரூ. ...00)

ஒரு நாட்டின் முதுகெலும்பு, ...ந்நாட்டின் தொழில்களும் ...வற்றுடன் இணைந்த வர்த்த ...மும்தான். இந்தியாவின் ...தல் வர்த்தக சங்கம் 1885இல் ...க்கிநாடாவில் தோற்றுவிக் ...ப்பட்டது. வங்காளம் இன் ...னும் தொழில் மயம் பெற்றுத் ...கழ்வதற்கு இதன் பங்கு ...கத்தானது. கூடவே, உரிமை ...ளர் சங்கங்களும், காலப் ...ாக்கில் விற்பனையாளர் ...ங்கங்களும் ஏற்பட்டன. ...ச்சங்கங்களின் வளர்ச்சி, ...வற்றால் கிட்டும் பலன்கள் ...கியவை இந்நூலில் விரிவாக ...டுத்துக் கூறப்பட்டுள்ளன. ...றுதியாக உலகின் பல்வேறு ...க்கிய நகரங்களில் இயங்கி ...ரும் இந்திய வர்த்தகர் சங் ...ங்களின் பணியும், இந்தியப் ...பொருளாதாரத் திட்டமிடலில் ...வற்றின் பங்கும் விளக்கப் ...ட்டுள்ளன.

பெரியார் உதிர்த்த முத்துகள்

(தொகுத்தவர் - முல்லை. பி.எல். முத்தையா. பிரசுரம் - தேன்மழைப் பதிப்பகம், 34, கொத்தவால் தெரு, ஆலந்தூர், சென்னை - 600 016. விலை - ரூ.10.00)

பெரியாரின் வாழ்க்கையில் நடந்த சுவையான நிகழ்ச்சிகள், சம்பவங்கள் அனைத்தையும் தொகுத்துத் தந்திருக்கிறார் முல்லை பி.எல்.முத்தையா.

"எனக்கு வயது எண்பதைத் தாண்டிவிட்டது. இனியும் எத்தனை நாளைக்கு நானே பெட்டிச் சாவியை வைத்துக் கொண்டு அலைந்து திரிந்து பணியாற்றிக் கொண்டிருக்க முடியும்? ஆகவே பெட்டிச் சாவியை அண்ணாதுரையிடம் கொடுக்கத் தீர்மானித்து விட்டேன்!" என்று பெரியார் அண்ணாதுரையைத் தலைமைப் பொறுப்புக்கு அழைத்த விதம் அவரது பெருமையைக் காட்டுகிறது.

துடிப்பான பதில்கள்; நறுக்குத் தெறித்தாற் போன்ற கருத்துகள் பெரியாரை நம்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

வானம் தொலைந்து விடவில்லை

(ஆசிரியர் - ஜீவி. வெளியீடு - அன்னம் புத்தக மையம். 51, தெற்கு உஸ்மான் சாலை, தி. நகர். சென்னை - 17. பக்கங்கள் - விலை - ரூ. 12/-)

இந் நூலாசிரியரான கவிஞர் தன் கவிதைகளில் இனிமையான கவிதைத் துளிகளைக் கலந்து பெரு வெள்ளமாய்க் பெருக விட்டிருக்கிறார். கவிதைகள் இவரது எதிர்கால வளர்ச்சிக்குக் கட்டியங் கூறி நிற்கின்றன.

அபாயம் - நில் - கவனி

(ஆசிரியர் - பேராசிரியர் டாக்டர் ஹகீம் எஸ். அக்பர் கவுஸர். வெளியீடு - மது-போதை அடிமைகளின் மறுவாழ்வு மையம், 361, மசூதி தெரு, நியூ டவுன், வாணியம்பாடி - 635 752. பக்கங்கள் - 272. விலை - ரூ. 25.00)

போதைப் பொருள் பழக்கம் உலகைச் சீரழித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் போதை மருந்தை உட்கொண்டு மீள முடியாமல் தவிப்போரை மீட்கும் முயற்சியில் யுனானி, அக்குபஞ்சர், அக்கு பிரஷர் மற்றும் ஹோமியோபதி முறையிலான சிகிச்சைகள் பற்றி இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் முக்கிய சிறப்புகளில் ஒன்று ஏராளமான விளக்கப் படங்களை (300க்கும் மேல்) இணைத்துள்ளதாகும். அனைவருக்கும் பயன்படும் நல்ல நூல்.

இந்துமத நம்பிக்கைகளும் தத்துவங்களும்

(ஆசிரியர் - கவிஞர் சக்தி தாசன். வெளியீடு - ஸ்ரீராகவேந்திர நிலையம், 8, கங்கையம்மன் கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014. பக்கங்கள் - 144. விலை - ரூ.20.00).

இந்து மதம் மிகப் பழமை வாய்ந்தது. அது இறைவனை, அவனின் மகோன்னதங்களை அற்புதமான வாசகங்களில், அனுபவங்களில், வெளிப்பாடுகளில் இனம் காட்டுகிறது. இந்து மத நம்பிக்கைகள், தத்துவங்கள் நூல் முழுதும் வியாபித்து, ஞான வெளிச்சத்தை வழங்குகிறது.

சங்கப்பலகை

தேவதாஸ் கட்டுரைகள்

(ஆசிரியர் - சா. தேவதாஸ். அன்னம் லிமிடெட்., 2, சிவன் கோயில் தெற்குத் தெரு, சிவகங்கை 623 560. பக்கங்கள் - 140. விலை - ரூ. 20/-)

கடந்த பல ஆண்டுகளாக, புதிய கோணங்களில் தமது விமரிசனக் கட்டுரைகளைப் படைத்துப் புகழ் பெற்று வருபவர் நூலாசிரியர்.

இந்தப் புத்தகத்தில் புதுமைப் பித்தனின் சிந்தனைத் தாக்கத்தையும் அவரையும் மீறி, சட்டென வெடித்து வரும் தார்மீகச் சீறல்களையும் நன்றாக வெளிப்படுத்தியுள்ளார். போலி எழுத்து, விசுவாசமற்ற வாழ்க்கை ஆகியவற்றைக் காறி உமிழ்ந்த புதுமைப் பித்தனின் சிறுகதைப் போக்குகளைவிட அவரது வாழ்க்கைச் சம்பவங்களை அங்கங்கே பிரதிபலித்திருப்பது படிக்கச் சுவாரசியமாயுள்ளது.

தாகூர், ஜே.கே. எட்கார் ஆலன்போ போன்ற படைப்பாளிகளின் இலக்கியத் தாக்கங்களையும் அவர்தம் வாழ்வில் நடைபெற்ற சில நுட்பமான சம்பவங்களையும் வித்தியாசமான நடையில் விவரித்திருக்கிறார்.

காட்டுக்குள் புரட்சி

(ஆசிரியர் - ஏ. சோதி. பிரசுரம்- நன்மொழிப் பதிப்பகம், 75, அரவிந்தர் வீதி, புதுச்சேரி - 605 001. விலை - ரூ. 12.00)

நரிகள் தந்திரத்துக்குப் பெயர் போனவை. ஒரு நரிக்குட்டி சிங்கத்தினால் அவமானப்பட்டதும் அதற்குப் பழி தீர்த்துக் கொள்ள முடிவு செய்கிறது. அந்தப் பழியைத் தீர்க்க அது எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் நீண்ட கதையாக வளர்ந்துவிட்டது. சிறுவர்களுக்காகப் பல நூல்களை எழுதிய பாண்டிச்சேரி நூலாசிரியர் ஏ. சோதி குழந்தைகள் விரும்பிப் படிக்கும் முறையில் இந்நூலைச் சுவைபடத் தந்திருக்கிறார்.

சிதறல்கள் (கவிதைத் தொகுப்பு)

(வெளியீடு - சுடர் பிரிண்டர்ஸ் 1/B-1, சாமிநாதபுரம் காலனி, சிவகாசி (கிழக்கு). பக்கங்கள்- 46. விலை - ரூ.10.00)

'சிதறல்கள்' என்ற இக்கவிதைத் தொகுப்பு கவிதைத் திறனும் சிந்தனை வளமும் கைவரப்பெற்று மிளிர்கின்றது. எஸ். குமாரின் வைரக் கவிதையில் யதார்த்தம் மின்ன விடுகிறது. என். முத்துராஜின் 'பேராசை' கவிதையில் மனிதனின் மனதை நன்கு நிதர்சனப்படுத்தி இருக்கிறார். க. சமுத்திரத்தின் 'இருட்டு', 'அவன்' என்ற தலைப்பிலுள்ள கவிதைகள், நெஞ்சக் குமுறல்களை, ஏக்கங்களை, வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளன. கவிதைகள் யாவும், சமூக அவலம் குறித்து அக்கறையுடன் அலசப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

நெருப்பு மலர்கள்

(ஆசிரியர் - கீழாம்பூர் எம். துரைராசு. வெளியீடு - இராஜா பதிப்பகம், 6/11-B, எல்லப்பா சேத் எஸ்டேட், ஜெரிமெரி (மேற்கு) பம்பாய் - 400 072. பக்கங்கள் - 128. விலை - ரூ. 20.00)

பல்வேறு தலைப்புகளில் மொத்தம் 62 கவிதைகள். ஏற்கெனவே பல்வேறு நாள் மற்றும் மாத ஏடுகளில் வெளிவந்தவற்றின் தொகுப்பு. ஒவ்வொன்றும் ஒவ்வொருவித உணர்வின் வெளிப்பாடு. தமிழுணர்வு, நாட்டுப்பற்று, காதல், நன்றியுணர்வு, தாய் பாசம், பிரிவுணர்வு, அ குணர்வு... இப்படி எந் உணர்வை வெளிப்படுத் னாலும் அதில் ஓர் ஆழமும், ஒ வேகமும், நெருப்பாய்ச் சுடு கூர்மையும் காணப்படுகின்றன நூலின் தலைப்பு நியா மானதே!

அட்டிகை அம்மா நான்

(ஆசிரியர் - நிமோஷினி வெளியீடு - சிந்து பதிப்பகம் 213 மகாவீர் காம்ப்ளெக்ஸ் இராயப்பேட்டை நெடுஞ்சாலை சென்னை - 14. பக்கங்கள் - 10 விலை - ரூ. 15.00/-)

பல்வேறு தலைப்புகளி எழுதப்பட்டுள்ள கவிதை களைக் கொண்ட இந்நூல் சிந் பதிப்பக அறக்கட்டளைத் தே வுக் குழுவில் தேர்வு செய்ய பட்டது. இன்றைய நடைமுறை வாழ்க்கையில் காணப்படு சிக்கல்களைப் படம் பிடித்து காட்டுகிறார். நாளொ வண்ணமும், பொழுதொ நாகரிகமும் புகுந்து திரிவதை அழகுறப் படம் பிடித்து காட்டியுள்ளார்.

சௌபாக்யமளிக்கும் ஸ்ரீசந்தோஷி கவசம் (பூஜை முறைகளுடன்)

(ஆசிரியர் - அம்மன் சத்தி நாதன். வெளியீடு - அருள்மி அம்மன் பதிப்பகம், 8, கங்கை யம்மன் கோயில் தெரு, இராய பேட்டை, சென்னை - 600 01 பக்கங்கள் - 40. விலை - ரூ. 5.00)

சந்தோஷி பூஜை, மனித வா வின் ஒவ்வொரு முனையையு தாக்குகின்ற துன்பத்தை, அ னால் விளையும் துயரத்தை நீக் கல்லாமை, இல்லாமை, கோழை தனம் போன்றவற்றைப் போக்கி சுபிட்சத்தைத் தருகிறது என்பதை விளக்கும் சிறு நூல்.

சங்கப்பலகை

அபாயத் திருப்பங்கள்

(ஆசிரியர் - ஆர்னிகா நாசர். ...ளியீடு - மணிமேகலைப் ...சுரம், 4. தணிகாசலம் சாலை, ...நகர் சென்னை - 17. பக்கங்கள் விலை - ரூ. 14.50/-)

ஆர்னிகா நாசர் தன் கற்பனைத் ...றுக்கும் அப்பாற்பட்ட உத்தி ...ளைக் கையாண்டு, மர்மம் ...றந்த நாவலைப் படைத்து, ...யில் ஓர் அபாயத் திருப்பத் ...வே ஏற்படுத்தியுள்ளார்.

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் பற்றிய ...சுவையான செய்திகளும் வரலாறுகளும்

(ஆக்கியோர் - மணிமேகலைப் ...சுர ஆசிரியர் குழு. பிரசுரம் - ...ணிமேகலைப் பிரசுரம், 4, ...ணிகாசலம் சாலை, தியாக ...ய நகர், சென்னை - 17. விலை - ...14.00).

அமெரிக்க ஜனாதிபதி ...ளிண்டன் இன்று மிகப் பிரும் ...ண்டமான வெள்ளை மாளிகை ... வசிக்கிறார். ஆனால் ...ளமைக் காலத்தில் கிளிண்ட ...க்கு அவர் வசித்த வீட்டில் எந்த ...தியும் கிடையாது. பல நாள்கள் ...ர் வசித்த அவுட் ஹவுஸில் ... பாம்புகள் படையெடுக்கு ...ம். ஒவ்வொரு பாம்பையும் ...ட்டியடிப்பதே இளம் கிளிண் ...னின் பணியாக இருந்திருக்கிறது.

கிளிண்டனின் வாழ்க்கையில ...பட்ட சுவையான நிகழ்ச்சிகளை. ...த்துக் கூறும் நூலை எல்லா ...ம் விரும்பிப் படிப்பார்கள். ...ளிண்டனின் அமைச்சரவையில் ...பட்டிருப்பவர்களைப் பற்றிய ...ப்புகளும் படித்து மகிழத் ...கவாய் அமைந்துள்ளன.

நகைச் சுவையுங்கள்

(ஆசிரியர் - கரடிகுளம் ஜெயா ...ரதிப்பிரியா. வெளியீடு - மணி ...மேகலைப் பிரசுரம், 4, தணிகா ...ம் சாலை, சென்னை - 17. ...லை - ரூ. 27.50).

கரடிகுளம் ஜெயா பாரதிப்பிரியா 1975 இல் மாலை முரசில் முதல் நகைச்சுவை எழுதியதிலிருந்து 10,000 நகைச்சுவை வெடிகளைத் தந்திருக்கிறார் என்பது பிரமிக்க வைக்கிறது!

'ஜோக் எழுதுவது அவ்வளவு எளிதான காரியமில்லை. அது ஒரு யாகம்' என்று நகைச்சுவைத் தயாரிப்பாளரே சொல்கிறார்!

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல, ஒரு நகைச் சுவையைத் தொட்டுப் பார்க்க லாம்.

"கல்யாணப் பத்திரிகையில் தங்கள் நல்வரவை ஆவலுடன் எதிர்பார்ப்பவர்கள்னு அறுபத்து நாலு பெயர்கள் போட்டிருக்கே, யார் அவங்க?"

"மாப்பிள்ளைக்குக் கடன் கொடுத்தவர்களாம்!"

இடுக்கண் வந்த நேரத்தில் மட்டுமல்ல; பொழுது போக்குவ தற்கும் சிரித்து மகிழவும் இந்த நூல் பெரிதும் உதவலாம்.

பாமரர் கதைகள்

(பதிப்பாசிரியர் - லேனா தமிழ்வாணன் எம்.ஏ., வெளியீடு - மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17. பக்கங்கள் - 136. விலை - ரூ. 19/-)

இருபத்தியேழு சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு. படிப்பறி வில்லாத மக்கள் மத்தியில் முற்காலத்தில் செவிவழியாகப் பேசப்பட்டு வந்த இக்கதைகள் அனைத்தும், தம் சமயோசித புத்தியால் சிக்கலிலிருந்து எப்படி விடுபடலாம் என்பதை எடுத்துக் கூறுகின்றன. எளிய புதிர்கள், அவற்றை விடுவிக்கும் பாங்கு ஆகி யவற்றை அழகுற, பாங்குற இக் கதைகள் தெளிவுபடுத்துவதோடு படிப்போர் தம் சிந்தனையைத் தூண்டுவதாகவும்

வாழ்வில் நமக்கு நல்ல படிப்பினையைத் தருவனவாக வும், கருத்துச் செறிவு மிககன வாகவும் மிளிர்கின்றன.

கண்ணுக்குள் நிற்கும் கங்காரு நாடு

(ஆசிரியர் - லேனா தமிழ் வாணன், எம்.ஏ., வெளியீட்டோர் - மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண். 1447, 4, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 17. பக்கங்கள் - 216. விலை - ரூ. 32.00).

உலகத்திற்கு ஆஸ்திரேலிய நாட்டின் உண்மையான மகத் துவம் இன்னும் உணர்த்தப்படாத நிலையில் லேனா தமிழ்வாணன் எழுதியுள்ள இந்தப் பயண நூல் ஒரு நல்ல முயற்சி.

உலக வரைபடத்தின் ஓர் ஓரத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஆஸ்திரேலியாவை மிக அழகாக வெளிக்கொண்டு வந்திருக்கிறார்.

நூலில் இடையிடையே இழை யோடும் நகைச்சுவை நயமாக உள்ளது.

44 அத்தியாயங்களிலும் பல விஷயங்கள் தெளிவாக விளக்கப் பட்டுள்ளதைப் பாராட்டலாம்.

இனியவை இருநூறு

(ஆசிரியர் - ம. நாராயணன். வெளியீடு - நிறைவாணன் பதிப் பகம், 3, பெரியார் வீதி, பாவேந் தர் நகர், ரங்காபுரம், வேலூர் - 9. பக்கங்கள் - 120. விலை - ரூ. 25.00.)

தன்னை வந்தடைந்த தக் கோரின், தகுதியின் மிக்கோரின் சொல்லோவியங்களைச் செவ் வனே நறுக்கி, சின்னச் சின்ன நல்லோவியங்களாய்க் கொடுத் திருக்கிற தொகுப்பாசிரியர் தேனீ யாய் மாறியிருக்கிறார். வண்டு களாய்ப் படிப்போரை மாற்றி யிருக்கிறார். வரவேற்கத்தக்க முயற்சி.


மதிப்பீட்டாளர்கள் :

எம். சகுந்தலாதேவி, குண்டுமணி, நாகராஜ்குமார், தேனி தேன்மொழி, நீலவன், டாக்டர் சுப. சதாசிவம், கு. சண்முகசுந்தரம், பின்னலூர் மு. விவேகானந்தன், ஜய்ராம்ஜி, கவிஞர் வேதம்.

ங்கள் தந்தையின் ஆசி எங்களை வழிநடத்துகிறது!

சில ஆண்டுகளுக்கு முன்பு நகர் உஸ்மான் சாலை ல், பாரதி பதிப்பகம் என்ற றிய போர்டை மரங்கள் மறைத் ருக்கும். அந்தக் கட்டடத்திற்குள் நுழைந்தால் சட்டை அணியாத டலுடன், தரையில் சப்பணம் பாட்டு உட்கார்ந்தபடி, ஒரு த்தகப் பார்சலை இழுத்து மூத்து வியர்வை வடியக் கட்டிக் காண்டிருப்பார் ஒருவர். அவர் ன் அந்தப் பதிப்பகத்தின் றுவனர், பழ.சிதம்பரம் என்று சான்னால் வியப்பால் நம் ழிகள் விரியும்.

இன்று அவரது துணைவியார் மய்யம்மையின் வழிகாட்டலில் மாரர் சித.இராஜேந்திரன், தன் டன்பிறப்புகள் சித.பழனியப் ன் (மணி) சித.வைத்தியநாதன், த.வெங்கடாசலம், சித.அல லு ஆகியோரின் ஒத்துழைப் டன் சிறப்பாக நடத்திவரும், ரதி பதிப்பகத்திற்குச் சென் றாம், மிகுந்த பொருட்செலவில் ங்கவர் அமைப்பில் அண்மை ல் அமைத்துள்ள ஷோரூமில் வேற்றார் சித.இராஜேந்திரன்.



தந்தையின் நினைவில் தோய்ந்த அவர், கண்ணீர்மல்க, தொடர்ந் தார்:

"இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்" என்ற பாரதியின் முழக்கத்தைத் தாரக மந்திரமாகக் கொண்டு 1950ஆம் ஆண்டில் எங்கள் தந்தையார் பழ.சிதம்பரம் அவர்கள் பதிப் பகத்தைத் தொடங்கினார்கள். பாரதிபதிப்பகம் என்ற பெயர் சூட்டி, புதுக்கணக்கும் எழுதித் தொடங்கி வைத்தவர் பேராசிரியர் 'கல்கி' அவர்கள்.

தொடர்ந்து மூதறிஞர் இரா ஜாஜி, பேராசியர் கல்கி, சாண்டில் யன் ஆகியோரின் படைப்புகளை வெளியிட்டு வந்தோம். இன்று முன்னணி எழுத்தாளர்கள் பலரின் நூல்களையும் வெளியிட்டு வருகி றோம். அறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி, சுஜாதா ஆகியோரின் நூல்கள் பலவற் றையும் தொடர்ந்து வெளியிடு கிறோம்.

வியாசர் விருந்து, சக்கர வர்த்தித் திருமகன், தேவி பாக வதம், பகவத் கீதை, திருக்குறள், பாரதியார் கவிதைகள் ஆகிய சிறப்பு மிக்க நூல்களை அனை வரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இன்றும் மலிவுப் பதிப்பாக வெளியிட்டு வருகிறோம்.

அதேபோல் 'சமையல் கலை' என்ற எங்கள் வெளியீடு பத்தோடு பதினொன்றாக இல்லாமல், பலராலும் விரும்பிக் கேட்டு வாங்கும் வகையில், ஏராளமான விஷயங்களைக் கொண்டிருப்ப தால்- மலிவுப் பதிப்பாக வெளி யிட்டு வருகிறோம். பன்னிரண்டு பதிப்புகளைத் தாண்டிவிட்டதே இதன் தனிச் சிறப்பிற்குச் சான்று.

எங்கள் பதிப்பகத்தின் ஜோதி டத் துறை நூல்களும் வாசகர் களின் பரவலான வரவேற்பைப் பெற்றவை. ஜோதிட உலகில் சிறந்து விளங்கும் புலியூர் பாலு, முருகு இராஜேந்திரன் ஆகியோ ரின் படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறோம்.

பதிப்பகத்தோடு இணைந்த பணிகளாக, 'உங்கள் நல்ல காலம்! என்ற வார இதழையும், 'முருகு ஜோதிடக் கலை' என்ற மாத இதழையும் நடத்தி வருகிறோம்.

யோகாசனக் கலை வல்லுநர் ஆசனா ஆண்டியப்பன் அவர் களது அனைத்து நூல்களும் எங்களது வெளியீடுகளே. டாக்டர். சிலம்பொலி செல்லப்பன், டாக்டர்.வா.செ. குழந்தைசாமி ஆகியோரின் நூல்கள் எங்கள் சிறப்பு வெளியீடுகள்.

எங்கள் தந்தையின் ஆசி எங்களை வழிநடத்துகிறது. எங்கள் விற்பனையாளர்களின் தொடர்ந்த ஆதரவு எங்கள் வளர்ச் சிக்கு வழிவகுக்கிறது. 'மலிவு விலையில் நிறைய நூல்களை மக்களுக்குக் கொடுக்க வேணடும்.' என்பதே எங்கள் நோக்கம்" என்று கூறிய சித.இராஜேந்திரனின் நோக்கம் நிறைவேற வாழ்த்தி விடைபெற்றோம்.

கு.சண்முகசுந்தரம்

✢

மார்க்ட்வைனுக்குப் பத்திரிகை களுக்குப் பேட்டி தருவது என்றால் வேப்பங்காய்! ஏனெனில் அவர் சொன்னவை திரித்தோ, கூட் டியோ வெளியிடப்பட்டு வந்தன.

ஒரு தடவை மார்க்ட்வைன் தாம் பிறந்த கிராமத்துக்குச் சென்றபோது, ஓர் இளம் நிருபர் வந்து, "உங்கள் இளம் வயதில் அனுபவித்த ரசமான சம்பவம் என்ன?" என்று கேட்டார்.


மார்க்ட்வைன் யோசித்துவிட்டுப் பதில் சொன்னார்: "ஆரன்பர்ரின் அடக்கம்!" என்று.

"அதுசரி! ஆரன்பர் நீங்கள் பிறப்பதற்கு முன்பே மடிந்து விட்டாரே!" என்று சந்தேகம் கேட்டார்.

உடனே மார்க்ட்வைன் அந்த இளம் நிருபரிடம் கைகளைக் குலுக்கி, "நீர்தான் முதல் பத்தி ரிகை நிருபர். பல வருஷங்களுக்குப் பிறகு பத்திரிகையில் அச்சாவ தற்கு முன்பே தவறைக் கண்டு பிடித்து விட்டீர்கள்!" என்றார்.

✢

ஒரே கூரையின் கீழ்...



நர்மதா பதிப்பகத்தின் உரிமையாளர் திரு.இராமலிங்கம்.

"ஸார்! தமிழ்ச் சொல் அகராதி வேணும், இருக்கிறதா?"

"மன்னிக்கவும். எங்கள் பதிப்பகத்தில் பிரசுரிக்கலை. இந்த இடத்தில் வெளியிட்டு இருக்கிறார்கள். அங்கு கிடைக்கும்!"

மேற்படி உரையாடலுக்கு முற்றுப் புள்ளி விழப் போகிறது. ஆம்! நர்மதா பதிப்பகத்தின் உரிமையாளர் திரு.இராமலிங்கம் இதற்கான முழு முயற்சியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

பதிப்பகங்களும், நூல் விற்பனை நிலையங்களும் பரவியிருக்கும் பாண்டிபஜார், தி.நகர் - பகுதியின் வடக்கு உஸ்மான் ரோட்டில் 'நர்மதா புக் லாண்ட்ஸ்'ஸை மிக சிரத்தையுடன் உருவாக்கிக் கொண்டிருக்கும் திரு.இராமலிங்கம் பல வேலைப் பரபரப்புகளுக்கிடையே நம்முடன் பேசத் தொடங்கினார்:

"தமிழ் நாட்டில் ஒவ்வொரு பதிப்பகமும் சில குறிப்பிட்ட நூல்களை மட்டுமே வெளியிடுகின்றன. குறிப்பிட்ட நூலை வாங்க வேண்டுமென்றால் அந்தப் பதிப்பகத்திற்குப் போய் வாங்க வேண்டிய நிலை. அந்த நிலையை- அந்தக் குறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று நினைத்தேன். மேலும் வெளியூர்களில் இருக்கிற பதிப்பகங்கள் வெளியிடுகின்ற நூல்களையும், விற்பனை நிலையங்கள் இல்லாத பதிப்பகங்கள் வெளியிடுகின்ற நூல்களையும், எழுத்தாளர்கள் தாங்களே வெளியிடுகின்ற நூல்களையும் விற்பனை செய்ய வேண்டும் என்ற சேவை மனப்பான்மையும் எனக்குள் எழுந்தது. அதைச் செயல்படுத்த முனைந்தேன். இந்த முயற்சிக்கு நல்ல வரவேற்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

வடக்கு உஸ்மான் சாலையில் புத்தக நிலையம் அமைக்க இடம் பார்க்கச் சென்றேன். இடத்தை முடிவு செய்தேன். அக் கட்டடத்தில் மூன்று நகைக்கடைகள். ஒரு பிரபல தையலகம். நான் புத்தக நிலையம் அமைக்கப் போகிறேன் என்று சொன்னதும் நகைத்தார்கள். வேறு ஏதாவது கடை வைத்தால் நல்ல வருமானம் கிடைக்கும் என்றார்கள். அவர்களின் நகைப்பை மாற்றியமைக்க வேண்டும் என்ற வெறியில் ஈடுபட முனைந்துள்ளேன். நிலையத்தில் ஆங்கில நூல்களும் இடம் பெறப் போகின்றன." என்றவரின் பேச்சு நர்மதா பதிப்பகத்தின் தொடக்க நாள்களுக்குச் சென்றது.

"பதிப்பகத்துறைக்கு வருவதற்கு முன்பு பதிப்பகத்துறையின் நுணுக்கங்களைக் கற்றிருந்தேன். நல்ல நூல்களை விரும்பிப் படிப்பேன். 'ஆங்கில நூல்கள் தரமான முறையில் வருகின்றனவே, தமிழ் நூல்கள் அந்த அமைப்பில் வெளியானால் நன்றாக இருக்கும்' என்று நினைத்ததன் விளைவுதான் இப்போது நர்மதா பதிப்பகத்தின் நூல்கள் தரமாக வருவதற்குக் காரணம்.

பதிப்பகத் துறையில் நுழைந்ததும் 'நல்ல நூல்களை வெளியிடும் வெளியீட்டாளர்கள்' என்ற வேலியை எனக்கு நானே அமைத்துக் கொண்டேன். அந்த வாசகத்திற்காகவே நல்ல நூல்களை வெளியிடுகிறேன்.

சிறந்த அமைப்பில் தரமான முறையில் நூல்களை வெளியிடும் போது கிடைக்கிற லாபத்தில் நஷ்டமே ஏற்படுகிறது. பணத்தை விட, புத்தகத் தொழில் மூலம் கிடைக்கும் ஆத்ம திருப்தி அலாதியானது" என்றார்

18 வருடங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட நர்மதா பதிப்பகத்தின் அதிக விற்பனை சாதனை புரிந்த நூல் 'தெய்வீக மூலிகைகள்' - 13 ஆவது பதிப்பைக் கண்டிருக்கிறது.

எதிர்காலத்தில் புத்தகத் தொழிலில் தனக்கு ஏற்பட்டுள்ள அச்சத்தைத் தெரிவித்தார், "இந்திய புதிய பொருளாதாரக் கொள்கையால் நாளுக்கு நாள் பேப்பர் விலை அதிகமாகிக் கொண்டே செல்கிறது. பாரத்திற்கு என்ன விலை வைப்பது என்று திண்டாட வேண்டியுள்ளது. பொருளாதார ரீதியாக மக்கள் சிரமப்படும் வேளையில் நூல்களை வாங்கத் தயங்குகிறார்கள். போதாததற்கு டி.வி.சேனல்களின் ஆக்ரமிப்பு அச்சத்தைத் தருகிறது" என்றார்.

'என்ன நடந்தாலும் அமைதியோடு இருங்கள். கடவுள் அருளை நம்புங்கள். நல்லதே நடக்கும்.' என்ற நர்மதா பதிப்பகத்தின் விலைப் பட்டியல் வாசகத்தை நினைத்துப் பிரார்த்தித்துக் கொண்டு நகர்ந்தோம்.

-நாகு

நூலின் வெற்றிக்கு முதல் காரணம்

புத்தகக் கடைக்குச் செல்கிறோம். பார்வையிடுகிறோம். பளிச்சென்று ஒரு புத்தகம். நூலின் ஆசிரியர் யார் என்று பார்ப்பதில்லை; பதிப்பகத்தின் பெயர் என்ன என்ற கவலை இல்லை. உடனே கையில் எடுக்கிறோம். அதற்குக் காரணம் நூலின் அட்டைப் படம். நூலைக் கையில் எடுத்த பிறகுதான் ஆசிரியர், பக்கம், சப்ஜெக்ட் பற்றிய எண்ணங்கள் எழுகின்றன.

எந்த ஒரு நூலின் விற்பனைக்கும் அட்டைப்படமும் முக்கியக் காரணமாக அமைவது உண்மை! அட்டைப் படம் வரைவதையே முழு நேரத் தொழிலாகக் கொண்டு, 1949-ஆம் ஆண்டு முதல் இன்று வரை வரைந்து வருகிறார் ஆனந்தன்.

ஆனந்தன் என்று சொல்வதை விட 'ஈஸ்வரி' என்றால் அநேகமாய் எல்லாருக்கும் தெரியும்.

"நாலாம் வகுப்பு படிக்கும் போதே ஓவியத்தில் கொண்ட ஆர்வத்தின் காரணத்தால் இந்தத் தொழிலுக்கு வந்து விட்டேன். ஒரு நாளைக்கு குறைந்தது ஒன்று அல்லது இரண்டு அட்டைப்படங்களைத் தயார் செய்து விடுவேன். ஓவியத்தில் வளர்ந்து வந்த நேரத்தில் 'பிளாக் மேக்கிங்' தொழிலில் தொடர்பு ஏற்பட்டது. நானே பிளாக் தயாரிக்கும் தொழிலையும் தொடங்கினேன். மூன்று பேருக்குத் தொடர்ச்சியான வேலை தரும் மனநிறைவு இந்தத் தொழில் மூலம் எனக்குக் கிட்டுகிறது.

அட்டைப் படம் வரைந்து, பிளாக் செய்து, நானே பிரிண்ட் செய்து, காம்பினேஷன் போட்டு, டெலிவரி செய்து விடுவேன். 1200 பிரதிக்கு ரூ.1600/- ஆகும். இன்றைக்கு இருக்கிற எல்லாப் பதிப்பகங்களும் என்னை அட்டைப் படம் வரையச் செய்து பிரசுரித்திருக்கிறார்கள்.

நான் வரையும் அட்டைப் படம் எல்லாம் 'கட்-கலர்' எனப்படும் தனித்தனியே வண்ணங்கள் அமையும்



ஈஸ்வரி...

சித்திர வகைகள். நான்கு பிளாக் செய்து நான்கு தடவை அச்சிட வேண்டும். 4 கட் கலரில் 16 கலர் அமைப்புகளைக் கொண்டு வரலாம்.

'கலர் காம்பினேஷன்' அமைப்பதில் முன்னணியில் இருப்பதால் என்னை எந்தப் பதிப்பாளரும் மறப்பதில்லை. அட்டைப் படத்தில் எழுத்துகளும் நன்றாக இருக்க வேண்டியது முக்கியம். கலர் பிரிப்பிலும், எழுத்துகளிலும் முக்கிய கவனம் செலுத்துகிறேன்.

அட்டைப்படம் வரைந்து முடிந்ததும் - பிளாக் செய்ய - அட்டைப் படத்தை நெகடிவ் எடுக்கணும். நெகடிவை ஜிங்க் பிளேட்டில் சூரிய ஒளியின் மூலம் குறிப்பிட்ட நேரம் வைத்துப் பதியச் செய்யும் 'எக்ஸ்போஸ்' செய்து, ஆஸிட் ஊற்றி, கழுவி சுரண்டி எடுத்தால் பிளாக் கிடைக்கும்."


"இப்போது ஆப்செட் வந்த பிறகு பிளாக் செய்து - 'கட் கலரில் அட்டைப் படம் பிரசுரிப்பதில் விருப்பம் கொள்வதில்லையே!" என்றோம்.

"உண்மை தான். ஒப்புக் கொள்கிறேன். பிளாக் மேக்கிங் தொழிலை நிறையப் பேர் விட்டு விட்டார்கள். ஆனால் எனக்கு அந்த நிலைமை வரவில்லை. அதற்குக் காரணம் - நூறு பதிப்பகங்கள் இருந்த தமிழ்நாட்டில் இன்றைக்கு முந்நூறுக்கும் மேற்பட்ட பதிப்பகங்கள் இருக்கின்றன. எந்தப் பதிப்பாளரும் மக்களுக்குத் தேவையான நல்ல கருத்துகளைச் சொல்கிற புத்தகங்களை வெளியிடுவதில்லை. அரசாங்க நூலகத்தில் ஐநூறு பிரதிகள் வாங்கிக் கொள்வார்கள். அதிலே நாம் போட்ட முதலீடு கிடைக்கும் என்ற எண்ணத்தில் எதை எதையோ நூலாக்குகிறார்கள். மக்களை நம்பிப் பிரசுரித்தால் நல்ல நூல்களை வெளியிடுவார்கள். இந்த நிலைமை நீடிக்கிறதால் அட்டைப் படம் போடும் தொழிலும், பிளாக் மேக்கிங் தொழிலும் என்னைப் பொறுத்தவரை நலிவடையவில்லை" என்றார் ப. நித்தியானந்தம் என்ற இயற்பெயர் கொண்ட ஓவியர் ஆனந்தன்.

மகள்கள் ஈஸ்வரி, ஸ்ரீதேவி பெயர்களில் 46 ஆண்டுகளாக அட்டைப்படம் வரையும் இவர் சலிப்படையாமல் தன் பணியை ஆத்மதிருப்திக்காக - பணம் மட்டுமே முக்கியமாகக் கருதாமல் - தொடர்ந்து கொண்டே இருப்பதாகக் கூறுகிறார். இவரின் மகனும், இவர் தம்பியும் ஓவியப் பணியிலே இவருடன் ஈடுபட்டுள்ளனர்.

"எழுத்தாளர்களே பதிப்பாளராக வேண்டும் என்பது என் விருப்பம். அப்போது தான் நல்ல நூல்கள் மக்களுக்குக் கிடைக்கும். அரசாங்கத்தை நம்பும் நிலை மாற வேண்டும். நூல்களை விற்கும் நுட்பத்தைத் தெரிந்து கொள்ளாமல் எழுத்தாளர்கள் 'ராயல்டி' சம்பந்தமாகப் பேசுவதில் அர்த்தமில்லை! எழுத்தாளர்களே நூல் விற்பனை நுணுக்கத்தைத் தெரிந்து கொண்டு நூலை வெளியிட்டால் எல்லா எழுத்தாளர்களும் வளமாக வாழ முடியும்."

– நாகராஜகுமார்





இது லேசர் யுகம்!

குறிப்பிட்ட நாள்களுக்குள் ஒரு நூலைத் தயார் செய்ய வேண்டும். அச்சகத்திற்குச் செல்கிறோம். அச்சக அதிபருடன் பேசுகிறோம். அச்சக அதிபர், "ஸார் ஒரு ஃபாரம் (16 பக்கங்கள்) முடிய இரண்டு நாள்களாகும். உங்கள் நூலுக்கு மொத்தம் 12 ஃபாரங்கள் வரும். எல்லாம் முடிய ஒரு மாதமாகி விடும். அதுவும் நீங்கள் உடனுக்குடன் பிழை திருத்தித் தருவதாக இருந்தால் மட்டுமே முடிக்க முடியும்" என்று கை விரித்து விடுகிறார்

ஒரு வாரத்தில் அட்டையுடன் முடிக்கப்பட வேண்டிய அவசரம். 'ஒரு மாதம் ஆகும்' என்கிறார் அச்சக அதிபர். என்ன செய்வது? அந்தக் கவலையைத் தீர்க்க இப்போது இருக்கிறது 'லேசர்'.

இன்று, ஒரு நாளைக்கு ஆயிரம் நூல்கள் தயாராகின்றன, 'லேசர் டைப் செட்டிங்' முறையின் மூலம்.

ஆரம்ப நாள்களில் அச்சுக் குழியில் அச்சுகளை எடுத்துக் கோத்து நீண்ட 'காலி'களாக்கி 'ப்ரூப்' எடுத்துப் பிழைகளைத் திருத்திப் பக்கங்களாக்கி பிரிண்ட் எடுத்து பாரங்கள் தயாராயின. அந்நிலை போயே போச்சு.

கம்ப்யூட்டர் யுகம் நம்முன் வடுருவும் போது அச்சகத் துறையில் நுழைந்ததே 'போட்டோ டைப் செட்டிங்'. இம்முறையில் பெறப்படும் அச்சு எழுத்துகள் 'காலி'களாக ஆர் - 90, ஆர்.சி - 90 பேப்பர்களில் மினுமினுக்கும். எழுத்துகள் மிகத் தெளிவாக இருக்கும். ஆர்-90, ஆர்.சி.90 பேப்பர்களில் அச்சு எழுத்துகள் உருவாக கம்ப்யூட்டர் சாதனத்துடன் ஓர் இருட்டறையும் அவசியம் தேவைப்பட்டது. இந்த போட்டோ, டைப் செட்டிங் என்பது புகைப்படத் தொழில் நுட்பத்தையே அடிப்படையாகக் கொண்டு இயங்கியது. செலவு அதிகம். ஸ்கிரீன் பிரிண்டர்கள், விளம்பர ஏஜென்ஸிகள் இம்முறையை அதிக அளவில் பயன்படுத்தி வந்தனர்.

சில பத்திரிகைகள் அவசரத்தை முன்னிட்டு இம்முறையைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டன. ஆனாலும் பதிப்பாளர்கள் நூல்களை வெளியிட - இம்முறையில் அதிகம் செலவாகும் என்பதால் ஒதுங்கியிருந்தனர்.

ஆப்செட் இயந்திரங்களின் அளவு தமிழகத்தில் பெருகிக் கொண்டிருந்த நேரம் - ஆப்செட் இயந்திரங்களுக்குத் தீனி போட அலைந்து கொண்டிருந்த நேரத்தில் வந்த புயலே, நவீன லேசர்.

இன்று - ஏறக்குறைய எல்லா நூல்களும் லேசர் முறையில் அச்சு கோக்கப்பட்டு - ஆப்செட்டில் ஒத்தி எடுக்கப்பட்டு கையெழுத்துப் பிரதியுடன் வரும் பதிப்பாளர்களுக்கு இரண்டு நாள்களில் நூலே தயாராகி விடுகிறது.

ஜெராக்ஸ் மிஷினின் பெருக்கம் போல் நவீன லேசர் டைப்செட்டிங் பெருக்கமும் வளர்ந்துள்ளது. சதுர அங்குலத்திற்கு 50 காசு என்ற நிலை மாறி - லேசர் டைப் செட்டர்களின் போட்டியின் காரணமாக சதுர அங்குலத்திற்கு 30 காசு வரை கட்டணம் வசூலிக்கிறார்கள்.

ஒவ்வொரு லேசர் டைப் செட்டாளர்களும் குறைந்தது 20-க்கும் மேற்பட்ட எழுத்து வடிவங்களை வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

கையெழுத்துப் பிரதியை அவர்களிடம் கொடுத்து விட்டால் போதும்.

டைப் ரைட்டிங்கில் டைப் செய்வதுபோல் மேட்டரை கம்போஸ் செய்கிறார்கள். டைப் செய்யும் மேட்டர் அழகாக வீடியோ ஸ்கிரீனில் பதிவாகிறது. அவற்றை ஸ்டோர் செய்கிறார்கள். நமக்கு எத்தனை பாயிண்ட் சைஸில் (எழுத்து அளவில்) தேவையோ, எவ்வளவு நீளத்தில் - அகலத்தில் மேட்டர் தேவையோ - அதற்கேற்றபடி கம்ப்யூட்டர் மூலம் கட்டளையிட - கட்டளைகள் அனைத்தையும் வாங்கிக் கொள்ளும் கம்ப்யூட்டர், அழகான அமைப்பில் அச்சுக் கோத்து பிரிண்டர்கள் மூலம் வெளியே தள்ளுகின்றன.



"இதற்கென்று தனியே பயிற்சி தேவையில்லை. டைப் ரைட்டிங் பயிற்சி இருந்தால் போதும். இந்தியாவிலேயே தயாராகும் லேசர் கம்ப்யூட்டர்களின் விலை குறைவான நிலையில் இருக்கின்றன. இதைக் குடிசைத் தொழில் மாதிரி செய்யலாம். அச்சகத் துறையில் ஏற்படும் சிலபல பிரச்சினைகளைத் தவிர்க்க, வீட்டு வேலைகளைச் செய்யும் என் போன்ற பெண்களுக்கு இந்த நவீன லேசர் பிரிண்டிங் தொழில் ஒரு சிறந்த வரப்பிரசாதம்" என்கிறார் கிராஃப்டெக் பிரிண்டர்ஸ் அதிபர், திருமதி. சுதா ரகுராமன்.

பெருகிவிட்ட பதிப்பகத் துறைக்கு 'லேசர் (கம்ப்யூட்டர்) டைப் செட்டிங்' ஈடு கொடுத்து வருகிறது என்று சொன்னால் மிகையாகாது!

-- நாகராஜகுமார்.

பொயட் பிரஸ் இந்தியா

1945-இல் டில்லி அகில இந்திய ரேடியோவில் நாடகம், கதை இலாகாவில் பணிபுரிந்ததை உதறித் தள்ளி விட்டு, சென்ற 50 ஆண்டுகளாக பிரசுரத் தொழிலில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருக்கிறேன்.

அஜந்தா, ராமபாணம், நக்ஷத்திரம் போன்ற என் பத்திரிகைகள் தமிழகத்தில் வேரூன்ற முடியாத நிலையில், பொயட் என்று முழுக்க முழுக்க கவிதைகளையே வெளியிடும் மாதாந்திர ஆங்கிலப் பத்திரிகையை 36 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். உலகில் கவிதை களைத் தாங்கி வரும் ஒரு சில சிறந்த பத்திரிகைகளில் ஒன்று என்று போற்றத்தக்க பெருமையைப் பெற்று விட்டேன். நூறு நாடுகளில் உள்ள முப்பதாயிரம் மகா கவிஞர்களின் உயர்ந்த படைப்புகளைத் தாங்கி மாதா மாதம் தவறாமல் வெளிவருவதால், சர்வதேசப் புகழைப் பெற்று விட்டது. 'பொயட்'டில் வெளியான என் கவிதைகள் ஒரு தொகுப்பாக அச்சிடப்பட்டு, உலகில் உள்ள அத்தனை சர்வகலாசாலைகளிலும், நேஷனல் லைப்ரரிகளிலும், மகா கவிகள் வீட்டிலும் அது இடம்பெற்று உலகக் கவிஞர்களின் ஆறுதலாக, பொக்கிஷமாக விளங்குகிறது.

ஆனால், என் பிரசுரத் தொழிலின் 'எவரெஸ்ட்' நேரம், நான் ஜப்பானின் கவிச்சக்கரவர்த்தி ஐகேடாவை 1979-இல் சந்தித்தது தான். கொரியாவிலிருந்து நான் திரும்பும் போது, இரண்டு கோடி ஜப்பானிய மக்களின் தலைவராக விளங்கும் ஐகேடாவுடன் ஒரு மணி நேரம் உரையாடியதால் அவர் கவிதையைப் பற்றி நான் எழுதிய பொயட் ஐகேடா புத்தகம் ஜப்பானிலேயே 15 லட்சம் யென் செலவில் பல ஆயிரம் பிரதிகள் அச்சாகி இன்று உலகிலேயே அதிகம் படிக்கப்பட்ட விமர்சனப் புத்தகமாக உலா வருகிறது.

உலகக் கவிஞர்கள் எல்லாரையும் ஒன்று சேர்க்கும்



பணியாக, 1990-ஆம் ஆண்டிலிருந்து வருஷா வருஷம் உலகக் கவிதை என்ற தொகுப்பை அச்சிட்டு, இரண்டாயிரம் கவிஞர்களின் கவிதைகளை உலகம் போற்ற வெளியிட்டிருக்கிறேன். எனது இறுதி மூச்சு இருக்கும் வரை இந்தப் பணி நீடிக்கும் என்று நான் நம்புகிறேன். கவிதைத் தொகுப்புக்கு விற்பனை இல்லை என்று பல கவிஞர்கள் குறைப்பட்டுக் கூறுகிறார்கள்.

இதைக் கேட்க நான் வியப்படைகிறேன். இந்த உலகில் பிறந்த அத்தனை பேரும் கவிஞர்கள் தாம். நான், உலக நாடுகளைச் சுற்றி வரும்போது, ஆயிரம் ஆயிரம் கவிதையைப் போற்றும் மேதைகள் என்னை அன்புடன் வரவேற்றிருக் கிறார்கள். எனக்கு ஆதரவு அளித்திருக்கிறார்கள். என்னைப் போற்றியிருக்கிறார்கள்.

ஒரு நடிகனும், ஒரு நர்த்தகியும், ஓர் ஓவியனும், ஒரு பாடகனும், லட்சக்கணக்கான ரசிகர்கள் உள்ளங்களில் புயல் எழுப்பிப் போற்றப்படுகிறார்கள் என்றால், ஒரு கவிஞனால் இதே புகழையும், ஆதரவையும் ஏன் அடைய முடியாது?

ஐம்பது ஆண்டுகளாக சோர்வின்றி உழைத்து இன்று என் 82-ஆம் வயதில் உலகக் கவிஞர்களின் தலைவனாக இருக்கிறேன் என்றால் இந்தப் பெருமையை எனக்கு யார் கொடுத்தது? நான் இயற்றிய கவிதைகளும் பிரசுரித்த கவிதைப் படைப்புகளும் என்னை இந்த உயர்ந்த நிலைக்கு உயர்த்தி விட்டன.

ஆர்வம் வேண்டும்.

விடாமுயற்சி வேண்டும்.

வெற்றியையும், தோல்வியைய சமமாக ஏற்கும் உறுதி வேண்டும்.

இருபத்தி ஒன்றாம் நூற்றாண்

உதயமாக ஐந்தே ஆண்டுகள்

இருக்கின்றன. பிரசுர கர்த்தா களும், இலக்கியப் படைப்பாளிகளு பயங்கரச் சோதனைகளையு வேதனைகளையும் சிந்திக் வேண்டும். அச்சமின்றி, எதையு சமாளிக்கும் உறுதி வேண்டும்.

வருமுன் நம்மைத் தயாரித்து கொள்வதே நல்லது.

இன்றே இலக்கியக் கர்த்தா களும் பிரசுரகர்த்தாக்களும் ஒ சிறந்த திட்டம் தீட்டி வெற்றிக்கு வ தேட வேண்டும்.

அதிக நேரமில்லை. ஒரு புதி பிரசுர சகாப்தத்தை இன்ற இப்பொழுதே உருவாக்க வேண்டு

நிச்சயம் வெற்றி நமக்கு உண்டு

கிருஷ்ண ஸ்ரீநிவாஸ்

ஆசிரிய

பொயட் பிரஸ் இந்தியா

வேளச்சேரி, சென்னை - 4

ஒரே வழி

ஒரு பிரசித்தி பெற்ற நூலாசி ரியருக்கு ஓர் இளம் ஆங்கில எழுத் தாளரிடமிருந்து கையெழுத்துப் பிரதிகள் வந்து சேர்ந்தன. அந்த இளம் எழுத்தாளரைப் பற்றி அந்தப் பிரசித்தி பெற்ற எழுத் தாளர் அதுவரை கேள்விப்பட்டதே இல்லை. அந்த இளம் எழுத் தாளர் தமது எழுத்துக்கு 'வழி காட்டும்படி கோரியிருந்தார்.

பிரபல எழுத்தாளர் அந்தக் கையெழுத்துப் பிரதிகளில் கீழ்க் காணுமாறு எழுதித் திருப்பி அனுப்பி வைத்தார்: "இந்தக் கையெழுத்துப் பிரதிகளுக்கு ஒரே வழி, இவை ஆங்கிலக் கால் வாயில் சரண் அடைவதுதான்!

...டுமையான உழைப்பே எங்கள் வெற்றிக்கு அடிப்படை

இன்று சென்னைப் பெரு ...ரில் பெருமளவில் பெருகிவரும் ...லசர் ஒளி அச்சு முறை ...னிட்களில் தனிப் புகழுடன் ...ளங்கி வரும் வடிவேல் லேசர்ஸ் ...றுவனத்துக்குள் நுழைகிறோம். ...ரே மாதிரியான சீருடை அணிந்த ...ளைஞர்கள் பலர் குறுக்கும் ...நடுக்குமாக அலைந்து கொண் ...ருந்தனர். அவர்களிடம் கேள்வி ...ளைக் கேட்டுப் பதில் பெற்றுக் ...காண்டிருந்தார், அதன் அதிப ...ன சுறுசுறுப்பு மிக்க இளைஞர் ...ந்தரவடிவேல். தன் பெற் ...றாரான டி.குருசாமி, ஜெகஜோதி ...ம்மாள் ஆகியோரின் மீது ...ளவற்ற அபிமானமும் மரியா ...தையும் கொண்டிருப்பதை அவர் ...பச்சில் காண முடிந்தது. அவரி ...ம் சில செய்திகளைத் தெரிந்து ...மிழ்மக்களுக்குத் தெரிவிக்க ...ரும்பி, உரையாடியதில் ...டைத்த தகவல்கள்:

மிகச் சிறிய அளவில் 2 கம்ப்யூட்டர்கள் 1 பிரிண்ட்டருடன் 1989ஆம் ஆண்டில் மிகச்சிறிய ஓர் இடத்தில் தொடங்கிய இவர்களது நிறுவனம் இன்று 7 கம்ப்யூட்டர்கள் 2 பிரிண்டர்களுடன் பெரிய கட்டடத்தில் இயங்கி வருகிறது.

லேசர் யூனிட் தவிர, இது போன்ற லேசர் யூனிட்களை சிறிதாகத் தொடங்கியவர்கள், அவர்களது கம்ப்யூட்டர்கள் திடீ ரென்று பழுதடைந்து விடும்போது படுகிற கஷ்டங்களைக் கருத்தில் கொண்டு, கம்ப்யூட்டர் ரிப்பேரிங் யூனிட் ஒன்றையும் நடத்தி வருகிறார்கள். நகரின் எந்தப் பகுதியிலும் உள்ள கம்ப்யூட்டர் யூனிட்டில் ஏற்படும் பழுதுகளை இவர்களுக்குத் தெரிவித்தால் இதற்கெனவே அமர்த்தியுள்ள உதவியாளர்களை அனுப்பி உடனுக்குடன் சரிசெய்து கொடுத்து அவர்களது சிரமங் களைக் குறைக்கிறார்கள்.

இவர்களுடைய பணியில் மன நிறைவடையும் வாடிக்கையாளர் களின் தொடர்ந்த ஆதரவால் வளர்ச்சியடைந்துள்ள இவர்களது நிறுவனம், தனது இணை நிறுவன மாக ஜி.எம்.எஸ். ஃபர்ம் (G.M.S. Firm) என்ற ஓர் அமைப்பைத் தொடங்கி, கம்ப்யூட்டர் லேசர் யூனிட் அமைப்பை இவர்களே தம் சொந்தப் பொறுப்பில் நிறு வித் தர எல்லா ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் தந்து, முழுமையாக அமைத்துத் தரு கிறார்கள்.

40 பேர் வேலை செய்யும் தன் நிறுவனம் 24 மணி நேரமும் இயங்கித் தனிச்சிறப்புப் பெற்றா லும், இதிலும் நிறைவு பெறாத சுந்தர வடிவேல் "இன்னும் சிறப் பான முறையில் வாடிக்கையாளர் களுக்கு முழு நிறைவைத் தரும் வகையில் சிறு குறையுமின்றி பணிகளைச் செய்து முடித்துத் தந்து தனி முத்திரை பதிக்க வேண்டும். என் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் குடும்பப் பாசத்துடனும் ஆர்வத்துடனும் இளைஞர்கள் குழு இங்கு பணியாற்றி வருவதும் குறிப்பிடத் தக்கது" என்றபோது, 'முயற்சி திருவினையாக்கும்' என்ற குறள் நினைவுக்கு வர, அவரது முயற்சி வெற்றி பெற வாழ்த்தி விடை பெற்றோம்.

— கு.ச

மொழிபெயர்ப்பு மேண்மையானது தான்

ஒரு தலைமுறைக்கு முன்பு தமி...ல் மொழிபெயர்ப்புகள் அதிகமாய் ...ந்தன. மொழிபெயர்ப்பாளர்கள் ...திக்கப்பட்டார்கள். சில பதிப் ...ங்கள் மொழி பெயர்ப்பையே ...திகம் வெளியிட்டன.

இப்போது ஏனோ மொழிபெயர்ப் ...ளர்கள் இரண்டாந்தர எழுத்தாளர் ...ாகக் கருதப்படுகிறார்கள்.

பிற மொழிகளில் அப்படியல்ல. ...ல சிறந்த எழுத்தாளர்கள், ...பல் பரிசு பெற்றோரும் பாரதிய ...னபீடம் பரிசு பெற்றோரும் கூட ...ழி பெயர்ப்பில் ஈடுபட்டிருக் ...ர்கள். நல்ல சிறுகதை நாவ ...சிரியனால்தான், நல்ல சிறுகதை, ...வலை மொழிபெயர்க்க முடியும். ...ல கவிஞனால்தான் ஒரு நல்ல ...விதையை இயல்பாக மொழி மாற்றம் செய்ய முடியும்; அதில் கவிதையழகு காப்பாற்றப்படும்.

அரவிந்தர் நம்மாழ்வாரை, ரவீந் திரர் கபீரை, பாரதியார் ரவீந் திரரை, காந்தியடிகள் ரஸ்கினை, வ.வே.சு ஐயர் ஹியூகோவை, மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

தமிழிலே பிறமொழி எழுத்து மொழி பெயர்ப்பாகும் அளவு, தமிழி லிருந்து பிறமொழிகளில் போவ தில்லையே என்பது ஒரு குறை யாகவே இருக்கிறது. அதனால் தமி ழுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை என்று தேற்றிக் கொள்ளுவோம். மலையாளத்திலும் வங்கத்திலும் பிற மொழி இலக்கியங்கள் வேகமாக மொழிபெயர்ப்பாவதால்தான் அங் குள்ள வாசகரின் அறிவும் இளம் எழுத்தாளரின் தரமும் உயர்வதாகச் சொல்கிறார்கள். ஆங்கிலம் வளர்ந்துவருவதே, பிற எல்லாமொழி எழுத்தும் அங்கே போய் விழுவ தாலேயே அல்லவா?

—டிஎஸ்வி

பெர்னாட்ஷா பதில்!

ஒரு பத்திரிகை நிருபர், பெர்னாட்ஷாவிடம் போய், "எனக்கு ஒரு பேட்டி தரவேண்டும்" என்று கேட்டார். உடனே பெர்னாட்ஷா ஒரு பெருந்தொகையைத் தரும் படி கோரினார். அதற்கு, பத்தி ரிகை நிருபர், "எங்கள் பத்திரிகை யினால் அவ்வளவு பெரிய தொகை யைத் தர இயலாது. சில சிறு எண்ணங்களை மட்டும் பகிர்ந்து கொள்ளுங்களேன்!" என்றார்.

உடனே பெர்னாட்ஷா, "என் னிடம் அத்தகைய எண்ணங்கள் இல்லை! எல்லா எண்ணங்களும் மகத்தானவை!" என்று ஒரு போடு போட்டார்.

புத்தகச் சிந்தனை

தமிழ்ப் புத்தகத் தொழிலில் சில திருப்பங்கள், மாறுதல்கள் தெரிகின்றன. நாலைந்து ஆண்டுகளாக வெளிவரும் நூல்களில் அச்சு அமைப்பிலும் கட்டமைப்பிலும் கூட வித்தியாசமாகத் தெரிவது நல்ல முன்னேற்றமே.

நூலின் உள்ளே இருப்பது கலை, இலக்கியம் என்றாலும் அச்சமைப்பும் விநியோகமும் விற்பனையும் வித்தியாசப்படத் தேவையில்லை. அறிவியலையும் தொழிலறிவையும் நாடும் வாசகர் தொகை பெருகிவருகிறது. நேஷனல் புக் டிரஸ்ட் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடத்திய சர்வேயின்படி பொழுதுபோக்கு இலக்கியம் நாடுவோர்கூட அறிவியலும் தொழிலறிவும் தேடுகிறார்கள். படைப்பிலக்கியம் எழுத்தாளர் சிறப்புக்காக விற்பனையாகிறதென்றால், அறிவியலும் தொழிலறிவும் அவற்றை நாடுவோரின் தேவையைப் பொருத்து விற்பனையாகின்றன. இந்தப் புத்தகங்களின் தயாரிப்பும் படைப்பு அழகும் மெல்லமெல்ல முன்னேற்றமடைந்து வருகின்றன.

கைக்கடிகாரமும், தொலைபேசியும் அலங்காரப் பொருள்களாகக் கருதப்பட்ட காலம் இருந்தது. இன்று அவை அவசியமானவை என்பது அனைவருக்கும் தெரியும். புத்தகமும் கைக்கு 'பூஷணம்' ஆகக் கருதப்பட்டது. அது ஒரு காலம். இன்று எந்தத் துறையின் முன்னேற்றத்துக்கும் அவசியமானது புத்தகம் என்பது புரிகிறது. அது தனது துறையின் வளர்ச்சிக்கும் உதவ வேண்டும்.

ஆம். பிற துறைகளின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் புத்தகங்கள் தயாரிக்கும் துறை பற்றிய நல்ல நூல்களும் ஏடுகளும் இல்லை என்னும் அளவு குறைவு. தமிழில் புத்தகத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பெரும்பாலோர் தற்செயலாக நுழைந்தவர்களே அன்றி, பெரும் வணிக நோக்கத்துடன் வந்தவர்கள் அல்லர். பெரும்பாலும் இவை தனிமனிதரைச் சார்ந்த, அவரது விருப்பு வெறுப்புகள், சௌகரிய அசௌகரியங்களைப் பொருத்த, சிறுதொழில் நிறுவனங்களாகவே உள்ளன. முதலாளியேதான், பதிப்பாசிரியர். அவரே மேலாளர், அவரே விற்பனையாளர், அவரே பொதுமக்கள் தொடர்பாளர். பெரும் நிறுவனங் களில் தனித்தனி இலாகாத் தலைவர்கள் செய்வதை இவர் ஒருவரே பார்த்துக் கொள்கிறார்கள்.

இதுபோல தனிமனிதரை நம்பியே உள்ள பிற துறைகளில் சிறு தொழில்களான பட்டுத் துணித் தயாரிப்பிலும் பால் பண்டங்கள் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளவர்கள் தமது மொத்த வி

உழைப்பு அதிகம்; ஊதியம் குறைவு:

புத்தகங்களை சிலிண்டர் மெஷினில் அச்சிட்டாலும் சரி, அழகான ஆப்செட்டில் அச்சிட்டாலும் அதற்கு இறுதி வடிவம் தந்து அழகுற முழுமைப்படுத்துவது பைண்டிங் தொழில். இத்தொழிலில் ஈடுபட்டுள்ள இளைஞர் திரு.வி.ஜீவரத்தினம் (வேல்சன்ஸ், 86, காமராஜ் காலனி, சென்னை-24) அவர்களைச் சந்தித்தோம்.



தன்னுடைய வேலைகளுக்குத் தடையில்லாமல், வேலையைச் செய்து கொண்டே கேள்விகளுக்கு விடையளித்துக் கொண்டிருந்தார்.

"சற்று நேரம் ஓய்வெடுத்து எனக்குத் தேவையான விவரங்களைச் சொல்லிவிட்டுச் செய்யலாமே! ஏதும் அவசரமா?" என்றேன்

"அவசரம் மட்டுமல்ல சார்! அவசியமும் கூட!" என்றார்.

புரியாமல் புருவங்களை உயர்த்தினேன். எனக்குப் புரியவில்லை என்பதை அவர் புரிந்து கொண்டு விளக்கினார்:

"சார்! எங்கள் தொழில் அப்படி. புத்தக உற்பத்தித் தொழிலிலேயே மிகக்குறைவான கூலி கிடைப்பது எங்களைப் போன்ற பைண்டர்களுக்குத் தான். நாங்கள் வாங்கும் கூலியிலே வேலைக்கு ஆளெல்லாம் வைத்துச் செய்தா எதுவுமே மிச்சம் ஆகாது. கட்டிங் மெஷின், கட்டர் அட்வான்ஸ் இதுக்கு நாங்க முதலீடு செய்திருக்கிற தொகைக்கு வட்டி கூடத் தேறாது. இங்கே பாருங்க எங்க அம்மா, தம்பிகள் தங்கை எல்லாரும் சேர்ந்துதான் இந்தத் தொழில்லே ஈடுபட்டிருக்கோம்.

"இதிலே, கிடைக்கிற கூலி எங்க குடும்பத்திற்கு ஆகிற செலவுகளை ஓரளவு சரிக்கட்டத் தான் உதவுதே தவிர, இதை நம்பி எதையும் பெரிதா நாங்க எதிர்பார்க்க முடியாது. அதனாலே ஓய்வு என்றெல்லாம் எடுத்துக் கிட்டு, வேலைக்கு ஆள் வைக்க முடியாது. அப்படி ஆள் வைத்துச் செய்கிறவர்களுக்கு இதை விடக் கஷ்டம்தான்.

பீடி சுத்தறவங்களுக்குக் கூட கட்டுபடி ஆகக் கூடிய ஒரு கூலியை அரசாங்கம் நிர்ணயம் செய்து தரும்போது எங்கள் பிரச்சினையையும் அரசாங்கம் கவனிச்சா நல்லது."

என்றவரின் உள்ளக் குமுறலை அவர்முகம் நன்றாகவே எடுத்துக் காட்டியது.

"இருந்தாலும் சார்! "வாழும் போதே ஒரு வரலாறு'ன்னு ஒரு புத்தகம் பைண்ட் செய்தோம். அதுக்கு அரசாங்கப் பரிசு கிடைச்சதுன்னு கேள்விப்பட்டு, எங்களுக்கே கிடைச்சமாதிரி சந்தோஷப்பட்டோம்" என்றவரின் குறைகள் இனிமேலாவது நீங்கட்டும் என்ற எண்ணத்துடன் விடைபெற்றோம்.

சந்திப்பு: கு.சண்முகசுந்தரம்

னையைக் கூட்டுறவு முறையில் லாபகரமாக நடத்திவருவது பால, தமிழ்ப் புத்தகத் தயாரிப் ளரும் விற்பனையை மட்டு வது கூட்டமைப்பாகச் செய க்கிப் பயன்பெற வேண்டும். வ்வொரு பதிப்பாளரும் இன் றய நிலையில் காட்சிக்கும் விற் னைக்கும் பாடுபட வேண்டி ருக்கிறது. நேரமும் பொருளும் யற்சியும் கடை இடமும் ஒவ் வாருவருக்கும் செலவாகின்றன. த்தகம் வாங்குவோரும் பல டங்களுக்கு அலைய வேண்டி ருக்கிறது. இதைத் தவிர்த்து, தே முயற்சியிலும், செலவிலும் வட்டத் தலைநகரம் போன்று மிழ் நாட்டில் முக்கியமாக நூறு டங்களில் எல்லாப் பதிப்பாள ள் எல்லாப் புது நூல்களும் டைக்கும் வகை செய்தால் ட்டுறவு அங்காடி மூலம் புது ல்கள் வாசகரை உடனடியாக ட்டும். தமிழ்நாட்டுக்கு வெளியே ள்ள வாசகரையும் அது எட்ட ண்டும்.

வடக்கேயெல்லாம் தமிழ்ப் த்திரிகை விற்பனை பற்றிக் ட்டுப் பிரமித்துப் போகி ர்கள். 'ஆறு லட்சம் நாலு லட்சம் ன்று பத்திரிகை விற்றால் ங்கே புத்தகங்கள் நாலாயிரம் யிரம் பிரதிகள் சுலபமாக ற்றுப் போகுமே" என்கிறார்கள். ல்லையே! தமிழ் வாசகர்களின் ங்கும் சக்தியை எல்லாம் பத்தி கைகள் உறிஞ்சிக் கொள்கின் ன. அவன் படிக்கும் நேரத்தை ல்லாம் கூட பத்திரிகைகளே த்து விடுகின்றன. எனவே னுக்குப் புத்தகம் வாங்கும் தியும் அதைப் படிக்க நேர ம் இல்லாது போகிறது. எனவே மிழ் வாசகனுக்குப் புத்தகம் லம் பெறவேண்டியது அனைத் யும் பத்திரிகை வாயிலாகவே டுத்து விடுகின்றனர் நல்ல ரியர்கள். நல்ல பதிப்பாளரோ வைபோன்ற விஷயங்கள் முத ல் பத்திரிகையில் அச்சான து. அதைத் தமது வெளியீட்டு ல்களாக வெளியிடுகிறார்கள். டைப்பிலக்கியத்திலும் அறி யல் நூல்களிலும் எதிர்பாராத ரும் விற்பனைச் சாதனைகள் ழ்வதுண்டு. லட்சம் பிரதி க்கு மேல் ராஜாஜியின் 'வியாசர் விருந்து' விற்பனை யாயிற்று என்றால், சுஜாதாவின் 'எது ஏன் எப்படி' என்ற அறி வியல் நூல் நாற்பதாயிரம் பிரதிகள் விற்று, சாதனை படைத் தது. இவை இரண்டுமே பத்தி ரிகைத் தொடராக வந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர்களும் நூலகர் களும் புத்தக விற்பனையாளர் களும் வாசகர்கள் போக்கைக் கவனிப்பவர்கள், எது விரும்பப் படுகிறது என்பதும், எது தேவை என்பதும் தெரிந்தவர் இவர்கள். இவர்கள் தமக்குள் உறவாட ஓர் அமைப்பும், அவர்கள் கருத்து களையும் அனுபவங்களையும் சொல்ல ஓர் ஏடும் இராதது தமிழிலே பெருங்குறை. தமிழ்ப் புத்தகங்கள் அனைத்துக்கும் விரி வான விவரம் நிறைந்த பட்டியல் தயாரிக்கும் வேலையும் நடைபெற வேண்டும்.

பத்திரிகை எழுத்துக்கும் புத்தகத்துக்கும் மதிப்பில் பெரும் வித்தியாசம் உண்டு. புத்தகத் தின் பொறுப்பு பெரியது. அதில் தவறே சிறிதளவும் வரலாகாது. பத்திரிகையில் தவறு நேர்ந்து விட்டால் அடுத்த இதழிலேயே ஒரு மறுப்போ பிழை திருத்தமோ போட்டுவிடலாம். புத்தகம் எனத் தயாரான ஒன்றை, அது தொகுப் பானாலும், புதிதாக எழுதப்பட்ட தாயினும், அதனைச் சரிபார்க் காமல் செப்பனிடாமல் அச்சுக்கு விடலாகாது. 'எழுதிய பின்னர், அச்சுக்கு முன்னர்' செய்ய வேண்டிய பணிதான் பதிப் பாசிரியர் பணி. இன்று தமிழ் நூல்கள் பலவற்றிலும் கவனிக்கப் படாத ஒன்று இது.

வெளி அமைப்புகளான காகிதம், மை, அச்சு, அட்டை கட் டமைப்பு, (பைண்டிங்) போன்று, உள்ளடக்கமான எழுத்து பொருள் – தெளிவு போன்ற வற்றிலும் அக்கறை எடுத்துக் கொள்ளப் பழகுவோமாக.

பதிப்புத்துறையிலும் புத்தக விற்பனையிலும் புதுப்புது சோதனைகள் செய்து பார்த்து, சமுதாயத்தின் பல துறைகளும் வளர உதவும் நூல்கள் நிறைய நன்கு பரவ உதவுவோமாக.

இந்தத் துறையிலும் நல்ல வேலை வாய்ப்பு உண்டு என இளைஞர்களை முறையாகப் பழக்குவோமாக.

— தம்பி சீனிவாசன்


சின்னச்சின்ன ஆசை

புத்தகத் துறையில் நல்ல வாசகர்களின் சின்னச்சின்ன ஆசைகள் :

❋ உலகம் எங்கும் உள்ளது போல தமிழ் நூல்களும் டெம்மி அளவில் அச்சாக வேண்டும். நழுவி வழுக்கி விடும் ஜாக்கெட் போல் இல்லாமல் உறுதியான அட்டையுள்ளதாக இருக்க வேண்டும். சிதறாத பைண்ட் செய்யப்பட்ட நூல்கள் வேண் டும்.

❋ எல்லாப் பதிப்பாளர் களும் வெளியிடும் எல்லா நல்ல நூல்களும் கிடைக்கும் புத்தகக் கடைகள் ஊர்தோறும் இருக்க வேண்டும்.

❋ பாரதி, பாரதிதாசன், புதுமைப்பித்தன், கல்கி, சாண் டில்யன், ஜானகிராமன் என்று எத்தனைபேர் எத்தனை நூல்கள் எழுதியிருக்கிறார்கள். இவையெல்லாம் ஒரே அளவில் ஒரே தரத்தில் 'கம்ப்ளீட் ஒர்க்ஸ்' என்று சொல்லும்படி கிடைக் காதா? யாராவது முயலமாட் டார்களா?



❋ அகராதி, அட்லஸ், புள்ளி விவர நூல்கள் வெளி யாகும் பழக்கமும் அவற்றைப் பயன்படுத்தும் பழக்கமும் அதிகமாக வேண்டும்.

—டிஎஸ்வி

பூபாளத்திற்கொரு புல்லாங்குழல்

பதிப்பாளர் - ஆர். செல்வ ராஜ், வள்ளலார் குருகுலம், வடலூர், விலை ரூபாய் 80/-.

முதலில் என் கண்ணில் பட்டது.

கடவுள் இல்லை
என்பதைக் கூட
பிள்ளையார் சுழி
போட்டுத்தான்
எழுதுகிறோம்.

- இது உடனே என்னை வசீகரம் பண்ணிவிட்டது.

மனிதனின் 'உள்ளொன்று புறமொன்று' பலவீனத்தை ஐந்து வரிகளில் 'சூத்திரம்' போன்று அடக்கிவிட்டார் திரு. இறையன்பு.

பிறகு பக்கங்களைப் புரட்டினேன்.

ஆச்சரியம்! மனித சமூகத்தின் ஒரு யூனிட்! என்னையே என்னால் பார்க்க முடிந்தது. நானும் சராசரி மனிதன்! என் சுபாவங்களுக்குக் கண்ணாடி பிடிப்பது போல் அவர் கவிதைகள் குமிழ்ந்து வந்துள்ளன.

இங்கே புல்லுக்கே
போய்ச் சேர
வேண்டுமென்பதற்காகவே
நெல்லுக்கு
நீர் திறந்து விடப்படுகிறது.

மனிதனின் வணிகமய வாழ்வுக்கு முன்னால் கவிஞர் கண்ணாடி வைத்துவிட்டார். ஔவையார் நேரில் வந்தால் கவிதையை, குதர்க்கம் என்று சொல்ல மாட்டார். கண்ணாடியில் சமூகத்தைப் பார்த்து வெட்கப்படுவார்.

சாதாரண சிறு நிகழ்ச்சிகள் கூட கவிஞரின் கண்ணில் எப்படிப்படுகிறது?

எரியாத மின் விளக்கை
ஏளனம் செய்தது நாய்
தன் பின்னங்காலைத் தூக்கி!

அடேயப்பா! எத்தனை அர்த்தங்கள் எடுத்துக் கொள்ளலாம் இதில்! கண்ணாடியில் ஒரு காட்சி இல்லை; பல காட்சிகள் தெரிகின்றன.

'காலம் ஓரு கற்பனை'யில் ஒரு கதையே இருக்கிறது.


கையில் பஞ்சுப் பொதியுடன் ஒரு கிழம்! என்று அது முடியும் போது அந்தக் கதைக்கு 'ஓ, ஹென்றி' முடிவு கிடைக்கிறது.

பெண் பார்க்கும் படலத்தில் பெண்ணிடம் ஐ.எஸ்.ஐ. முத்திரையைத் தேடுவது அற்புதக் கற்பனை வீச்சு!

பட்டி மன்றத்தில் இன்னும் கண்ணகி, சீதைகளையே தேடுவதை என்ன நாசுக்காக எடுத்துக் காட்டுகிறார்!

சமூக முரண்பாடுகளைப் பற்றி மட்டுமல்ல.

சுமைக்கு ஆள் தேடியவன், ஆளையும் சேர்த்துச் சுமக்கிறான் என்பதில் எத்தகைய



தத்துவமும் ஆழமும் தெரிகின்றன?

காதல் பற்றி விவேகானந்தர் கூறும்போது -

The two trying to express themselves as one is called Love.

என்கிறார்.

இங்கே என்ன மன ஒற்றுமை! கவிஞர் கிட்டத்தட்ட அதே கருத்தை

இரண்டு உதடுகள்
அதிர்ந்தன
ஒரு சொல்லை
உச்சரிக்க!

என்கிறார்.

மற்றொன்று:

உனது பெயரை
மீண்டும் மீண்டும்
உச்சரித்த பொழுதுதான்
இனிப்புக்கு இன்னோர் அர்த்தம்...

இருப்பதையே நா உணர்கிறது! என்று கூறும் இவர் உள்ளத்தில் எத்தகைய 'காதல் ஊற்றுப் பெருக்கு'!

குண்டலினி பற்றிக் கூறும் பெரியவர்கள் அந்தச் சக்தி கிளம்பியதும் மனம் விரிந்து மலரும், அதிலிருந்து கவிதை பூப்பூவாக உதிரும் என்று கூறுகிறார்கள்.

இந்தக் கவிஞருக்கு அந்த Psychic disturbance நேர்ந்துள்ளது.

இறையன்புவிடம் இறையும் இருக்கிறது; அன்பும் இருக்கிறது.

நிறையப் பாரிஜாதங்கள் இவரிடம் மலரப் போகின்றன.

இவர் பெயருக்குப் பின்னால் இ.ஆ.ப. எழுத்துகளைப் பார்க்கும் போது தமிழ் அரியாசனங்களில் ஏறி வருகிறது என்பது நிச்சயம் புலனாகிறது.

—புஷ்பா தங்கதுரை

பதிப்புக் கலை

டாக்டர் மு.வரதராசனார்

நூலாசிரியர் தம் நூலை எழுதி முடித்து நூலும் ஒரு பெயரும் தந்து அந்தக் கையெழுத்துப் படியை (அல்லது டைப் அடித்த படியை) தம் மேசைமேல் வைத்துப் பூரிப்புடன் காண்கிறார். அதை வெளியிட முன் வந்தவர் அதற்கு உரிய காகிதத்தை வாங்கி அச்சகத்துக்கு அனுப்பிவிட்டு, நூல் விரைவில் அச்சாகி வெளிவர வேண்டும் என்று ஆவல் கொள்கிறார். இந்த நிலையில் இவருடைய வேட்கையையும் தீர்த்து வைக்க முன்வருபவரே பதிப்பாசிரியர். அவருடைய திறமையே பதிப்புக் கலையாகப் போற்றப்படுகிறது.

போதுமான வளர்ச்சி இல்லாத நாட்டில் நூலாசிரியரே பதிப்பாசிரியராக இருப்பதும் உண்டு; அவரே வெளியிடுபவராக அமைவதும் உண்டு. எவ்வாறு ஆயினும் ஆகுக; ஒரு நூலை எழுதி முடித்தவன் அதற்கு அழகான வடிவம் கொடுத்து வெளி வரச் செய்யும் கலையே பதிப்புக் கலையாகும்.

பதிப்பாசிரியர்க்குப் பல துறையிலும் அறிவு வேண்டும். நூலின் பொருளுணர்ந்து போற்றும் புலமையும் ஓரளவு வேண்டும். அச்சகத்தில் உள்ள எழுத்து வகைகளைப் பற்றியும் அச்சிடும் முறைகளைப் பற்றியும் ஓரளவு அறிவும் வேண்டும். நூலை வாங்கிப் படிக்கும் மக்களின் மன நிலையும் அழகுணர்ச்சியும் பற்றிய அனுபவமும் ஓரளவு அறியாதவரானால், பிழை பல நேரும்; அச்சகம் பற்றி ஒன்றும் அறியாதவரானால், இடர் பல நேரும்; மக்களின் அழகுணர்ச்சியும் மன நிலையும் உணராத வரானால், உழைப்பு வீணாகும்.

நூலாசிரியரில் சிலர் செய்வன திருந்தச் செய்யும் பண்பு உடையவராக இருப்பார்கள். அவர்கள் எழுதிய நூல்களில் பாகுபாடுகள் தெளிவாக அமைந்திருக்கும். அந்த நூல்களைப் பதிப்பித்தல் எளிய முயற்சியாகும். எழுதும்போதே அவர்கள் பேரா முதலியவற்றைத் தெளிவாக அமைத்து எழுதியிருப்பார்கள். உரையாடலாக வரும் பகுதிகளில் மேற்கோள்குறி (marks of quotation) முதலியவற்றைத் தெளிவாக இட்டிருப்பார்கள். காற்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வியப்புக்குறி, வினாக் குறி முதலியவற்றிற்காகப் பதிப்பாசிரியர் கை வைக்கவேண்டிய வேலையே இருக்காது. இல்லையேல், நூலாசிரியர் எழுதிய நூலை முற்றினும் படித்து பேரா முதலியவற்றைப் பிரித்து, குறியீடுகளை அமைத்த பிறகே அச்சகத்துக்கு அனுப்ப வேண்டும்.

செய்யுள் அடிகளை மேற்கோளாகக் காட்டும் நூல்களில், அவை உரைநடையோடு கலந்து படிப்பவர் கண்ணுக்குப் புலப்படாமல் இருப்பதைவிட, பேராவின் இடையிலே தனியே தெளிவாகத் தோன்றுமாறு இடம் விட்டு அச்சிடுமாறு குறிக்க வேண்டும். பாட்டுக்கும் உரைநடைக்கும் வேறுபாடு இல்லாமல், ஒரே பேராவில் இரண்டும் கலந்து போகுமாறு பதிப்பித்தல் நல்லது அன்று. பாட்டு மட்டும் அல்லாமல் உரைநடையில் அமைந்த நீண்ட மேற்கோளையும் அவ்வாறே இடம் விட்டுத் தெளிவாய்ப் பதிப்பிக்கலாம். அவ்வாறு செய்வதால், நூலைப் படிப்பவரின் கண்களை மட்டும் அல்லாமல், உள்ளத்தையும் கவரமுடியும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பதிக்கப்பட்ட பழைய நூல்கள் பல வற்றில் இந்தத் தெளிவு இல்லை. அவற்றை இன்று ஒருவர் கையில் தந்து படிக்கச் செய்தால், அவர் படும் துன்பத்தைக் காணலாம். ஒரு பக்கத்தில் தொடங்கிய அத்தியாயம், ஒரே போக்கில் வரி வரியாக நீண்டு, பக்கம் பக்கமாகத் தொடர்ந்து நிற்கும். படிக்கத் தொடங்குகின்றவர் எங்கே நிற்பது, எங்கே முடிப்பது என்றே விளங்காமல் நீண்டு செல்வதால், படிப்பின் இன்பம் குறையும். அந்த நிலையிலும் முன்னோர்கள் பல நூல்ளை ஆழ்ந்து கற்றார்களே என்றால், அது அவர்களின் பொறுமையையும் உழைப்பு மிகுதியையும் காட்டுகின்றது. நூலின் அமைப்பு நலத்தைக் காட்டவில்லை எனலாம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே மக்களுக்கு இருந்த அமைதி இக்காலத்து மக்களின் வாழ்வில் இல்லை. ஆகவே நூலின் பொருளை மட்டும் அல்லாமல், அமைப்பையும் எளிமையுடையதாகவும் கவர்ச்சியுடையதாகவும் செய்து காட்ட வேண்டியுள்ளது. இன்றைய செய்தித்தாள்கள் கொட்டை எழுத்துத் தலைப்புகளையும் உட்பகுதித் தலைப்புகளையும் இட்டுச் செய்திகளை வெளியிட வில்லையானால், பலரும் அவற்றைப் பொறுமையோடு படிக்க முடியுமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். வேறு வேலையில்லாமல் உண்டு உண்டு உறங்குபவர்கள், இப்படிப்பட்ட பாகுபாடுகள் இல்லாமல் செய்தித்தாள்கள் வெளியிட்டாலும் மணிக்கணக்காக அமர்ந்து படிக்க முடியும். பல கடமைகளின் நெருக்கடி மிக்கவர்க்கு முடியாது. அது போலவே வாழ்நாளில் ஓய்வுடன் சில நூல்கள் மட்டும் படிப்பவர்க்கு நூலை எப்படிப் பதிப்பித்தாலும் பொறுமையுடன் படிக்க முடியும். பல கடமைகளுக்கு இடையே பல நூல்களைப் படிக்க வேண்டியவர்க்கு, நல்ல பதிப்பாக இருந்தால்தான் முயற்சி எளிதாகும்; சோர்வு இல்லாமல் படித்தல் முடியும்.

மேலே குறித்தது, படிப்பவரின் கண்ணையும் மனத்தையும் பொறுத்து எளிமையாக்கும் முயற்சி

1957ஆம் ஆண்டு 'அமுதசுரபி' அக்டோபர் இதழ் புத்தகத் தொழில் மலராக வெளிவந்தது. அந்த மலரில் சிறப்புக்கட்டுரையாக வெளிவந்த டாக்டர் மு.வ. அவர்களின் கட்டுரையை இந்த மலரில் வெளியிடுவதில் பெருமையடைகிறோம். 40 ஆண்டுகளுக்குப் பிறகும் அவர் கருத்து இன்றைக்கும் பொருந்துவதை உணரலாம்.

யாகும். படிப்பவரின் அழகுணர்ச்சியைக் கருதி அவர் கவர்ச்சியூட்டும் வகையில் பதிப்பிக்கும் முயற்சியும் உள்ளது. அந்த முயற்சியை மேற்கொள்பவர்க்கு, அச்சுக் கலையின் அறிவு ஓரளவு வேண்டும். வேகமாகப் படித்து முடிக்கக் கூடியவாறு விறுவிறுப்பாக அமைந்த சுவையான நூலாக இருந்தால் எந்தச் சிறு எழுத்தில் அச்சிட்டாலும் குறை இல்லை; படிப்பவர் ஓர், இரு நாளில் கதையைப் படித்து முடித்து விடுவார்கள். ஆனால், சிந்தித்து உணரத்தக்க கட்டுரை நூலாகவோ, இலக்கிய ஆராய்ச்சி நூலாகவோ, விஞ்ஞான நூலாகவோ இருந்தால், எந்த எழுத்தில் அச்சிடுவது என்று ஆராய்ந்து அச்சுக்குக் கொடுக்க வேண்டும். மூளைக்கும் துன்பம், கண்ணுக்கும் துன்பம் என்று இருவகைத் துன்பமும் கொடுத்தல் தவறு. மூளைக்குத் துன்பமான முயற்சியாக சிந்தித்துப் படிக்கும் பொருளாக - இருந்தால், கண்ணுக்காவது துன்பம் இல்லாமற் செய்ய வேண்டும். ஆகவே அழகான எழுத்து, பெரிய எழுத்து தெளிவான எழுத்து (types) என்று அச்செழுத்துகளில் நல்லவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றில் அச்சிடுமாறு செய்ய வேண்டும். பழகிப்போன பழைய எழுத்தில் அச்சிடுவதைவிட புதிதாக வந்துள்ள எழுத்துனைக் கொண்டு அச்சிடுவதும் ஒரு வகைக் கவர்ச்சியாகும். 10 பாயிண்ட், 11 பாயிண்ட், 12 பாயிண்ட் என்று அச்சகத்தில் எழுத்துகளில் பல வகை உண்டு. குறிப்பிட்ட அச்சகத்தில் என்ன என்ன எழுத்துகள் உண்டு என்று அறிந்த பிறகு அவற்றில் நல்லவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுத்த பிறகு வாங்குவோரின் பண நிலையையும் விற்பவரின் மன நிலையையும் ஓரளவு ஆராய்ந்து உணர வேண்டும். டி.எஸ். எலியட் என்னும் ஆங்கில அறிஞரின் ஒரு நாள் சொற்பொழிவு எழுபது எண்பது பக்கங்கள் கொண்டதாய், பெரிய பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டதாய், ஏழு எட்டு ரூபாய் விலை வைத்து விற்கப்படுகிறது. அதுவும் பல்லாயிரக்கணக்காக அச்சிடப்பட்டுப் பரவுகிறது. தமிழ் நாட்டில் அதைப் பின்பற்றிச் செய்வது இயலாது. இந்த நாடு வறுமைமிக்கது; இந்த மொழி சிறுபான்மையோர் (மூன்று கோடி மக்கள்)பேசுவது, அவர்களிலும் படித்தவர்கள் குறைவு; படித்தவர்களிலும் புதிய புத்தகங்கள் வாங்கிப் படிக்கும் பழக்கம் உடையவர்கள் குறைவு; ஆகவே ஆங்கிலேயரைப் பின்பற்றி இங்குச் செய்தல் அரிது. பெரும் புகழ்பெற்ற சிலருடைய நூல்களை வேண்டுமானால் அவ்வாறு அச்சிடலாம்; அவையும் ஓராயிரம் படிகளுக்கு மேல் செலவாவது அரிது. வாங்குவோரின் பொருள் நிலையைக் கருதினால், இந்த நாட்டில் இரண்டு ரூபாய்க்கு மேற்பட்ட விலையுள்ள நூல்கள் விற்பனையாவது பெருமுயற்சியாகும். வெளியிட்டு விற்பவரின் மனநிலையையும் கருத வேண்டும். அவர்களில் பலர் ஐயாயிரம், ஆறாயிரம் என்ற அளவில் முதல் வைத்துத் தொழில் நடத்துவோர் ஆகையால், ஐந்து, ஆறு ஆண்டுகளில் விற்க முடியும் நூல்களானாலும் அவற்றை வெளியிட முன்வரமாட்டார்கள். ஏழு எட்டு ரூபாய் விலையுள்ள புத்தகம் ஆயிரம் படி விற்பனையாகி முடிவதற்கு அத்தனை ஆண்டுகள் ஆகின்றன. இரண்டு ரூபாய்கு உட்பட்ட புத்தகங்களில் ஆயிரம்படி ஓராண்டில் விற்பனையாவது எளிது. ஆகவே அந்த விலையில் புத்தகங்கள் வெளியாவதையே அவர்கள் விரும்புகின்றனர். அதனால் முந்நூறு பக்கமாக அச்சிட்டுப் பெரிய நூலாக்கு வதை விட, நூறு பக்கமாக அச்சிட்டுச் சிறு நூலாக்கி ஒரு ரூபாய் ஒன்றேகால் ரூபாய்க்கு விற்கும் முயற்சியையே விற்பனையாளர் போற்றுகின்றனர். ஆகவே சிறு எழுத்துகளில் அச்சிடுவதையே பதிப்பாசிரியர் இந்த நாட்டில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அவ்வாறு பதிப்பாசிரியர் தாம் பதிக்கும் நூலுக்கு இன்ன எழுத்து என்று தேர்ந்தெடுத்து, அச்சகத்துக்குத் தெரிவிக்க வேண்டியது முதல் கடமையாகின்றது. அதன் பிறகு, தலைப்புகளுக்கு இன்னவகை எழுத்து, இடையிடையே வரும் செய்யுளடிகளுக்கு இன்ன வகை எழுத்து, மேற்கோளாக அமையும் உரைநடைப் பகுதிகளுக்கு இன்ன எழுத்து, அடிக் குறிப்புகள் இருந்தால் அவற்றிற்கு இன்ன வகையான சிறு எழுத்து என்று எல்லாவற்றிற்கும் தெளிவான - குறிப்புகள் தரவேண்டும். பதிப்பாசிரியர் இவற்றைப் பற்றி ஒன்றும் தெரியாவிட்டால், அச்சகத்தார் இட்டதே சட்டமாகும். சில சிறந்த அச்சகங்களில் அச்சகத்தார் தம் அனுபவத்தைக் கொண்டு தக்க எழுத்துகளைத் தேர்ந்து அமைப்பதும் உண்டு. அப்போது பதிப்பு முயற்சி குறைகிறது.

கண்ணுக்குக் கவர்ச்சியூட்டும் வகையில் இன்னும் சில முயற்சிகளும் உண்டு. ஓரம் (மார்ஜின்) விடுதல் எவ்வளவு, பக்கத்திற்கு எத்தனை வரிகள் அமைப்பது, வரிகளுக்கு இடையில் எவ்வளவு இடம் வேண்டும். (எழுத்துகளுக்கு இடையே லெட் வேண்டுமா, வேண்டாமா, எத்தகைய லெட், ஒன்றா, இரண்டா) முதலியவற்றைக் கவனித்துச் செய்வதிலும், பதிப்பின் அழகை வளர்க்க முடியும். நூலின் தொடக்கத்தில் எத்தனை வரிகள் விடுவது, அதிகாரம் (அத்தியாயம்) தொடங்கும்போது எத்தனை வரிகள் விடுவது என்றும் பதிக்கும்போது கவனிக்க வேண்டும். நூலின் வலப் பக்கத்தின் தலைப்பில் நூலின் பெயரும், இடப்பக்கத்தின் தலைப்பில் அதிகாரத்தின் பெயரும் ஒவ்வொரு பக்கத்திலும் அமைவது உண்டு. அந்தப் பக்கத் தலைப்பின் கீழே கோடு இட்டு அதை எடுத்துக் காட்டுவதும் ஒரு முறை. கதை நூல்கள், சிலவற்றில் பக்கத் தலைப்பு இல்லாமலே விடுதலும் உண்டு. பக்க எண்களை எங்கே குறிப்பது என்பதிலும் வேறுபாடு உண்டு. இடப் பக்கத்தின் இடது ஓரத்திலும் வலப் பக்கத்தின் வலது ஓரத்திலும் பக்க எண்களைக் குறிப்பது பொதுவான வழக்கம். அதை மாற்றுவதன் வாயிலாக ஒரு புதுமை காட்டும் முயற்சியும் உண்டு. பக்க எண்களை மேற்பகுதியில் குறிக்காமல் அடியில் குறிப்பதும் உண்டு. 16,17 என எண்களால் குறிக்காமல் பக்கம் பதினாறு, பதினேழு என எழுத்துகளால் குறிப்பதும் புது முறையாகச் சிலரால் கையாளப்படுகிறது. புதுமை என்று காரணம் இல்லாமல் சிலவற்றைக் கையாள்வதைவிட, ஏதேனும் ஒரு பயன் கருதி மாறுதல் செய்வதே நல்லது.

இந்தக் குறிப்புகளை எல்லாம் கொண்டு அச்சகத்தார் அச்சிட்டுப் புரூப் (Proof) அனுப்பும்போது, பதிப்பாசிரியரின் பொறுப்பு மிகுதியாகின்றது. கையெழுத்துப் படியாக நூலைப் படிக்கும்போது, சில குறைகள் கண்ணிற்படுவதில்லை. அச்சு வடிவில் பார்க்கும்போதுதான் சில குறைகள் தென்படும். ஆகவே பக்கப் புரூப் அல்லது பாரம் புரூப் என்னும் வடிவில் வரும்போது, பதிப்பாசிரியர் அக்கறையோடு கவனித்துக் குறைகளைப் போக்க வேண்டும். நூலாசிரியர் சில சொற்களைச் சேர்த்து எழுதியிருப்பார். அச்சகத்தார் அவற்றைப் பிரித்து அச்சிடுவார்கள். அவ்வாறே அவர் பிரித்து எழுதிய சொற்கள் அச்சில் சேர்த்துக் காணப் படுவதும் உண்டு. சில இடங்களில் நூலாசிரியர் எழுத்தில் உள்ள குறைகள் அச்சிலும் அவ்வாறே வருவது உண்டு. 'தமிழன்' என்று ஒரு வரியில் முடிந்து, அடுத்த வரியில் 'பர் மாநாடு' என்று கையெழுத்துப்படியில் இருக்கும். அச்சுப் படியில் ஒரே வரியில் தமிழன் 'பர்மா நாடு' என்று வந்திருக்கும். தமிழன்பர் கூடிய மாநாடு தமிழனுடைய பர்மா நாடாக மாறும் விந்தைபோல் பல பிழைகள் நேர்வது உண்டு. ஆகவே, புரூப் பார்க்கும்போது, எழுத்துப் பிழைகளை மட்டும் பார்ப்பதோடு நிற்காமல், சொற்களைப் பிரித்து அமைக்கும் முறையையும் கவனிக்க வேண்டியுள்ளது.

தடுத்துக் கொண்டார்

தடுத்துக்கொண்டார்

எழுந்து விட்டார்

எழுந்துவிட்டார்

முதலான தொடர்கள் பல, சொற்கள் சேர்ந்து அமைந்தால் ஒருவகைப் பொருளும் பிரிந்து அமைந்தால் மற்றொரு வகைப் பொருளும் தருகின்றன. ஆகவே பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏற்ற வகையில் சேர்த்தும் பிரித்தும் சொற்களை அமைக்கும் கலை பதிப்புத் தொழிலுக்கு இன்றியமையாதது.

ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு வகையான குறையும் உண்டு; குணமும் உண்டு; தமிழ் மொழியின் சிறப்பியல்பாகப் போற்றத்தக்கன சில உண்டு. குறைகளும் சில உண்டு. ஆங்கிலம், முதலிய மொழிகளிலும் இவ்வாறே குணமும் உண்டு; குறையும் உண்டு. ஒலிக்கப்படுவதுபோல் எழுதப்படாத சொற்களை உடையது ஆங்கில மொழி. அதனால் அந்த மொழியைக் கற்பதில் இடர்ப்பாடு உண்டு. ஆயினும் அந்த மொழியில் ஒரு நூலைப் பதிக்க வேண்டுமானால், சிறந்த அகராதியின் துணை கொண்டு செய்து முடிக்கலாம். அகராதியின் துணை இருந்தாலும் போதாத நிலை உடையது தமிழ் மொழி. 'எழுந்து சென்றார்' என்பது சரியா, 'எழுந்துச் சென்றார்' என்பது சரியா என்று ஐயம் ஏற்பட்டுவிட்டால், அந்த ஐயத்தைத் தமிழ் அகராதி கொண்டு போக்கிக் கொள்ள முடியாது. அப்படிப்பட்ட இடங்களில் பதிப்பாசிரியர் கையில் அகராதி இருந்தால் போதாது. அவருக்கு இலக்கணப் பயிற்சி இருந்தால்தான் அப்போது உதவும். ஆகவே, தமிழில் புரூப் பார்த்துப் பதிப்பவருக்குப் புலமையும்



டாக்டர் மு. வரதராசனார்

ஓரளவு தேவையாக உள்ளது. தமிழ் அச்சகங்களில் புரூப் பார்ப்பவருக்குப் புலமை இருப்பதில்லை. ஆகவே, தமிழ் நூல்களைப் பதிப்பவருக்கு, புரூப் பார்க்கும் பொறுப்பு மிகுதியாவதைக் காண்கிறோம். இத்தகைய தொல்லை கொடுக்கும் சந்தியை அச்சகத்தார் வெறுக்கின்றனர்; ஆனால், பதிப்பாசிரியர் வெறுக்க முடியாது.

மேற்கு நாடுகளில் நூலாசிரியர் ஒரு நூலை எழுதி முடித்தவுடன், கவலை இல்லாமல் உறங்கச் செல்லலாம். ஆனால், இந்த நாட்டில் அதன் பிறகுதான் நூலாசிரியர்க்குக் கவலை தொடங்குவதாகக் கூறலாம். மேற்கு நாடுகளில் அச்சகங்களில் புரூப் பார்ப்பவர்கள் உண்டு. வெளியீட்டகங்களில் பதிப்பாளர்கள் உண்டு. இந்த நாட்டில், நூலாசிரியரே புரூப் பார்த்துப் பதிப்பிக்க வேண்டும். சிறந்த நூலாசிரியர்களாகிய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர், மறைமலையடிகள், திரு.வி.க. முதலான அறிஞர்கள், நூல் எழுதுவதில் செலவிட்ட காலத்தைவிட, புரூப் பார்த்துப் பதிப்பிப்பதில் செலவிட்ட காலம் மிகுதி என்பதை உணர்ந்தால், நெஞ்சம் வருந்துகிறது. புரூப் பார்ப்பதிலும் பதிப்பிப்பதிலும் அந்த அறிஞர்கள் செலவிட்ட காலத்தையும் எழுத்துத் தொண்டிற்கே செலவிட்டிருந்தால், தமிழ் மொழி இன்னும் பல சிறந்த நூல்களைப் பெற்றிருக்குமே என்று எண்ணி வருந்த வேண்டியுள்ளது. 'புரூப் பார்க்கத் தெரியாதவர் நூலாசிரியராக விளங்க முடியாது' என்ற நிலையில் நம் மொழியும் நாடும் உள்ளன. இங்கிலாந்து முதலான நாடுகளில், எழுத்தாளர் தம் கையால் எழுதாமலே, வாயால் சொல்ல, பிறர் சுருக்கெழுத்தால் எழுதி, செய்வன செய்து பதிப்பித்து நூல் வடிவில் அவருக்குக் காட்டி மகிழ்விக்கும் நிலை உள்ளது. தமிழ் அந்த நிலையை அடைய நெடுங்காலம் ஆகும். அந்த நிலை வாினும் வராமல் போயினும், உள்ளதைக் கொண்டு உயர்ந்த தொண்டு ஆற்றுதலே இன்று பதிப்பாசிரியரின் கடமையாகும்.

(அமுதசுரபி– 1957 அக்டோபர் இதழில் வெளிவந்தது)

மூவேந்தர்

அச்சகர் பதிப்பாளர் எழுத்தாளர்



"ஏறக்குறைய 43 ஆண்டுகள் அச்சுத் தொழில், எழுத்துத் தொழில், பதிப்புத் தொழில் னக்குப் பழகிவிட்டது" என்று பசத் தொடங்கினார் மூவேந்தர் முத்து.

"பதிப்பாளர்கள் ஒரு கால ட்டத்தில் சிரமப்பட்ட நிலை இருந்தது. அந்தக் காலகட்டத் தில் நிறையப் பதிப்பகங்கள் கிடையாது. குறிப்பாக சில பதிப்பாளர்கள்தான். அவர்கள் வெளிநாட்டு நூல்கள், வங்காள நாவல்களை நிறைய மொழி பெயர்த்துப் பதிப்பித்தார்கள். இந்த நேரத்தில் நம்முடைய எழுத்தாளர்கள் சுய சிந்தனை டன் எழுதக் கூடியவர்கள் நிறையப் பேர் வரத் தொடங்கி னார்கள்.

இன்றைய பதிப்பாளர்கள் லர் நல்ல நிலையில் இருக்கி றார்கள். பாராட்ட வேண்டிய ஷயம். ஆனால் நூல்கள் நன் ாக இருக்கிறதா, இல்லையா ன்று நினைக்கிறபோது எழுத் ாளர்கள் முன்பு போல் ழுதுவதில்லை என்றே சொல் வன். சுய சிந்தனையுடன் ழுதினால் நல்ல வரவேற்பு இருக்கும்.

கேரளம், கர்நாடகம், ந்திரம் போன்ற மற்ற ாநிலங்களில் புத்தகங்கள் திகமாக விற்பனையாகின் ன என்றால் அங்கெல்லாம் யசிந்தனை நூல்கள் அதிகம்.

அச்சகங்களைப் பற்றி னைக்கும்போது வெளிநாட்டி னரைவிட 60 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் இருக்கிறோம். அது லெட்டர் பிரஸ்ஸாக இருக் கட்டும், ஆப்செட்டாக இருக்கட் டும், லேசர் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் பின்தங்கியே உள் ளோம்.

பத்திரிகைகள் முன்பிருந் ததைவிட இப்போது நன்றாக இருக்கின்றன. பத்திரிகைகள் நிறைய இருப்பதால் நூல்கள் விற்பனை குறைவு என்று சொல்கிறார்கள். அதுவும் நூல் களின் விற்பனைக் குறைவுக்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் வரலாற்று நூல்கள் நிறைய விற்பனையாகின்றன. கல்கி, கண்ணதாசன், சாண் டில்யன், விக்கிரமன் போன்ற வர்களின் நூல்களுக்கு நல்ல மதிப்பிருக்கிறது.

இதுவரை தமிழ்நாட்டில் ஏறக்குறைய 50,000 புத்தகங்கள் வந்திருக்கலாம். இந்த எல்லா நூல்களையும் லெட்டர் பிரஸ் மூலமாகத்தான் அச்சிட்டு இருக்கிறார்கள். பெண்கள் 1957 இல் இருந்து அச்சுத் தொழிலைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். முதன் முதலில் பெண்களை அச்சுத் தொழிலுக்கு அழைத்து வந்தது நான்தான்!

இன்றைக்கு விஞ்ஞான வளர்ச்சியில், அறிவியல் வளர்ச்சியில் - லேசர் பிரிண்ட் டையும், ஆப்செட்டையும் ஏற் றுக் கொள்ளத்தான் வேண்டும். அப்போதுதான் முன்னேற முடியும். இல்லையென்றால் உலகச் சந்தையில் ஓரங்கட்டி விடுவார்கள். அதனால் நாம் அதை வரவேற்கவே வேண்டும்

ஆனால் என்ன ஒரு குறை யென்றால், இத்தனை ஆண்டு காலமாக அச்சுத் தொழிலை வளர்த்தவர்கள் சில அச்சகத் தினர்தான். எல்லா அச்ச கமும் நூல்களைப் பதிப்பிக்க வில்லை. மற்றவர்கள் கல் யாணப் பத்திரிகை, லெட்டர் பேட், விசிட்டிங் கார்டெல் லாம் செய்தார்கள். தமிழ் நூல் களை வெளியிட்ட அச்சகங்கள் சிலவற்றை மூடியும் விட் டார்கள். சரியான ஆதரவு இல் லாததால் - சமாளிக்க முடியாத தால் மூடிவிட்டனர்.

ஒரு நேரத்தில் ஒரு ரீம் பேப்பர் - 16 ரூபாய்.

ஒரு பாரம், 16 பக்கம் அச்சடிக்க - 16 ரூபாய்.

ஆனால் இன்றைக்கு அச்சுக் கூலி குறைவாக இருக்கிறது. சாதாரணமாக ஒரு பாரம் அச் சடிக்க 200 ரூபாய். ஆனால் பேப்பர் விலை ரீமுக்கு 350 ரூபாய். அதனால் அச்சுத் தொழிலில் பாதிப்பு வந்தது. அச்சகத்தை நடத்த முடிய வில்லை.

இதற்கு, அரசாங்கம் தமிழ் நூல்களை அச்சிட்ட அச்சகங் களுக்கு சலுகைகள் கொடுத் திருந்திருந்தால் ஆதரவாக இருந்திருக்கும்.

இன்றைக்கு என் அச்சக மும் தத்தளிக்கிறது.

அச்சகத்தில் எனக்கு எல்லாப் பணிகளும் தெரியும். என் குடும்பமே இதில் ஈடு பட்டிருக்கிறது. ஆனாலும் தத் தளிக்கிறது. இதற்கு எல்லாரும் சேர்ந்து என்ன செய்வது என்று முடிவெடுக்க வேண்டும்.

கல்யாணப் பத்திரிகை, விசிட்டிங் கார்டெல்லாம் செய்து ஓர் அச்சகத்தை நடத்தி

விட முடியாது. அதனால் லேசருக்கும் ஆப்செட்டுக்கும் போய்த்தான் ஆகவேண்டியுள்ளது. இதிலும் எக்கச்சக்கமான போட்டிகள். இதைச் சமாளித்து மீள்வது சாதாரண விஷயமில்லை.

பூவழகி பதிப்பகத்தை 1977 இல் தொடங்கினேன். என் துணைவியாரின் பூர்விகச் சொத்தை விற்று – அதன் மூலமாக முதலீடு செய்து நடத்தி வருகிறோம்.

இதுவரை 150 நூல்களைப் பதிப்பித்துள்ளோம். பதிப்பகம் இருப்பதால் கொஞ்சம் கஷ்டத்தில் இருந்து மீள முடிகிறது. நூலகத்திற்கு 500 பிரதிகள் கொடுத்துவிட்டு மீதி பிரதிகளை விற்க முடியாமல் திண்டாட்டம். நான் முழு நேரப் பதிப்பாளராக இருந்தால் அதில் கவனம் செலுத்தலாம். அச்சகத்தையும் – பதிப்பகத்தையும் நிர்வகிக்கிறபோது நூல்களை விற்பனை செய்வது கடினமாகத்தான் உள்ளது.

அச்சுத் தொழிலை நச்சுத் தொழில் என்று சொல்வார்கள். "அப்பா! இந்தத் தொழிலில் இவ்வளவு கஷ்டப்படுகிறாயே – நாம் ஏன் இதே தொழிலில் கஷ்டப்படணும்?" என்று என் மகன் மாறன் யோசனை செய்கிறான். இந்தத் தலைமுறையினர் சுலபமாக வேலை செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்களே தவிர, அப்பாவுக்குப் பயந்துகொண்டு, உதவியாக இருக்கிறாரே தவிர, மனப்பூர்வமாகச் செய்கிறாரா என்று சொல்ல முடியவில்லை. ஆனால் என் பெண் பிள்ளைகள் அச்சகத் தொழிலை உற்சாகமாகச் செய்கிறார்கள். இந்தத் தொழிலில் நானும் ஓரளவு வளர்ந்தேன். நிறையப் பேரை வளர்த்தும் இருக்கிறேன். அதில் எனக்குப் பெரிய சந்தோஷம். இந்த தொழில் என் குடும்ப திற்குச் சோறு போடுகிறது கஷ்ட – நஷ்டம் இருக்கலாம் குறைகள் இருக்கலாம். ஆனா மூன்று தலைமுறைகளை பார்த்த என்னை வாழ வை கிறது. அதனால் ரொம்ப மதி கிறேன்" என்றார் மூவேந்த அச்சகம், பூவழகி பதிப் கத்தை நிர்வகித்து வரும் கோ. தையமுத்து என்ற இய பெயர் கொண்ட எழுத்தாளர் 'மூவேந்தர்' முத்து.

சட சடக்கும் அச்சு இயந்தி ரங்களுக்கு இடையே 'உ னால்தானே' என்ற நூலை எழுதி முடித்திருக்கும் மூவேந் தர் முத்து, அந்த நூலில் தன் வெற்றிக்குக் காரணமான துணைவியாரின் ஒத்துழைப் பைப் புகழ்ந்து சொல்லி யிருக்கிறாராம்.

பதிப்பக முன்னோடிகள்

செ**ச**ன்னை மாநகரில் புத்த ... பதிப்புத்துறையில் ஈடுபட்டு ...ந்த 40 ஆண்டுகளுக்கு மேல் ...ந்த அநுபவம் மிக்கவர்களில் ...ிப்பிடத்தக்க ஒருவரான திரு. ...சிலாமணி அவர்களைச் ...தித்து அவரது அநுபவங் ...ளைக் கேட்டோம். அவர் கூறிய ...வரங்களை இங்கு பகிர்ந்து ...ாள்கிறோம்.

"கலைமாமணி' விக்கிரமன் ...வர்கள் முப்பது ஆண்டுகளுக்கு ...ன்பே 'அமுதசுரபி' இதழை ...ுத்தகத் தொழில் மலராகக் ...ண்டுவந்தவர். புத்தகத் ...ாழில் சிறப்புறவும், மேன் ...யுறவும், எழுத்தாளர்களின் ...ுறைக்காகவும் அயராது பாடு ...ட்டு வருகிறார். அவர் முப்பது ...ண்டுகளுக்குப் பிறகு இன்றும் ...ுத்தகத் தொழில் மலர் வெளியிடு ...ார் என்பதே அதில் இவருக் ...ள்ள ஈடுபாட்டைத் தெளிவாக்கு ...றது.

இந்த மலரில் என்னைப் ...ற்றிச் சொல்வதை விட, சக ...திப்பாளர்களாயிருந்து முன்னே ... சிலரின் அநுபவங்களை ...வளியிடுவது சிறப்பாயிருக்கும் ...ன்று கருதுகிறேன்.

கலைஞன் பதிப்பகம் பாண்டி ...ஜாரில் ஒரு கட்டட மாடியில் ...ாடங்கிய ஒரு மாதத்துக்குப் ...றகு வானதி திருநாவுக்கரசு ...ு மாலை நேரத்தில் என்னைச் ...ந்திக்க வந்தார்.

...தான் பழைய மாம்பலத்தில் ...ருப்பதாகவும்தானும் அங்கேயே ...ர நினைப்பதாகவும் சொன்னார். ...ப்பொழுது இரண்டு, மூன்று ...டைகள் காலியாக இருந்தன. ...வற்றில் ஒன்றை ஏற்பாடு ...சய்து கொடுத்தேன்.

இதனை மறவாது பின்பு, அவர் நினைவு கூர்ந்தவிதம் என்னை மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தியது.

சொந்தக் கட்டடத்துக்கு வானதி பதிப்பகம் இடம்பெயர்ந்த போது அன்று காலை திருநாவுக்கரசு மகன் சோமுவின், வீட்டுக்கு வந்து "அப்பா உங்களைக் கையோடு அழைத்துக் கொண்டு வரச் சொன்னார். இன்னும் அரை மணி நேரத்தில் வாரியார் சுவாமி வந்து பூஜை செய்ய இருக் கிறார்கள். தாங்கள் அவசியம் வர வேண்டும்" என்றார். நானும் புறப்பட்டேன்.

வாரியார் சுவாமிகள் அபிஷேக ஆராதனை செய்த அழகு இன்னும் கண்ணில் நிற்கிறது. அன்று அவர் குடும்பத்தாருடன் என்னையும் ஓர் அங்கமாக திரு நாவுக்கரசு பாவித்தது மகிழ்ச்சி யாக இருந்தது.



பாரதிபதிப்பகம் பழ.சிதம் பரம் அவர்கள் கனகம் என்றே நண்பர்களால் அழைக்கப்படுவர். நான் சென்னை வரும் முன்பே ஐம்பதுகளில் எனக்குப் பரிச்சய மானவர்.

நாங்கள் சென்னை வந்தால் அவர் வீட்டில்தான் தங்குவோம். கல்கி, ராஜாஜி புத்தகங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார். தொழில் திறமை இவரிடம் அபாரம். இன்றைக்கு 1000பிரதி அச்சுக்கூலியில் 1200 பிரதி அச் சிடுவதற்கு அவர்தான் வழி காட்டி. நண்பர்களுக்கு உதவு வதில் முன் நிற்பவர். எப்பொழுது என்ன செய்வார் என்று இவரைக் கணிப்பது கஷ்டம். என்னிடத்தில் மிகுந்த அன்புடையவர்.

பள்ளிக்கூடப் புத்தகங்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கும் போது மாவட்டங்களுக்கு செல்ல கார் ஒன்று அவசியமாயிற்று. அப்பொழுது பழ "சிதம்பரம். ஒரு பத்து ரூபாய் கொடுங்கள்" என்றார். கொடுத்தேன். "முதலி யார் காரை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கார் சாவியைக் கையில் கொடுத்து விட்டார்கள்.

"கார் HPயில் இருக்கிறது அதனைக் கட்டி விடுங்கள்" என்றார். பத்து ரூபாயில் ஒரு கார் வாங்க முடியும் என்ற அதிசயத்தை சிதம்பரத்தால் தான் நிகழ்த்தமுடியும்.

இவர் பொருளாதாரம் படித்த தில்லை. ஆனால் பொருளைப் பெருக்குவதில் இவர் மேதை.

திரு சின்ன அண்ணாமலை யின் மகன் கருணாநிதிதான் மாவட்டம் தோறும் இயங்கி வந்த நூலக அதிகாரிகளைக் காண அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தியவர்.

இந்தப் பிரயாணங்களில் அருணோதயம் அருணன் அவர் களும் என்னை அழைத்துச் செல்லுவார்.

திரு. அருணன் ஒருமுறை "ஏன் புத்தகங்கள் அச்சுக்குக் கொடுக்கவில்லை?" என்றார். "நூலக 'செக்' எதிர்பார்த்திருக் கிறேன்" என்றேன்.

"அடுத்த சந்திப்பில் வாருங்கள் பேப்பர் கடைக்குப் போகலாம்" என்று அழைத்துச் சென்று, எனக்கு வேண்டிய பேப்பர்களை நாலு கடை ஏறி இறங்கி விலை குறைவாக உள்ள கடையில் ரொக்கம் கொடுத்து வாங்கினார். "நாம் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். நூலக செக் வந்த பிறகு கொடுங்கள்" என்றார். அவருடைய குடும்பத்தார் என்னை மிகவும் நேசிப்பவர்கள். இந்தத் துறையில் எனக்கு இவர்கள் தான் வழி காட்டிகள். இப்படி பலருடைய உதவியா லேயே மன நிறைவோடு வாழ முடிந்தது என்பது நிஜம்." என்று கூறி முடித்தபோது அவரது முகத்தில் ஒரு பெருமிதம் தலை காட்டி நின்றது.

பதிப்பாளர் – எழுத்தாளர் – படிப்பாளர்

புத்தகப் பித்தன்
(தோ. ந. வீரராகவன்)

1935-36 ஆம் ஆண்டில் ர் அண்ணன் டி.என். ராமச் திரன் சென்னையிலிருந்து 'புது மகம்' என்ற மாதப் பத்திரிகை ன்றை நடத்தினார். அதன் ளரவ ஆசிரியர் தொழிற்சங்கத் லைவர் ம.சிங்காரவேலர் பி.ஏ. எல். அவர்கள்.

என்னுடைய பத்தாவது வயதில் ந்தப் பத்திரிகையே என்னை ரிவியல் பாதைக்கு அழைத்துச் ன்றது. பத்திரிகையின் அட்டை ல் ஜார்ஜ் பெர்னார்ட்ஷா, எச்.ஜி. வல்ஸ், ஹெர்பர்ட் ஸ்பென்சர், மஸ் ஹென்றி, ஹக்ஸ்லி ான்ற மேதைகளின் படங்களை வளியிட்டிருந்தார்.

ஆங்கில ஆட்சியில் விடுதலை யக்கம் காந்தி அடிகளின் லைமையில் மிக வேகமாக ளர்ந்து வந்தது. சுதந்திரமும் டைத்தது. என்னுடைய சகோ ரும் 1942 இல் சிறை சென்றார். ந்தச் சூழ்நிலையில் என்னுடைய ள்ளிப் படிப்பில் நிறைய மாற் ங்கள் ஏற்பட்டன. தேசிய உணர் ம் விடுதலை வேட்கையும், எழுத ண்டுமென்ற ஆர்வத்தைத் ண்டின.

> **முழு உரிமையை எழுத்தாளர்களிடம் பெற்றிருந்தும், மறுபதிப்பு வெளியிடும் உரிமையை அவர்களிடமே திருப்பிக் கொடுக்கும் புத்தகப்பித்தன், 25 ஆண்டுகளாக வெளிவராத நல்ல நூல்களை மறுபதிப்பு செய்து ராயல்டியும் தருகிறார்.**



என் தந்தை சிறு அச்சகம் ஒன்றை வாங்கி இருந்தார். நானும் என் சகோதரரும் அதை நடத்தி வந்தோம். அப்போது அவருக்கு புத்தகங்களை வெளியிடும் ஆர்வம் இருந்தது. பதிப்பகம் ஒன்றைத் தோற்றுவிக்க இதுவே முதல் காரணம்.

1948 இல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக திரு. காமராஜ் இருந்தார். ஒருமுறை அவரைப் பார்க்க என் அண்ணனுடன் நான் சென்றிருந்தேன். என்னை அறிமுகப்படுத்தினார். அது சமயம் திருவாரூர் வி.எஸ். தியாகராஜ முதலியார் அங்கு வந்தார். அவர் பெருநிலக்கிழார். அவர் தேசபக்தி கொண்டவர். தமிழ்மொழி வளர்ச்சிக்கு உதவியவர். தமிழ் கலைக் களஞ்சியம் வெளியிட உதவினார். தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் பங்கு கொண்டார். அவருடைய காரில் நாங்கள் இருவரும் சேர்ந்து புறப்பட்டோம். வி.எஸ்.டி. காரை நிறுத்திவிட்டு கனி அண்ட் சன்ஸில் கடிகாரம் வாங்கி வருவதாகச் சொல்லிச் சென்றார். நாங்கள் அப்போது அங்கு தான் (மவுண்ட் ரோடில்) பதிப்பகத்திற்கு என்ன பெயர் வைப்பது என முடிவு செய்து 'இமயப் பதிப்பகம்' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தோம்.

1949லிருந்து புத்தகம் வெளிவரத் தொடங்கியது. என் அண்ணனின் முதல் நூல் "மாஸ்கோ பாதை', ஸ்டாலினின் சர்வாதிகார ஆட்சியை வெட்ட வெளிச்சமாக்கிய நூல். அதன் பிறகு 'நமது சரித்திரப் பாரம்பர்யம்' என்ற நூல் காமராஜ் அவர்களின் முன்னுரையுடன் வெளிவந்த

முதலில் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் சீனப்படை எடுப்பை எதிர்த்துப் பேசிய "வெற்றி நமதே" என்ற நூலை வெளியிட்டோம்.

1971 இல் பிரபல எழுத்தாளர் சுஜாதாவின் எழுத்துகளை வெளியிட குமரிப் பதிப்பகத்தைத் தொடங்கினேன். அப்போதே நான் புத்தகப் பித்தனாக அவதாரம் எடுத்தேன். எழுபதுக்கு மேற்பட்ட புத்தகங்களை நாலைந்து பதிப்புகளுக்கு மேல் வெளியிட்டேன். அவருடைய புத்தகங்கள் இரண்டாயிரம் அச்சிட்டபோது அவர் கேட்காமலேயே 15% ராயல்டி கொடுத்தேன்.

கடந்த 45 ஆண்டுகளாக எந்த வசதியும் இல்லாத ஒரு மூலையில் இருந்து கொண்டு புத்தகங்களை வெளியிட உதவியவர்கள் என்னைக் கவர்ந்த எழுத்தாளர்களே. எல்லாரையும் அன்பால் நேசித்தேன். யார் கேட்டும் இல்லை என்று சொன்னதில்லை. சிலருக்குக் கேட்காமலேயே கொடுத்து உதவினேன். என்னுடைய இலக்கிய ரசனையில் ஆர்வம் கொண்ட எழுத்தாளர்கள் அனைவரும் என்னை நேசிக்கின்றனர் – உதவுகின்றனர். நான் பல ஆசிரியர்களிடம் புத்தகம் வெளியிட முழு உரிமையைப் பெற்றிருந்தும் அவர்கள் பெயரும் புகழும் அடைந்தபோது மறுபதிப்பு வெளியிட புத்தக வெளியீட்டு உரிமையை அவர்களுக்கே திருப்பிக் கொடுத்தேன். இப்போது (1994) புத்தகப் பித்தன் எழுத்தாளர் நலநிதி ஏற்படுத்தி 25 ஆண்டுகள் வெளிவராத நல்ல நூல்களை மறுபதிப்பு செய்து ராயல்டி தருகிறேன். ●

மயிலை, சித்திரக் குளம் மேற்கு வீதியில் உள்ள பூங்கொடி பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. வே. சுப்பையாவிடம் நாம் கேட்ட முதல் கேள்வி இதுதான்; "எல்லா பதிப்பாளர்களும் தி.நகர், பாண்டி பஜார் பகுதியில் இருக்கிறார்கள். நீங்கள் மட்டும் ஏன் இங்கே உள்ளீர்கள்?"

"கொஞ்ச காலத்திற்கு முன் எல்லாரும் மயிலாப்பூரிலும், பாரி முனையிலும் இருந்தார்கள். பாண்டி பஜார் இப்போது நல்ல வர்த்தகத் தலமாக இருக்கிறதால் எல்லாப் பதிப்பகமும் அங்கே குவிந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். எல்லா பதிப்பாளர்களும் தி.நகரில் தான் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. கொஞ்சம் கூடுதலாக இருக்கிறார்கள். அவ்வளவுதான்" என்றவர் தம் ஆரம்ப காலத்தை அசை போட்டார்.

"இன்ப நிலையத்தில 16 ஆண்டுகள் பணியாற்றினேன். அந்த உழைப்பு தான் பூங்கொடி பதிப்பகத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது. மறைந்த எழுத்தாளர் லக்ஷ்மி இதுவரை 105 தலைப்புகளில் நாவல் எழுதியிருக்கிறார். இதில் 80 தலைப்புகளைப் பதிப்பித்த பெருமை பூங்கொடி பதிப்பகத்திற்கு உண்டு.

"1968-இல் ஆரம்பமான பூங்கொடி பதிப்பகத்தில் ம.பொ.சி., நாமக்கல் கவிஞர் நூல்களை வெளியிட்டு மக்கள் கவனத்தை எங்கள் பதிப்பகத்தின் மீது திருப்பினோம். ஓரளவு வளர்ச்சி பெற்ற பிறகு புதுப்புது ஆசிரியர்களின் நூல்களை வெளியிட்டோம். சமீபத்தில் 752 பக்கங்கள் கொண்ட 'மூலிகைக் களஞ்சியம்' என்ற நூல், விலை ரூபாய் 125 என்றாலும் நன்றாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. மன வளர்ச்சி குன்றிய (குழந்தைகள் - பெரிய) வர்களுக்கான நூலை முதன் முதலாக பூங்கொடி பதிப்பகம் தான் வெளியிட்டது. கம்ப்யூட்டரைப் பற்றி தமயேந்திரன் எழுதிய நூலை முதன் முதலாக நாங்கள் தான் வெளியிட்டோம்.



61 வயதில் 21 வயது சுறுசுறுப்பு


"இன்றைய சூழ்நிலையில் சுய முன்னேற்ற நூல்களுக்கும், அறிவியல், யோகாசனம், பக்தி, சமையல் நூல்களுக்கும் நல்ல வரவேற்பு உள்ளது.

"நல்ல தரமான இலக்கிய நூல்களைக் குறைந்த விலைக்குத் தர வேண்டும். நல்ல நூல்கள் உடனடியாக விற்பனையாகாமல் போகலாம். ஆனால் நீண்ட காலம் மக்களுக்கு உதவக் கூடியது இந்த நூல்கள். இந்த நேரத்தில் தான் நாங்கள் அரசை நம்ப வேண்டியுள்ளது.

"பணத்தை முதலீடு செய்து விட்டு அமைதியாக உட்கார்ந்திருக்க முடியுமா? அதனால்தான் நேரத்திற்குத் தகுந்த மாதிரி நூல்களை வெளியிட வேண்டியுள்ளது" என்ற பூங்கொடி பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. வே. சுப்பையாவின் வயது 61 என்றாலும் 21 வயது சுறுசுறுப்புடன் இயங்குகிறார்.

இவரது சக பதிப்பகம் வெளியிட்ட, பட்டுக்கோட்டை ராஜா எழுதிய 'மனம் கொத்திக் குருவிகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் சமீபத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் முதற் பரிசை வென்றுள்ளது.

–மாலதி நாகராஜ்



புத்தகம் என் துணைவ

புத்தகம் படிப்பதில் என
ஆர்வத்தைத் தூண்டியவர்
தந்தை. பள்ளிப் புத்தகங்களை
பொது அறிவுப் புத்தகங்களை
படிக்குமாறு செய்தார்.

முதல் முதலில் நான் படி
புத்தகம் ஒரு குதிரையின் க
மூன்றாம் வகுப்பில் படிக்
போது துணைப்பாடமாக அ
சிறு நூலைப் படிக்குமாறு நே
தால், கதைப் புத்தகங்க
படிக்கும் ஆர்வம் எனக்கு எ
தது. அதிலிருந்த சித்திரங்
என்னைப் படிக்கத் தூண்டி

பிறகு நான் பல நூல்கள
படித்தாலும் தமிழ்த் தாத்
உ.வே.சாமிநாத அய்யர் எழு
'என் சரித்திர'த்தை நான்
முறை ஆவலுடன் படித்தி
கிறேன். தொடர்ந்து, ஆ
விகடனில் வெளிவந்தபே
படித்திருந் தாலும், நூல் வடி
பிறக்கும் போது உள்ள சுவை
தனி.

கடுமையான காய்ச்சல்.
கம் வரவில்லை. கல்கியில் 'அ
ஓசை'யை இரவு ஏழு மணிக்
படிக்கத் தொடங்கிய
பொழுது புலர்ந்தது தெரியா
படித்து முடித்தேன். பி
நன்றாகத் தூங்கினேன். தூ
எழுந்த பிறகு காய்ச்ச
காணோம்.

இப்போதும் பயணக் கட்டு
நூல்களைப் படிப்பதில் எனக்
தனி ஆர்வம் உண்டு. அடுத்
வாழ்க்கை வரலாறு. நல்ல
தகங்கள் என் நல்ல துணைவ

(கலைமாமணி 'விக்கிரமன்'-
ஒரு சொற்பொழிவில்)

"பேப்பர் விலை குறையும் என்ற நம்பிக்கை இருக்கிறது."

பேப்பர் விலையின் ஏற்றம்
ணை முத்தமிடுகிற நேரம்.
ணதாசன் பதிப்பகத்தின்
மையாளர் திரு.காந்தி கண்ண
ன் அவர்களைச் சந்திக்
றாம்.

'நீங்க என்ன கேட்கப் போறீங்
னு தெரியும். பேப்பர்
லையை நினைத்தால் ரொம்பக்
டமாகத்தான் உள்ளது. தமிழ்
டைச் சேர்ந்த திரு.ப.சிதம்பரம்
திய அரசில் வர்த்தகத் துறை
மைச்சராகப் பதவியில் இருப்
ஒரு நம்பிக்கையைத் தரு
து. கூடிய விரைவில் நல்ல
பிறக்கும்.

சம்பந்தப்பட்ட எல்லாருக்கும்
த்துச் சொல்லிக் கொண்டே
க்கிறோம். தில்லியில் இயங்கும்
டரேஷன் ஆஃப் இந்தியன்
ரிஷர்ஸ் அசோஸியேஷன், தில்
லில் உள்ள அரசு அதிகாரிகள்,
மைச்சர்கள், நாடாளுமன்ற
ப்பினர்களைத் தினமும் தவ
றல் சந்தித்து பேப்பர் விலை
ற்றத்தால் ஏற்படக் கூடிய
திப்புகளை- பிரச்னைகளை
ாதித்து வருகிறார்கள்.

பேப்பர் இறக்குமதிக்கும், ஏற்று
யின் நிறுத்தத்திற்கும் நிச்சயம்
முடிவு கிடைக்கும்.

அச்சகத் துறை சங்கங்கள்,
நூல் தயாரிப்பாளர்கள்,
ட் புக் தயாரிப்பாளர்கள்-
களின் கோரிக்கைகளை
வாகச் சொல்லியுள்ளார்கள்.

பள்ளிகள் திறக்கும் நேரமாக
ருப்பதால் பெற்றோர்களின்
ரக் கூடிதுங்கள். பத்திரிகை
ன் தலையங்கங்கள் எல்லா
கச் சேர்ந்து பேப்பர்
லையைக் குறைக்கவே செய்யும்.

இந்த விலை ஏற்றத்தால் அதிக
மடைவது பேப்பர் தயாரிப்
ளர்களே. அவர்களுக்கு இடை



யில் கிடைத்த அதிர்ஷ்டம் நீண்ட நாள்களுக்கு நிற்காது.

இந்தியாவில் ஒரு கால கட்டத்தில் மட்டும் அல்ல, இன்றும் வங்கமொழியிலும், மலையாள மொழியிலும் வெளியாகும் நூல்களே விற்பனையில் முதலிடம் வகிக்கின்றன. நமது நூல்கள் அந்த இடத்தைப் பெற நீண்டகால மாகும்.

நம் மக்கள், பிரச்னைகளுக்கு வழி தேடி அலைவதும், சுயமாகச் சிந்திக்கத் தொடங்கியிருப்பதும் நூல்களின் விற்பனைக்கு இப்போது அடிப்படைக் காரணமாக அமைகின்றன. இந்த ஆர்வம் இன்னும் வளர வேண்டும்.

கவிஞர் கண்ணதாசன் எழுதிய 'அர்த்தமுள்ள இந்து மதம்' பத்து பாகங்களும் இருபத்தி எட்டு பதிப்புகளைக் கண்டுள்ளன. மக்களின் பிரச்சனைக்கும், மன நிம்மதிக்கும் 'அர்த்தமுள்ள இந்து மதம்' நூல்கள் துணை நிற்பதைப் போல, சுய முன்னேற்ற நூல் வரிசையில் எம்.ஆர்.காப் மேயர் எழுதிய 'நீங்கள் விரும்புவது எதுவானாலும் அதை அடைவது எப்படி?' என்ற நூலும் வேகமாக விற்பனையாகின்றது " என்ற காந்தி கண்ணதாசன், "பெண்களுக்கான சமையல் கலை நூல்கள் அது யார் எழுதினாலும் விற்றுவிடுகின்றன" என்றார்.

காந்தி கண்ணதாசனின் பேச்சு கடந்த காலத்திற்குச் சென்றது.

"சட்டக் கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்த நேரம். கல்லூரிக்குப் போய் வரும் நேரங்களைத் தவிர- மீதி இருக்கிற நேரத்தில் ரொம்ப ஜாலியாக ஊர் சுற்றுவேன். அப்பா கூப்பிட்டார். பேசினார்... எனக்கு ஏற்றுமதி
தொழில் செய்ய ஆசை. 'வேண்டாம்' என்றார். 'பதிப்பகம் தொடங்கச் சொன்னார். 'கீதா சமாஜம்' என்ற பெயர் வைத்தார்.

லாபம் அதிகம் தராத வியாபாரம். 1977ஆம் வருஷம் அர்த்தமுள்ள இந்து மதம் என்ற பொதுத் தலைப்பில் மாதத்திற்கு ஒன்றாக அப்பா எழுதித் தர, பதிப்பித்தேன். நிறைய விளம்பரம் செய்தோம். முதன் முறையாகப் புத்தகத்திற்காக வானொலியில் கூட விளம்பரங்கள் செய்தோம். ஒன்றரை லட்சம் பிரதிகள் விற்பனையாயின. தொடர்ந்து பத்து பாகங்கள் எழுதினார். அதில் மூன்று பாகங்களை வானதி பதிப்பகமும், 7 பாகங்களை நாங்களும், பதிப்பித்துக் கொண்டிருக்கிறோம்.

அப்பாவிற்கும், வானதி திருநாவுக்கரசு அவர்களுக்கும் இருந்த நட்பு, இன்றைக்கும் எங்களிடையே தொடர்கிறது. 1981ஆம் ஆண்டு அப்பா மறைந்த பிறகு அவருடைய எல்லா நூல்களையும் நாங்கள் பதிப்பித்தோம். 1982இல் 'கண்ணதாசன் பதிப்பகம்' எனப் பெயரை மாற்றினோம்.

அப்பாவைப் பற்றிப் பலர் ஆராய்ச்சி செய்த நூல்கள் அனைத்தையும் நாங்களே வெளியிடுகிறோம். அப்பா எழுதிய நூல்களை ஆராய்ச்சி செய்கிறவர்களுக்கு எல்லா விதத்திலும் உதவுகிறோம்.

'கவியரசு கண்ணதாசன் பவுண்டேஷன் ஆஃப் இந்தியா' என்ற அமைப்பின் மூலம் ஆராய்ச்சியாளர்களுக்குப் பண உதவி செய்யவும் முன்வந்திருக்கிறோம்.

கல்லூரிப் படிப்பின் போதே எனது பொழுது போக்கு, நிறைய நூல்கள் படிப்பதுதான். ஆங்கில நூல்கள் நிறையப் படிப்பேன்.

அறிஞர் டாக்டர் எம்.ஆர்.காப் மேயர் எழுதிய சுய முன்னேற்ற நூல்கள் என்னை ரொம்பவும் கவர்ந்தன.

கண்ணதாசன் பதிப்பகத்தின் வியாபார அபிவிருத்திக்கும், நல்ல ஆங்கில நூல்கள் தமிழில் வெளி வரவேண்டும் என்ற எண்ணத் தாலும் டாக்டர் எம்.ஆர்.காப்மேயர் எழுதிய நான்கு நல்ல நூல்களைத் தமிழில் வெளியிட உரிமை வாங்கினேன்.

பதிப்பித்தபோது தமிழ் மக் களிடம் நல்ல வரவேற்பு கிடைத் தது. தொடர்ந்து குஷ்வந்த் சிங், ஓஷோ, மகரிஷி மகேஷ் யோகியின் நூல்களை, தமிழுக்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

சோனி நிறுவனம் வளர்ந்த கதையும், நந்தாவின் எஸ்கார்ட்ஸ் தொழிலின் அபிவிருத்தியும், ஜே.கிருஷ்ணமூர்த்தியின் நூல் களுக்கும் தமிழில் நல்ல வர வேற்பு.

இந்த நேரத்தில் 'மாஸ்டர்ஸ் அண்ட் ஜான்சன் எழுதிய 'செக்ஸ் மேனுவல்' நூலைப் பற்றியும் சொல்ல வேண்டும். இன்றைக்கு செக்ஸ் பற்றிய சரியான விவரங்கள் தெரியாத மக்களாக நம்மவர்கள் இருக்கிறார்கள். அந்த நிலை மாற வேண்டும் என்பதற் கான சிறு முயற்சியே இது. பாலியல் கல்வி நூல்களிலேயே மிகச் சிறந்த படைப்பாக இந்நூல் பரவலாகப் பேசப்படுகிறது" என்ற காந்தி கண்ணதாசன் அடுத்து, கட்டடக் கலையில் ஒரு நல்ல நூலைத் தமிழுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட் டிருக்கிறார்.

கவிஞர் கண்ணதாசன் சம்பந் தப்பட்ட நிகழ்ச்சிகளை ஒலி நாடா வில் தொகுத்து வழங்கி வரும் காந்தி கண்ணதாசன், மாதந் தோறும் 500 பேருக்கு கவிஞரின் புகைப்படங்களை இலவசமாக அனுப்புவதையும், எம்.ஆர்.காப் மேயர், டாக்டர் ராபர்ட் ஷூல்லரின் நம்பிக்கையளிக்கும் வாழ்வின் முன்னேற்றத் தொகுப்புகளை இலவசமாக வழங்குவதையும் உரையாடலின் நடுவே குறிப்பிட் டார். கவியரசரின் வாரிசல்லவா!

நல்ல நூல்களைக் குறைந்த விலையில் தரும் நந்தன்

படிக்கின்ற பழக்கமுள்ள அனைவருக்குமே, மேலும் படிக்க வேண்டும் என்ற ஆவல் எழுவது இயல்பு. பையில் பணமிருக்கிற போது ஏதாவது நல்ல நூல் கிடைத்தால் வாங்கலாம் என்று புத்தகக் கடைக்குள் நுழைவோம். அழகிய அட்டைகளில், சுண்டி இழுக்கும் தலைப்புகளில் நிறைய நூல்கள் 'என்னை வாங்கேன்!' என்று சொல்லும்.

புத்தகத்தைக் கையில் எடுத்துப் புரட்டும் பக்கம் விலை அச்சிடப் பட்ட பக்கமாகத்தான் இருக்கும்.

இன்றைய விலைவாசியின் ஏற்றம் நூலின் விலையைச் சற்றே கூட்டிக்காட்ட, எடுத்த இடத் திலயே அந்த நூலை சர்வ ஜாக் கிரதையாக வைத்து விடுவோம்.

இந்த விஷயத்தில் பதிப்பாள ரையும் குறை சொல்ல முடியாது. காகிதம், அச்சுக் கூலியின்- இன்ன பிற செலவுகளின்- தாக்கம் நூலின் விலையைக் கூட்டியே விற்க வேண்டிய நிலை.

ஆனால்- இந்த நிலையை- சூழ்நிலையைக் கடந்து நிற்கிறது. 'அநுராகம்'.

எப்படி?

ரூ 4.50 விலையில் வேத- உபநிஷத்துகளை, இராமாயண- மகாபாரத, இதிகாசங்களை, நீதிக் கதைகளை, ஆங்கிலம், பொது அறிவு, ஆன்மிகம், ஜோதிடம், அறிவியல், கலை, தொழில்- வியாபாரம், சுய முன்னேற்றம், மருத்துவம், சட்டம், ஜாக்ஸ்- நகைச்சுவை, மேல் நாட்டு இலக்கியம், தமிழ் இலக்கியம், காதல், நாவல்களின் சுருக்கங்கள், பெண்களுக்கு தையல்... இப்படி எண்ணற்ற நூல்கள், கிட்டத்தட்ட இதுவரை 650 தலைப்புகளில் தந்துள்ளது; இன்னும் தொடர் கிறது.

"1978ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட அநுராகம், முதல் முதலில் வெளியிட்ட நூல் 'மாங்கா காமாட்சி அம்மன் மகிமை: இத விலை ரூ 2/- திருச்சி நாத பிரஸ் திரு.பாண்டுரங்கம் அ கள் பத்தாயிரம் பிரதிகள் அ சிட்டுக் கொடுத்து அநுராகத்தை தொடங்கி வைத்தவர் என்கிறா நந்தன்.

அநுராகம் பதிப்பகத்தி நுழைந்தால் எதையாவது குறைந்த பட்சம் சில நூல்கள யாவது- வாங்கிச் செல் வேண்டும் என்ற நிலைக்கு காரணத்தை நிறையச் சொல்லா

பயனுள்ள தலைப்புகள் வாங்கத் தயங்காத விலை, தெ வான நடை- எல்லாவற்றுக்கு மேலாக அநுராகத்தின் நிர்வா திரு.எம்.நந்தனின் வித்தியாசமா அணுகுமுறை: கடுமையா உழைப்பு.

"மக்களுக்கு நூல்கள்தா சிறந்த வழிகாட்டியாக- துணை யாக- இருக்க முடியும். எங்க டைய எளிய முயற்சிக்கு வா கர்கள் தரும் ஆதரவுதான் உந் சக்தியாக இருக்கிறது. நல் நூல்களைக் குறைந்த விலைக் மக்களுக்குத் தர வேண்டும் என் நினைத்தோம். செயல்படுத்தி கொண்டிருக்கிறாம். காகித வி ஏற்றம் அச்சுறுத்திக் கொ டிருக்கிறது. விமோசனம் வி வில் வந்தால் நல்லது" என்றா எம்.நந்தன்.

நாட்டில் அவ்வப்போது நடைபெறும் புத்தகக் காட்சியை தவிர, இம்முறை அகில இந்திய சுற்றுலா தொழிற் பொருட்காட் யிலும் ஓர் அரங்கை அமைத் அமைதியாக மக்களுக்குத் தொ டாற்றி வருகிறது 'அநுராகம்!

வாழையடி வாழை யாக வளர்ந்து வரும் புத்தக வெளியீட்டுத் துறையில் வெற்றி நடை போடும் 'அநு ராகம்' திரு.நந்தன் 'கலைஞன்' மாசிலா மணியின் புதல்வர்.

விளம்பரம் இருந்தால் இன்னும் விற்பனையாகும்

"தமிழ் நூல்கள் தமிழ்நாட்டுக்குள்ளேயே குறுகிய வட்டத்தில் பயன்படும் நிலையிலுள்ளன. ஓரளவே இலங்கை, மலேயா நாடுகளுக்குச் செல்கின்றன. தமிழர்களோ நல்ல புத்தகங்களை வாங்கிப் படிக்கும் பழக்கம் பெறாமலே உள்ளனர். படித்தவர், அலுவலகங்களில் பணியாற்றுவோர் அனைவரும் படித்து மனத்தைப் பண்படுத்தப் பழகும் நாளே தமிழரின் சிந்தனைக் கண் திறக்கும் திருநாளாம்!" என்று பேசத் தொடங்கினார் வெள்ளையாம்பட்டு சுந்தரம்.


கல்விப் பயன் சிந்தனையாக மலர்ந்து, பொதுநலமாக வளர்ந்து, சிறந்த மக்கள் சமுதாயம் உருவாக வேண்டும் என்ற விழைவோடு சேகர் பதிப்பகம் மூலம் ஒவ்வொரு நூலையும் வித்தியாசமாக - அதே நேரத்தில் பயனுள்ளதாக பதிப்பிக்கும் சுந்தரம், "இதுவரை எனது பதிப்பகத்தின் மூலம் 73 புதியவர்களை அறிமுகப்படுத்தியிருக்கிறேன்" என்றார்.

சேகர் பதிப்பகத்தில் இதுவரை சுமார் 600 நூல்கள் வெளியாகியுள்ளன. எல்லாமே வரலாறு, சங்க இலக்கியங்கள், தொல்பொருள் துறை, ஆராய்ச்சி நூல்களே.


"நஷ்டப்பட்டாலும் நாட்டு மக்களுக்கு நல்ல தமிழ் நூல்களை உருவாக்கித் தரும் புத்தகப் பதிப்பாளர்க்குத் தமிழக அரசு பாராட்டுப் பத்திரம் என்பதாக ஓர் அச்சிட்ட சான்றிதழை, மிக அவசரக் கோலத்தில் அள்ளித் தருகிற ஓர் அவலக் காட்சியைப் பல ஆண்டுகளாக அறிவுடையோர் மனம் வருந்திப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஓவியக் கலை, அச்சுக் கலை முதலானவும் மதிக்கப் பெறுவதில்லை.

"அறிவுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் உரிய மதிப்புத் தந்திடாமல்





செஞ்சிக்கோட்டை வரைபடங்கள்



அலட்சியப்படுத்தப்படும் இத்தகைய அவல நிலையில், கல்வியார்வத்துடனும், நாட்டு வளர்ச்சிப் பற்றுடனும், சமுதாய உணர்வுடனும் மிக முயன்று, பொருள், உழைப்பு முதலியவற்றைக் கொட்டி ஆர்வமுடையோர் சிலர் உயர்தரமான சிறந்த தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றனர்.


"நம் தமிழ் நூல்கள் உலக அளவில் மதிக்கப்பெறல் வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு எனது நூல்களை வெளியிடுகிறேன்" என்ற சுந்தரம் வண்ண ஓவியங்கள், எண்ணற்ற படங்கள், வரை படங்கள், போட்டோக்களையும் தனது நூலில் சேர்த்தே வெளியிடுகிறார்.

"ஒரு வாசகன் நூலை எடுத்துப் படிக்கும்போதே அதனுடன் ஐக்கியமாகி விட வேண்டும். இதைப் போல் படங்கள் இணைத்து சிறப்பாகச் செய்ய யாராவது முன் வரவேண்டும். நான் முன் வந்து செய்கிறேன். இதைப் போல் என் மகன்கள் செய்வார்களா என்பது சந்தேகமே. சாதாரண எழுத்துகளுடன் கூடிய நூலுக்குத் தரும் விலையையே அரசாங்கம் இது போன்ற அரிய நூல்களுக்கும் நிர்ணயிக்கிறது" என்று ஆதங்கப்பட்ட சுந்தரம் தனது பதிப்பகத்தில் தஞ்சைப் பெரிய கோயில், செஞ்சிக் கோட்டை, வரலாற்றில் வேலூர்க் கோட்டை, குந்தவையின் கலைக் கோயில்கள், முத்தரையர், கல்வராயன் மலை மக்கள், திருவோத்தூர் வரலாறு, வரலாற்றில் வல்லம், தொல்லியல் அகழாய்வு நெறி முறைகள், வரலாற்றில் ஆரிய வைசியர், ஏரிப் பாசன வரலாறு என்று சொல்லிக்கொண்டே போகும் அளவு பல அரிய நூல்களை வெளியிட்டுள்ளார்.


"ஒரு வரலாற்று நூல் உருவாகும் போது நூலாசிரியர், ஓவியர், புகைப்படக் கலைஞர், ஸ்தபதி சகிதமாய் நானும் சென்று விடுவேன். அதற்காகும் செலவைப் பற்றி கவலைப்படாததால்தான் இன்றும் இந்தச் சிறு வீட்டிலேயே வசிக்கிறேன்.

"எங்கெங்கோ தொலைவிலுள்ள கோயில்களுக்குப் பெருஞ் செலவு செய்து செல்வோர், நமக்கருகில் உள்ள கோயில்களைக் கண்டு மகிழ வேண்டும்.

"பேராசையும், பிணக்குகளும் பிளவுப்படுத்திப் போர்களை மூளச் செய்து வாழும் மனிதரைச் சாவில் வீழ்த்தி அழிந்துள்ள பழைய வரலாறுகளைப் படித்தறிந்தால், பார்த்தறிந்தால் பல பாடங்கள் கிடைக்கும். பக்குவமும் பண்பும் தோன்றும்!" என்று பேசிக் கொண்டே போனவர், "லாபத்தைப் பார்த்தால் புத்தகத் தொழிலில் நிற்க முடியாது. என் பதிப்பகத்தின் நூல்களுக்கு விளம்பரமிருந்தால் நன்றாக விற்பனையாகும். செய்ய வேண்டும் என்று நினைப்பேன். அதற்கான முதலீடு கிடைக்காது. என் தொழில் படிப்பதுதான். நிறைய படிப்பேன். நான் பதிப்பிக்கிற நூலை முதலில் நான் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். அப்புறம் தான் மற்றவர்களுக்கு!" என்றார் 63இல் சேகர் பதிப்பகத்தைத் தொடங்கிய வெள்ளையாம்பட்டு சுந்தரம்.



❖ ஓவியர் ரெஸாக்



பளபளப்புக்கு ஒரு-லாமினேஷன்!

இந்தியப் பொருள்களை விட வெளிநாட்டுப் பொருள்களுக்குள்ள மவுசே தனி. இறக்குமதிப் பொருள் என்றால் ஒருமுறைக்கு இருமுறை தலைகீழாகப் புரட்டி எடுக்கும் மனோ பாவம் நமக்கு மட்டுமல்ல; ஓவியர் ரெஸாக் அவர்களுக்கும் இருந்திருக் கிறது. அவர் பார்த்த பொருள் ஒரு புத்தகத்தின் மேலட்டை.

வழவழப்பான அந்த மே டையை உற்று நோக்கியவ மூளைக்குள் மின்னல் வெட்டுகி

1970-ஆம் ஆண்டில் ஸ் பிரிண்டிங் தொழிலுக்கு ஒரு த பாதையை வகுத்துத் தந்த ரெ மேலட்டையைப் பளபளப்பா முயற்சியிலும் இறங்குகிறார்.


அவர் பார்த்த புத்தகத்தின் மே டையின் ஓர் ஓரத்தில் பிசிறடி இருந்த பிலிமை லாகவமாக உ எடுக்கிறார்.

சமையல் அறைக்குச் செல்கி ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பி ஒன்றை எடுத்து அடுப்பின் வைக்கிறார். ஸ்டீல் பிளேட் வெ மடைகிறது. 'பி.வி.சி. பிலிம் அதன் மேல் விரிக்கிறார். ப தட்டையாக சம பரப்பளவில் ஒ கொள்கிறது. அதன் மேல் பேப் விரித்து அழகாக ஒட்ட வைக்கி ஓர் இரப்பர் உருளையால் பே டன் உருகிய பி.வி.சி. பிலிம் ஒ கொள்ள உருட்டி எடுக்கிறார். பி. பிலிம் பேப்பரில் ஒட்டிக் கொள்கி

வெற்றி கிடைக்கிறதா? இல் பேப்பர் செம்பழுப்பு நிறம திருக்கிறது. ஆனால், இது பளபளக்கும், வழவழக்கும் வி என்ற முடிவுக்கு வருகிறார்.



❖ பெண்களாலும் முடியும்!



♣ லாமினேஷன் இயந்திரம் ஷீட் முறையில்!

வெப்ப நிலையைக் குறைத்தால் ...ப்பரின் செம்பழுப்பு நிறத்தை ...ற்றலாம் என்ற யூகம் வருகிறது. ...சய்து பார்க்கிறார். முன்பைவிட ...ப்போது பரவாயில்லை.

ஓர் உபகரணத்தை வடிவமைக் ...றார். தண்டவாளம். அதன் மீது ...க்கரங்கள் பொருத்திய மின்சார ...வப்ப நிலைக் கருவி. மேற்புறத்தில் ...டெயின் லெஸ் ஸ்டீல் பிளேட்.

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிளேட் ...ன்சாரத்தின் மூலம் வெப்பமடைய ...அதன் மீது பி.வி.சி. பிலிம். பிலிம் ...ன் மீது பேப்பர். கசங்கி விடாமல் ...ருக்க இரப்பர் விரிப்பு. பேப்பருடன் ...லிமை ஒட்ட வைக்க உருளை.

பேப்பர் சமச் சீராக வர -ஒரு ...ற்றை உபகரணத்துடன் இணைத்துச் ...றுகிறார். உபகரணம் தண்டவாளத் ...ல் நகர -பேப்பருடன் பிலிம் ஒட்டிக் ...காள்ள – வெற்றி!

இந்த நேரத்தில் பி.வி.சி. பிலிம் ...டைக்க முடியாமல் சோதனை வரு ...றது. மனம் தளரவில்லை. துணி ...யின் பேக்கிங்கில் பி.வி.சி. பிலிம் ...ருப்பது தெரிகிறது. பி.வி.சி. ...லிமைப் பெறுகிறார்.

முதல் ஆர்டர் கிடைக்கிறது. லாமினேஷன் தொழிலைத் தொடங்கி விடலாம் என்ற முடிவுக்கு வருகிற போதுதான், இதற்கு ஒரு மாற்று இருப்பது ரெஸாக்கின் கவனத்திற்கு வருகிறது.

அது, 'அடிஸிவ்' (பசை) மூலமும் லாமினேஷன் செய்ய முடியும் என்ற விவரத்தைத் தருகிறது.

பி.வி.சி. பிலிமைப் பேப்பரில் ஒட்ட வைக்க அடிஸிவ் (பசை) உதவுகிறது என்பதையும் தெரிந்து கொள்கிறார்.

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிளேட் மூலம், பி.வி.சி. பிலிமை ஒட்ட வைத்த முறையும், அடிஸிவ் (பசை) மூலம் ஒட்ட வைக்கும் முறையும் ரெஸாக்கிற்கு அபார முன்னேற்றத்தைத் தர, தொடங்கப்பட்டதுதான் யுனைடெட் லாமினேஷன்ஸ்!

இன்று லாமினேஷன் உலகில் தனி ஆட்சி புரிந்து வரும் யுனைடெட் லாமினேஷன்ஸ், நூல்களின் மேலட்டைக்கு மட்டும் பளபளப்பை ஏற்றுவதில்லை. மிகப் பெரிய போட்டோக்கள், அட்டைப் பெட்டிகள், ஜன்னல் முறைப் பெட்டிகளுக்கு லாமினேஷன் செய்து தந்து கொண்டிருக்கிறது.

ரெஸாக்கின் மூன்று மகன்களும் இந்தத் தொழிலில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள, நிறுவனம் வெகு வேகமாக வளர்ந்து கொண்டே போகிறது.

71 வயதாகும் திரு. ரெஸாக் அவர்களை யுனைடெட் லாமினேஷன் நிறுவனத்தில் சந்தித்துப் பேசிய போது – "ஓவியராக இருந்த போது கிடைத்த ஆத்ம திருப்தி இப்போது கிடைக்கவில்லை. பணம் இருக்கிறது. சமூகம் என்னை ரொம்ப மதிக்கிறது. ஆனால், மனத்தில் அமைதி இல்லை. ஓவியத் தொழிலின் மதிப்பு தெரியாமல் விட்டு விட்டோமோ என்று நினைக்கிறேன். இந்த மாதிரி நேரங்களில் தூரிகையும்- பேப்பருமாக அமர்ந்து விடுவேன்" என்றார்.

யுனைடெட் லாமினேஷன் நிறுவனத்தில் இவர் வரைந்து வடிவமைத்துத் தந்த இயந்திரங்கள் சுறுசுறுப்பாக இயங்கித் தங்கள் கடமைகளைச் செய்கின்றன.

இயந்திரங்களின் செயல்திறன், செய்முறை, பசை விகிதம், வெப்ப நிலைகளின் நுணுக்கங்களின் மூலம் தரமான லாமினேஷன் நிறுவனமாக திகழும் யுனைடெட் லாமினேஷன்ஸ், வெளிநாட்டுத் தரத்திற்கு இணையாகப் பணியாற்றுகிறது.

"இன்னும்கூட தரத்தை உயர்த்தலாம். ஆனால், லாமினேஷனுக்கு இவ்வளவு செலவா? என்று பணம் தர மறுக்கிறார்கள். விளம்பர- வியாபார யுக்திக்கு லாமினேஷன் உதவி புரிவதை மறந்து விடுகிறார்கள். எதிர்காலத்தில் லாமினேஷன், உலகின் வியாபாரப் பொருள்களில் முக்கிய அங்கமாகி விடும். மிக வேகமான வளர்ச்சியை லாமினேஷன் தொழில் அடையும்" என்றவரை வணங்கிவிட்டு விடை பெற்று – தொழிற் பகுதிக்குள் நுழைகிறோம்.

தருவிக்கப்பட்ட இயந்திரங்களுடன், ரெஸாக் அவர்களால் வடிவமைக்கப்பட்ட இயந்திரங்களுடன் பெண்கள் தங்கள் கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தனர்.

–நாகராஜகுமார்

கங்காபுரிக் காவலன்

22. நடத்த விடமாட்டேன்

கோதாவரி ஆறு அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. கோடைக் காலமான தால் ஆற்றில் பிரவாகம் குறைந்திருந்தது.

நதியில் நீராட அமைந்துள்ள புண்ணியத் துறையில், மழைக் காலத்தில் சில படிக் கட்டுகள் இறங்கினால் போதும். இப்போது பல படிக்கட்டுகள் இறங்கி, மணல் பகுதி யைக் கடந்து நதியில் நீராட வேண்டி யிருந்தது.

பௌர்ணமி வரை அமைதியாகத் விரத மிருக்குமாறு சித்தர் சொல்லியிருக்கிறார். இல்லை – கட்டளையிட்டிருக்கிறார். மூன்று வேளைகளிலும் நீராட வேண்டும். சோழ அரசி பஞ்சவன் மாதேவியால் அவ்வளவு படிக்கட்டுகளிலும் இறங்க முடியவில்லை.

மிகத்தூய்மையாகக் கடைப்பிடிக்க வேண் டியது விரதம். அகத்தூய்மை – புறத்தூய்மை புறத்தூய்மை நீரால் அமையும், அகத் தூய்மை வாய்மையால்' காணப்படும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

கோதாவரியில் மூன்று வேளைகளிலும் நீராடுதுறையில் அரசனும், அரசியும் நீராடி னார். கரையருகே இருந்த மண்டபத்தில் அமர்ந்து அவர்கள் பயபக்தியுடன் சோழர்கள் குலங்காக்கும் தெய்வமான திருச்சிறம்பலவாணனின் திருப்பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

பொன்னம்பலத்தில் வீற்றிருக்கும் குஞ்சிதபாதமுடையவனின் திருமேனியை மனக் கண்முன் நிறுத்தி அவன் நினைவில் வாழ்ந்தனர்.

பொற்பாதமெடுத்தாடும் தூயவனைப் போற்றும் திருப்பதிகங்களை அவர்கள் எதிரே அமர்ந்து ஓதுவார்கள் இசைத்துக் கொண்டிருந்தார்கள்.

சக்கரவர்த்தியும், அரசியும் அமர்ந்து பல நாழிகை நேரம் மெய்மறந்த நிலையில் இருப்பது பரிவாரங்களை வியப்பிலாழ்த் தியது. பன்னீர் கலந்த நீரில் குளித்து, நறுமணப் பொருள்களை மேனியில் பூசி, சுவைமிகுந்த உணவருந்தி பெரும்பாலான நேரம் ஓய்வுடனிருக்கும் அரசி, தன்னைத் தானே வருத்திக் கொள்வதைப் பார்க்க அவர்களுக்கு வியப்பாக இருந்தது.

பஞ்சணையின்றித் தரையில் துயின்றனர். ஒரே வேளை இலேசான உணவு அவர்கள் உடலுக்குச் சுகத்தை அளித்தது. இராசேந் திரன் தன் வாழ்நாளில் அடையாத புதிய உணர்வை அடைந்தார். அவர் உடல் இலேசானது. எங்கோ மிதப்பது போல் தோன்றியது. சில வேளைகளில் எதிரே பாடப்படும் பாடல்கள் எங்கோ இருந்து ஒலிப்பதுபோல் கேட்கும். பாடுபவர்கள் களைப்படைந்து அவர்கள் ஓய்வெடுக்கச் செல்லும்போது, இசை ஒலிக்காததைக் கூட அரசரும் – அரசியும் அறியமாட்டார்கள். புதிய உலகில் சஞ்சரிப்பதுபோன்ற இன் பத்தை உணர்ந்தார்கள்.

அரச பரிவாரங்களுக்குக் கவலை ஏற் பட்டது. கங்கைக் கரைக்குச் செல்லாமல் கோதாவரிக் கரையில் அரசரும் அரசியும் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருப்பது அவர்களுக்குச் சிறிது அச்சத்தை அளித்தது.

புதிய கோயில் பணிகள் முடிவடைந்து, சுற்றுப்புறங்களைத் தூய்மைப்படுத்தும் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கம்பீரமாக அமைந்த புதிய கோயிலைக் காண நாட்டின் பல பகுதிகளிலிருந்து மக்கள் வந்த வண்ணமாக இருந்தனர் பெரும் மதில் சுவர்கள் கட்டப்பட்டன. கோயிலுக்குள் ஒருவரும் அனுமதிக்கப் படவில்லை.

சாலைகள் தூய்மையாக்கப்பட்டன. சாலைகளின் இருபுறமும் நடப்பட்ட மரங்கள் வளர்ந்து துளிர்விடத் தொடங்கின. கட்டப்பட்ட புதிய வீடுகளில் மக்கள் குடிபுகுந்தனர்.

விக்கிரமன்

கோயில்களில் பணி செய்வோருக்காகக் கட்டப்பட்ட இல்லங்களில் அவர்கள் குடியேறினர். தஞ்சைபுரியிலிருந்து கோயில் திருப்பணி செய்யப் பலர் குடிபெயர்ந்தனர். இறைவனுக்கு நடைபெறும் ஆறு காலப் பூஜையின்போது பாடவும் ஆடவும் கலைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு புதிய நகரத்திற்கு வரத் தொடங்கினர். அதனால் நகரத்தில் கலகலப்பு அதிகமாகியது.

வீரமாதேவி புதிதாக உருவாகி வந்த நகரத்தின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்து வந்தாள். காடுகள் நிறைந்திருந்த அந்தப் பகுதி கலைக்கூடமாகியிருப்பது அவளுள்ளத்தில் பெரும் பூரிப்பை அளித்தது. அரசர் வந்தவுடன், அவருடன் ஒவ்வோர் இடமாகப் பார்த்து வரும்போது அவர் என்ன கருத்தைக் கூறுவார் என்பதைக் கற்பனை செய்து கொண்டாள். மெல்லப் புன்முறுவல் பூத்தாள். உடல் சிலிர்த்தது. உள்ளத்தில் திடீரென ஆர்வம் பொங்கி வழிந்தது. நாணம் கவ்விக் கொண்டது. கற்பனைக்கே இவ்வளவு பாதிப்பா?


அவர் கேட்பார் : "வீரமாதேவி! நாட்டியக் கலையை மறந்துவிட்டாயா?"


அவர் அப்படிக் கேட்கத்தான் வேண்டும். 'தஞ்சைபுரிப் பெரிய கோயிலில் பூர்த்தியாகாதிருக்கும் நடனத் தோற்றங்களைப் போலன்றி இங்கே முழுமையான நடனக் கலையையே கல்லில் வடிக்க வேண்டும். அதற்கு ஏற்ற சூழ்நிலை இங்கே அமைய வேண்டும்" என்று கூறுவேன்.

'சூழ்நிலையா? இப்போது இல்லாத சூழ்நிலையா? என்ன சூழ்நிலை?' என்று கேட்பார்.

நான் சொல்லத் தயங்குவேன். என் முகத்தில் நாணப்பூ மலர்வதைக் காண்பார். என்னை நெருங்கிக் காரணம் கூறுமாறு வற்புறுத்துவார்.

நான் அவர் செவிகளில் மட்டும் கேட்கும்படி, "நீங்களும் நானும் சேர்ந்து ஆட வேண்டும். சிவனுடன் பார்வதி இணைந்து ஆடிய நடன வகைகளை விளக்கும் தோற்றங்கள் அமைய வேண்டும். சிற்பக்கலை உயர்வை விளக்கும் சிற்பங்களாக அவை அமைய வேண்டும். ஓய்வு கிடைத்து, மன நிறைவுடன் நாம் சேர்ந்தே நடனத் தோற்றங்களை அமைக்கச் சிற்பிக்கு உதவ வேண்டும். வீரநாராயணபுர ஏரியின் நடுவே சில ஆண்டுகளுக்கு முன்பு... நினைவிருக்கிறதா..? அதுபோல்" என்று கூறுவேன்.





என் கருத்தை அவர் ஆமோதிப்பார்.

"கோயில் குடமுழுக்கு முடிவடைந்து, நாம் மன நிம்மதியுடன் அந்தப் பணியைச் செய்வோம்" என்று அவர் கூறுவார். "என்ன, சரிதானா? திருப்திதானா?" என்று கேட்டுவிட்டு, "உன்முகத்தில் முளைத்துள்ள நாணமலரில் ஒரிதழைக் கொய்து கொள் ளட்டுமா?" என்று கேட்பார்.

வீரமாதேவி கற்பனையில் ஆழ்ந்திருந் தாள்.

"குடமுழுக்கு எப்போது நடைபெறும். அரசர் கங்கைக் கரைக்குச் சென்றாரா? கங்கை நீருடன் வருவது எப்போது? செய்தி ஏதும் வரவில்லையே..." என்ற கவலையும் அவளைச் சூழ்ந்தது.

ஒவ்வொரு நாளும் பழையாறையி லிருந்து, அரிந்தவன்மாதேவியின் உடல் நிலை குறித்துச் செய்திகள் வந்த வண்ண மாய் இருந்தது. ஒருநாள், தேவியின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக் கிறது என்ற நல்ல செய்தியைத் தூதுவர்கள் கொண்டுவந்தனர்.

அரிந்தவன்மாதேவி நீண்ட நாள் வாழ வேண்டும் என்று கடவுளைத் துதித்தாள் வீரமாதேவி.

ஒருநாள் காலையில் வீரமாதேவி விழித் தெழுந்தபோது கருவூர்ச் சித்தர் ஏரிக் கரைக்குச் சென்று ஏரியைப் பார்வையிடு கிறார் என்ற செய்தி கிடைத்தது.

"சித்தர் வந்துவிட்டாரா?" என்று பரபரப் புடன் கேட்ட வீரமாதேவி, அவரைச் சந்திக்க ஏரிக்கரையை நோக்கி விரைந் தாள்.

புதிதாக அமைக்கப்பட்ட அந்த ஏரி பரந்து விரிந்து காணப்பட்டது. ஏரியில் காவிரியின் தண்ணீர் வந்து சேருமளவுக்கு ஏரி மிகப்பிரம்மாண்டமானதாக இருந்தது. அண்மையில் பெய்த மழையால் ஏரியில் நீர் நிறைந்திருந்தது. மெல்லிய அலைகள் கரை யில் வந்து செய்தி கூறித் திரும்பின.

காலைப் பொழுது புலர்ந்து, கதிரவ னுக்குக் கட்டியம் கூறியது. சித்தர் ஏரிக் கரைக்கருகே நின்று கிழக்கே உதயமாகும் காலைக் கதிரவனை நோக்கி இருகரம் உயர்த்தி வணக்கம் தெரிவித்துக் கொண் டிருந்தார்.

* * *

அவர் இயற்கையை வணங்கினார். இயற்கைக்கு ஆற்றல் தரும் இறைவனைப் பணிந்தார்.

"யாருக்காகவும், எவருக்காகவும் காத் திராமல் தன் கடமையை யுகயுகங்களாகச் செய்து கொண்டிருக்கும் கதிரவனே போற்றி" என்று. சத்தியவானான ஞாயிற் றைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தார். அவருடைய உதடுகள் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தன. அவர் இசைப் பாவால் இறைவனைத் துதித்துக் கொண்டிருந்தார்.

சூரிய ரச்மி ஏரி நீரின் மீது பிரதி பலித்தது. தங்கத்தை உருக்கித் தகடாக்கி ஏரிக்குக் கூரை வேய்ந்தது போல் ஏரிப் பரப்பு முழுமையும் காட்சியளித்தது.

அவர் சிரித்தார். திரும்பிப் பாராம லேயே "வா குழந்தாய், வீரம்மா! - ஓ! தேவி என்று சொல்லவில்லையோ?" என்று கூறி மீண்டும் குழந்தைபோல் சிரித்தார்.

'நான் வந்தது, அவருக்கு எப்படித் தெரியும்?' நினைத்தாள்.

"நீ வருவாய் என்பதறிவேன். வந்துவிட் டதையும் தெரிந்து கொண்டேன். எனக்கு வீரம்மா - குழந்தைதான். வீரம்மா! நீ தேவமகள்" என்று கூறி கரத்தை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

வீரமாதேவி அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கினாள். கண்ணீர்த் துளிகளால் அவர் பாதத்தை நனைத்தாள்.

"குழந்தாய்! இந்தப் பொன் ஏரியைக் கடைசி கடைசியாக என்று கண்டாய்?" என்று கேட்டு அவளை மெல்லத் தூக்கி நிறுத்தி, கேசத்தை வருடினார்.

"பத்து நாள்களுக்கு முன்பிருக்கும்" என்று கூறிய வீரமாதேவி, "ஆனால் நாள் தோறும் நம் அதிகாரிகள் ஏரியைச் சுற்றிப் பார்த்து வருகிறார்கள். புதிதாகக் கட்டப் பட்ட மதகுகளையும் கரையையும் அவர்கள்

பார்க்கத் தவறுவதில்லை" என்று மரியாதையும், பயமும் கலந்து மெல்லப் பேசினாள்.

"குழந்தாய்! இந்த ஏரி ஏன் வெட்டப்பட்டது என்று தெரியுமா?"

"எனக்குத் தெரியாது. பெரிய கோயில், பெரிய ஆவுடையார், பெரிய நந்தி, பெரிய விமானம், பெரிய ஏரி – என்று எல்லாம் பெரிதாக இருக்க வேண்டும் என்று தலைவர் விரும்பினார்".

"பெண்ணே! உன் மாமனார் செய்யாத ஒன்றை உன் கணவர் செய்து விட்டார். அதுதான் இந்த ஏரி. அவனுடைய முப்பாட்டனார் சிதம்பரத்திற்கு அருகே ஏரியை வெட்டினார். வீரநாராயண ஏரி என்ற தன் பெயரையே அந்த ஏரிக்கும் சூட்டினார். இந்த ஏரிக்கு யார் பெயரை வைக்கலாம்?" என்று வீரமாதேவியைக் கேட்டு விட்டு, தன் விழிகளை மூடினார். ஆனால் அரைவிழி திறந்திருந்தது.

"நகரத்திற்கு, கோயிலுக்கு, ஏரிக்கு என்ன பெயர் வைக்கலாம் என்பது எனக்குத் தெரியாது. ஊருக்கும், கோயிலுக்கும் என் பெயரை வைக்க வேண்டும் என்று நான் சக்கரவர்த்திகளை வற்புறுத்துவதாகப் பெரியவர்கள் பேசிக் கொள்கிறார்கள். நான் அவ்வாறு கனவில் கூடச் சிந்தித்ததில்லை. என் பெயர் வேண்டாம். வேண்டவே வேண்டாம்" என்று வீரமாதேவி இருகரங்களையும் மார்பு எதிரே கூப்பிப் பணிவாகச் சொன்னாள்.

"ஏன், ஏன் கூடாது? உன் பெயரை ஏன் வைக்கக் கூடாது? இராசேந்திரன் வந்தவுடன் அவனிடம் சொல்லப்போகிறேன். 'இராசேந்திரா! இந்தக் கோயில் கட்ட யார் காரணம்?' என்று கேட்பேன்.

உன்னைச் சுட்டிக் காட்டி 'என் அன்புக்குரிய வீரமாதேவிதான் காரணம் என்று கூறுவான் – அப்படித்தானே?" கண் சிமிட்டினார் சித்தர்.

வீரமாதேவியின் மேனி மெல்லச் சிலிர்த்தது. தலையைப் பலமாக அசைத்து, "இல்லை, இல்லை. நான் காரணமில்லை. எல்லாம் வல்ல இறைவன் காரணம்" என்று கரத்தை மேல் நோக்கி உயர்த்தினாள்.

"சரி, இல்லை என்று நீ சொன்னால் அரசி சம்மதிப்பாளா? அரிந்தவன்மாதேவி தான் ஒப்புக் கொள்வாளா?" சித்தர் கேட்டார்.

"சுவாமி! அவர்கள் ஒருங்கிணைந்து இதேபோல் ஊர் உலகம் எல்லாம் வதந்தியைப் பரப்பி விடுகிறார்கள். நான் ஓர் எளிய கிராமத்துக் குடியானவனின் மகள். தாய் தந்தை அற்ற நான் பாட்டனார் கொடுத்த ஊக்கமும் உதவியும் என் உடன் பிறந்தானின் ஆதரவும் கொண்டு நடனக் கலையைப் பயின்றேன். தேர்ந்தேன். அரசரின் பார்வையில் நான் வீழ்ந்தேன்".

சித்தர் குறுக்கிட்டார். "உன் பார்வை இராசேந்திரன் மீது விழவில்லையோ?" என்று கூறிச் சிரித்தார்.

வீரமாதேவி தலை குனிந்தாள். "சித்த மகாபுருஷரே! முக்காலும் உணர்ந்த தாங்கள் என்னைப் பரிசோதிப்பது சரியா? உங்களிடம் நான் மிகப் பணிவுடன் வேண்டுகிறேன். என் பெயர் எதற்கும் வேண்டாம். நான் ஒருபோதும் அப்படி எண்ணியதில்லை" – சொற்களில் பணிவு, மென்மை இருந்தன.

"ஓ!" என்று கை கொட்டிச் சிரித்த சித்தர், "அந்தப்புரத்தில் பலபேர் அறிய அன்றொருநாள் நீ சபதம் செய்தாயாம். 'இந்தச் சோழ நாடு உள்ளவரை என் பெயரும் புகழும் நிலைத்து நிற்கும்படியாக நான் ஏதாவது செய்து விடுகிறேன்' என்று. உன் பெயரில் இந்தப் பெரிய கோயிலும், நகரமும், ஏரியும் அமைந்துவிட்டால் சோழ நாட்டின் புகழ் உள்ளளவும் உன் பெயர் நின்று நிலைத்து நிற்குமல்லவா? வீர நாராயண ஏரியும், லோகமாதீச்வரமும், ராஜராஜேச்சரமும் அந்த அரசகுலத்தவரை நினைவுபடுத்துகின்றன. நீ சபதம் செய்ததே அவற்றை மனத்தில் கொண்டுதானே?" – கேட்டுவிட்டு சித்தர் கூர்ந்து நோக்கினார்.

வீரமாதேவி மெல்ல விசும்பினாள். "மகாபுருஷரே! நான் என் குலத்தவர் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். எனக்கு அப்படிப்பட்ட எண்ணம் என்றுமே இருந்ததில்லை. அரசியையும், மற்ற இளவரசிகளையும் விட என் பெயர் நிலைத்து நிற்குமாறு நான் செய்வேன் என்று நான் சூளுரைத்தது உண்மையே. ஆனால், நகரத்திற்கும் கோயிலுக்கும் என் பெயரைச் சூட்டவேண்டும் என்று நான் என்றும் விரும்பியதில்லை. சக்கரவர்த்தியின் திருப்பெயர்தான் இடப்பட வேண்டும் என்று நான் வற்புறுத்துவேன். இராசேந்திர சோழேச்வரம், இராசேந்திர சோழப் பெருநகரம், இராசேந்திர சோழப் பேரேரி... இப்படியாக அழைக்கப்படுவதைத்தான் விரும்புவேன்" என்று கூறி இருகரங்களையும் கட்டிக்கொண்டு விழிகளை மூடிக் கொண்டாள்.

"சுவாமி! என் தலைவர் பெயர் சூரிய, சந்திரன் உள்ளளவும் ஒலிக்கப்பட வேண்டும். அவர் பெயரை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் மக்கள் உச்சரிக்க வேண்டும். அதுவே என் ஆசை" என்றாள்.

"ஏன், பெரிய கோயிலுக்குப் பஞ்சவன் மாதீச்வரம் என்றும் நகரத்திற்குப் பஞ்சவன் மாதேவி பெருநகர் என்றும் ஏன் பெயரிட்டு அழைக்கக் கூடாது? அதில் உனக்கு எந்தவிதக் கருத்து வேற்றுமையும் இல்லையே?" என்று சித்தர் கேட்டு, அவள் மௌனத்தைக் கலைத்தார்.

வீரமாதேவி தன் விழி நீரைத் துடைத்துக் கொண்டு, "சித்தரின் சித்தம் எப்படியோ அப்படியே எங்களுடையதும். தங்கள் கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கிறேன். அரசியாரின் பெயரை எல்லாவற்றிற்கும் இடுவதில் எனக்குப் பெருமகிழ்ச்சியே" என்றாள்.

பிறகு, "சுவாமி! ஏதேதோ பேசி, முக்கியமாகக் கேட்க வேண்டியதை மறந்து விட்டேனே! அரசரும் அரசியும் கங்கைக் கரைக்குச் சென்றனரா? குடமுழுக்குக்குள் கங்கைநீர் வருகிறதா? தாங்கள் சக்கரவர்த்திகளைச் சந்தித்தீர்களா?" என்று ஆவலுடன் கேட்டாள்.

கருவூர்ச் சித்தர், வீரமாதேவியை உற்று நோக்கியவாறு சொன்னார் : "வீரமாதேவி! உன் எண்ணம், இராசேந்திரன் விருப்பம், பஞ்சவன்மாதேவியின் ஆசை எல்லாம் நிறைவேறப் போகிறது. இராசேந்திரன், கங்கை நீருடன் வருகிறான். கலிங்க நாட்டு யானைகள் கங்கை நீரைப் பொற்குடங்களில் சுமந்து வருகின்றன".

வீரமாதேவி விழிநீரைத் துடைத்துக் கொண்டு வியப்புடன் சித்தரைப் பார்த் தாள்.

"சுவாமி...?" என்று விழிகளை அகல விரித்து அவர் சொல்வதை நம்ப முடியாத நிலையில் இருப்பது போல் கேட்டாள்.

"ஆமாம், உண்மை. உங்களுக்காக இல்லாவிட்டாலும், எனக்காக, இந்தப் பெரிய கோயிலில் குடமுழுக்கை உரிய நாளில் நேரத்தில் நிறைவேற்ற வேண்டும். இன்னும் இரண்டு நாள்களில் பௌர்ணமி. அதற்கு அடுத்த பௌர்ணமி அன்று பெரிய கோயிலின் குடமுழுக்கு. மற்றொரு செய்தி - நான் இந்த ஏரிக்கரைக்கு ஏன் வந்தேன் தெரியுமா? பலநூறு யானைகள் மீது பெரும் குடங்களில் ஏற்றப்பட்டு வரும் கங்கை நீர் குடமுழுக்குக்கும், பெருவுடையாரின் அபிஷேகத்திற்கும் போக மீதமாவதை வீணாக்கக் கூடாது. குடங்களிலுள்ள கங்கை நீரை இந்த ஏரியில் சேர்க்க வேண்டும். காவிரியுடன் கங்கை கலக்க வேண்டும். அதற்காக இந்த ஏரியைக் காண வந்தேன். இந்தப் பொன்னேரி மேலும் புனிதமடையப் போகிறது. வீரமாதேவிப் பேரேரியாகப் புகழ்பெறப் போகிறது" என்றார்.

"கூடாது - கூடாது. நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்" என்று வீரமாதேவி கூவினாள். "அப்படி என் பெயர் வைப்பது உறுதி யென்றால் நான் குடமுழுக்குக்கு முன் பாகவே இந்த நாட்டை விட்டு - ஏன் உலகை விட்டே மறைந்து விடுவேன்" என்று ஆவேசம் வந்தவள் போல் கூறினாள்.

சித்தர் சிரித்தார். "பெண்ணே! அப்படி ஓர் எண்ணம் உனக்கிருக்கிறதா? ஹூம் பார்ப்போம். இராசேந்திரன் இங்கு வந்த வுடன் பெயர் சூட்டும் படலத்தைக் கவனிப் போம். இனியும் தாமதம் செய்யாமல் சென்று இராசேந்திரன் புதல்வர்களை அழைத்து, குடமுழுக்கு விழாவிற்கான ஏற் பாடுகளைக் கவனிக்கச் சொல். விரை வாக இயங்க வேண்டும். மற்றவர் சொல் வதை செவி சாய்க்கக் கூடாது" என்றார்.

வீரமாதேவி விரைந்தாள். அவள் கூறி யதை ஒருவரும் நம்பவில்லை.

பழையாறையில் நோய்வாய்ப்பட்டிருந்த அரிந்தவன்மாதேவி சற்றுத் தெளிந்து படுக்கையினின்று எழுந்து உட்காரத் தொடங்கினாள்.

சக்கரவர்த்தியும், அரசியும் விரைவில் வருவார்கள் என்ற செய்தி அறிந்த அரிந்தவன் மாதேவி, "கங்கை நீருடன் வருகிறார்களா?" என்று கேட்டாள்.

"ஆம்" என்ற மறுமொழி கிடைத்தவுடன் "அந்த மாயக்காரி வீரம்மாள் தன் எண் ணத்தை நிறைவேற்றிவிட்டாள்" என்று கூறும்போது அதில் எரிச்சல், பொறாமை, ஆத்திரம் நிறைந்திருந்தன.

"பௌர்ணமி நாளன்று குடமுழுக்கு நடக்கக்கூடாது. நான் அனுமதிக்க மாட் டேன்" என்று வெறி பிடித்தவள் போல் பேசினாள்.

"அந்த மாயக்காரியின் எண்ணம் நிறை வேற விடமாட்டேன். தன் இளமையால் அரசரை வயப்படுத்தி இந்த நாட்டை அபகரிக்கப் பார்த்த சூழ்ச்சிக்காரியின் திட்டம் வெற்றியடைய விடமாட்டேன். நான் இறந்துவிடுவேன் என்று எண்ணினார்கள். இறைவன் என் பக்கம். அவனருளால் பிழைத்து விட்டேன்" என்று ஆவேசத்துடன் பேசினாள். பிறகு சற்று அமைதியடைந் தாள்.

"கடவுளே! மரணவாயிலுக்குச் சென்ற என்னை ஏன் பிழைக்க வைத்தாய்? உயி ருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் என்னை விட்டுவிட்டு அரசி பஞ்சவன் மாதேவியும் வடக்கே போய் விட்டாள். இந்த நிலையில் எனக்கு எதற்கு இந்த உலக வாழ்க்கை? கடவுளே! என்னைக் கொண்டு போய்விடு. அவர்கள் இங்கே வருவதற்குள் கொண்டு போய்விடு. அப்போது கங்கை குடமுழுக்கு நடைபெறாது. நான் போன பிறகு நடந்தால் என்ன, நடக்காவிட்டால் எனக்கென்ன?" என்று அரிந்தவன்மாதேவி வெறி பிடித் தவள் போல் பேசினாள்.

(தொடரும்)

இளைய அமுதம்

தயாரிப்பு : குண்டுமணி



தந்தி

அன்று சென்னை நகரத்திலுள்ள ஹாஸ்டலில் ரகு தன் அறை வாசலில் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தான். "உனது அன்னைக்கு உடல் நலம் குன்றியிருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும் - ராஜன்," என்று தந்தியில் கண்ட வாசகம் அவனைக் குழப்பியிருந்தது. மறுநாள் காலை பத்து மணிக்கு அவன் கல்லூரிக்கும் மற்றொரு கல்லூரிக்கும் கிரிக்கெட் பந்தயம் நடக்கவிருந்தது. அந்தப் பந்தயத்தின் வெற்றிக்கு ரகுவையே அவனது கல்லூரி மாணவர்கள் நம்பியிருந்தனர். இந்தத் தருணத்தில் இப்படி ஒரு தந்தி வந்து அவனை மலைக்க வைத்தது.


செங்கல்பட்டில் அவன் தந்தை மிராசுதார். மாலை ஐந்து மணி பஸ்சில் புறப்பட்டால் இரவு ஒன்பது மணிக்குள் வீட்டுக்குச் சென்று விடலாம். அன்னையை உடல் நலம் விசாரித்து விட்டு, சரியாயிருந்தால் காலை ஐந்து மணி பஸ்சில் ஏறி ஒன்பது மணிக்குள் சென்னை வந்து விடலாம் என்று திட்டம் போட்டு ஒரு சட்டை வேட்டியைப் பையில் திணித்துக் கொண்டு பிராட்வே போய் பஸ் ஏறினான். வழி நெடுக அவன், தன் அன்னைக்கு ஒன்றுமில்லாமல் இருக்க வேண்டுமே என்று கடவுளைப் பிரார்த்தித்தபடியே சென்றான்.

செங்கல்பட்டில் பஸ்ஸை விட்டு இறங்கி ஓட்டமாக வீட்டை நோக்கி ஓடினான். அவன் வீட்டில் சலசலவென்று பேச்சுக் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. ரகுவின் அன்னை தன் கணவருக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். அவளுக்கு எந்தவிதமான வியாதியும் இருப்பதாகத் தெரியவில்லை. 'அடடா, யார் தனக்குப் பொய்த் தந்தி கொடுத்து விட்டார்கள்? எதற்காக இப்படி அலைக்கழித்தார்கள்?' என்ற கேள்விக் குறி பிறந்தது.

ரகுவின் கல்லூரிக்கும் மற்றொரு கல்லூரிக்கும் நடக்கும் கிரிக்கெட் பந்தயத்தில் ரகுவின் பக்கத்து வீட்டுப் பாலன் விளையாடவிருந்தான். 'அவன்தான், தான் ஆடினால் தன் கல்லூரிக் குழுவுக்குத் தோல்வி வந்து விடும் என்று இப்படி ஒரு பொய்த் தந்தி கொடுத்திருப்பானோ? அவனைத் தவிர இப்படி விஷமம் செய்வதற்கு யாருமிருக்க மாட்டார்களே' என்று ரவி எண்ணினான். ஆனாலும் வீட்டில் தன் அன்னை பூரண சுகத்துடன் இருந்தது அவனுக்குத் தெம்பைத் தந்தது. அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து குளித்து விட்டு 'அப்பா! அம்மா! இன்று எனக்குக் கிரிக்கெட் பந்தயம். காலை பத்து மணிக்குச் சென்னைக் கல்லூரி மைதானத்தில் இருக்கிறது. நான் வருகிறேன்' என்று புறப்பட்டான்.

பஸ் ஸ்டாண்டுக்குப் போனதும் அவனுக்கு அந்தச் செய்தி கிடைத்தது. அன்று சர்க்கார் 'பந்த்' நடப்பதற்கு அறிவித்திருப்பதாகவும், பஸ், ரயில் ஒன்றும் போகாது என்றும் தெரிய வந்தது. அன்றைய பந்தயத்தில் தான் கலந்துகொள்ள முடியாத துக்கத்தில் வீட்டுக்குத் திரும்பினான். மீண்டும் மாலை ஆறு மணிக்கு வந்து சென்னைக்குப் பஸ் ஏறினான்.

ஹாஸ்டலுக்குப் போனதும் தன் கல்லூரி சகாக்கள் திட்டப் போகிறார்கள் என்று எதிர் பார்த்துப் போனபோது, "ரகு! நல்ல காலம், இன்று பந்த். பஸ் போக்குவரத்து வசதி இல்லாததால் கிரிக்கெட் பந்தயத்தையும் ரத்து செய்து விட்டார்கள். நாளைக்குப் பத்து மணிக்குத்



மதியூகி பீர்பால்

ஓர் அரச விருந்தில் அக்பருக்கு அருகில் மதியூகி பீர்பால் அமர்ந்திருந்தார். விருந்து முடிவுறும் நேரத்தில் பீர்பால் மீது நகையாட விரும்பினார் அக்பர். ஆகவே மன்னர் அக்பர் மெதுவாகத் தம் தட்டிலுள்ள பழக்கொட்டைகளை பீர்பாலின் தட்டில் போட்டு, "இன்று பீர்பாலுக்கு ஒரே பசி போலும்! இன்று இரண்டு மடங்கு பழங்களைத் தீர்த்துக் கட்டி விட்டார் எத்தனை பழக்கொட்டைகள்!" என்று சிரித்தார் மன்னர்.

"என்னை விட மன்னருக்கு அதிகப் பசி. அவர் பழக்கொட்டைகளையும் விட்டு வைக்கவில்லை!" என்று பதில் கூறி மன்னரைக் கதி கலங்க வைத்து விட்டார்.

ான் ஆடப் போகிறோம். நீ ந்து விட வேண்டுமே என்று வலைப்பட்டுக் கொண்டிருந் தோம். இரவே நீ வந்ததில் ங்களுக்குத் திருப்தி" என்று றினார்கள்.

"உன் அன்னைக்கு உடல் லம் எப்படி இருக்கிறது? அசௌகரியம் ஒன்றுமில் லையே".

"யாரோ பொய்த் தந்தி காடுத்து என்னை ஊருக்கு ட்டை கட்டி அனுப்பச் செய் திருக்கிறார்கள். பந்த் அந்த ஷமியின் எண்ணத்தில் ண்ணை வாரிப் போட்டு ிட்டது" என்றான் ரகு.

மறுநாள் கல்லூரி மைதானத் ில் நடந்த கிரிக்கெட் பந்த த்தில் ரகுதான் செஞ்சுரி பாட்டுத் தன் கல்லூரியின் பருமையை உயர்த்தினான். பளலிங்கில் எதிர்க் கல்லூரி ின் மூன்று விக்கெட்களை ீழ்த்தினான். ரகுதான் அன் றய ஆட்டத்தின் கதாநாயக ாகத் திகழ்ந்தான்.

எதிர்க் கல்லூரி மாணவன் பாலன், ரகுவிடம் வந்து கை குலுக்கிவிட்டு, "ரகு! என்னை மன்னித்து விடு. செங்கல்பட்டி விருந்து உனக்குப் பொய்த் தந்தி கொடுக்கும்படி என் தம்பியைப் பணித்தது நான் தான். உன்னை விளையாடாமல் செய்து விட வேண்டும் என்ற என் யுக்தி பலிக்கவில்லை. பந்த் என் எண்ணத்தில் மண் ணைத் தூவி விட்டது" என்றான்.

"அதனாலென்ன, பரவா யில்லை, எல்லாம் நல்லபடி யாகவே முடிந்தன" என்று பாலனைச் சமாதானப்படுத்தி னான் ரகு.

ரகுவுக்கு அவனது கல் லூரிச் சகாக்கள் பூமாலை அணிவித்து அவனைத் தோளில் சுமந்து கொண்டு மைதானத்தைச் சுற்றி வந்து வெற்றியைக் கொண்டாடி னார்கள். பாலன் தலை குனிந்த படியே தோல்வியுற்ற கல்லூரி நண்பர்களோடு வெளியேறி னான்.

அதிசயம்; ஆனால் உண்மை!

1. முதல் கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச் வண்ணத்தில் எப் பொழுது எங்கே காட்டப்பட்டது தெரியுமா?

2. முதல் ஒலிம்பிக் பந்தயம் தொலைக்காட்சியில் தொடர்ச்சியாக ஒளிபரப்பப் பட்டது எங்கே?

3. முதல் மிருகக்காட்சி சாலை எங்கே ஏற்பட்டது?

4. உலகின் மிக நீண்ட பாம்பு எங்கே உள்ளது?

5. எப்பொழுது 'சப்மரைன்' (நீர்மூழ்கிக் கப்பல்) முதலில் பயன்படுத்தப்பட்டது?



விடை:

1. 1968ஆம் வருடம் ஆஸ்தி ரேலியாவுக்கும் இங்கிலாந் துக்கும் நடந்த நான்காவது டெஸ்ட் பந்தயம்தான் தொலைக் காட்சியில் வண்ணப்படமாக ஒளிபரப்பப்பட்டது. இந்தப் பந்தயம் ஹிடிங்லியில் நடந்தது.

2. லண்டனில் 1948இல் நடை பெற்ற ஒலிம்பிக் பந்தயம்தான் தொடர்ச்சியாகத் தொலைக் காட்சியில் இடம் பெற்றது.

3. முதல் மிருகக் காட்சி சாலை சைனாவில் கிறிஸ்துவுக்குமுன் 12-ஆம் நூற்றாண்டில் சீன அரச னால் ஆரம்பிக்கப்பட்டது.

4. உலகின் மிக நீண்ட பாம்பு மலேயாப் பகுதிகளில் காணப் படுகிறது. சில சமயம் பைத் தான் பாம்பு 30 அடி நீளம் இருக்கும்.


5. முதல் சப்மரைன் 1620இல் டச்சுக்காரர் கார்னலியஸ்வான் டிரபின் அவர்களால் தயாரிக் கப்பட்டு நீரில் விடப்பட்டது.

நியாயம் கிடைத்தது

சென்ற நூற்றாண்டில் ிழ்நாட்டில் பிரசித்தமான ீதிபதி வேதநாயகம் பிள்ளை ருந்தார். அவர்தான் தமிழில் தல் நாவலை எழுதியவர். வரது புத்திக்கூர்மைக்கு றைய ஆதாரங்கள் உண்டு.

ஒருநாள் நீதிபதி வேத ாயகம் பிள்ளை ஒரு வழக் கைப் பற்றித் தீவிரமாக ராய்ந்து கொண்டிருக்கும் ாது, அது பொய் வழக்கு ன்று தெரிந்தது. அதற்கான டதிட்டங்களைப் பற்றி ராய்ந்து பார்த்தார்.

அந்தத் தருணத்தில் வழக் கைப் பதிவு செய்த வாதி ஒரு ண முடிப்பை நீதிபதியிடம் ழங்கி, "நீங்கள் என் பக்கம் ாதகமாகத் தீர்ப்பு வழங்க ண்டும்" என்று கேட்டுக்




கொண்டார். புத்திசாலி நீதி பதிக்கு உண்மை புரிந்து விட்டது.

அடுத்த நாள் நீதிபதி வேத நாயகம் பிள்ளை அந்தப் பணமுடிப்பை நீதி மன்றத்தில் வைத்து, "இந்தப் பண முடிப்பு இந்த வழக்கின் உண்மையைக் கண்டுபிடித்துக் கொடுத்து விட்டது!" என்றார்.

பிரதிவாதிக்குச் சாதக மாகத் தீர்ப்பு வழங்கிவிட்டு, தமக்கு வழக்கை முடிவெடுக்க உதவிய வாதிக்கு மன்னிப்பு வழங்கினார்.

அமுதசுரபி வினாவிடை அரங்கம்

எதை மறக்கக் கூடாது?
எதை மறைக்கக் கூடாது?



அமுதசுரபி வாசக அன்பர்களின் கேள்விகளுக்கு டாக்டர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பதிலளிக்கிறார்.

திருமடங்களைப் பொறுப்பேற்று நடத்து வர்கள் சாதி அடிப்படையில்தான் நியமிக்கப் டுகிறார்களென வீரமணி கூறுகின்றாரே? அது ண்மையா?

. செங்குட்டுவன், சென்னை – 101.

நூற்றுக்கு நூறு உண்மை.

அண்மையில் ஒரு சாமியாரைப் பற்றி பத்தி கைகள் தங்கள் பக்கங்களை நிரப்பிக் கொண் ருந்தபோது, தாங்கள் என்ன நினைத்தீர்கள்? வெளிப்படையாகச் சொல்ல முடியுமா?

மு. வெ. முருகப்பன், பள்ளத்தூர்.

நமது சமயத்திற்கு இப்படியும் ஓர் இழிவு வரவேண்டுமா என்று நினைத்தோம்.

தங்கள் வாழ்க்கை வரலாற்றைத் தாங்களே எழுதி வெளியிட்டுள்ளீர்களா?

பூண்டிகே. குப்புசாமி, பூண்டி.

வரலாறாக எழுதவில்லை. ஆனால், "மண்ணும் மனிதர்களும்" என்ற தலைப்பில் தமிழகத் தலைவர்களுடன் இருந்த தொடர்பு பற்றி எழுதப் பெற்றுள்ளது. இந்தக் கட்டுரைத் தொடரில் வாழ்க்கையில் நடந்த சில நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

எதை மறக்கக்கூடாது? எதை மறைக்கக் கூடாது?

மனோமணாளன், கோவை – 11.

நன்றியை மறக்கக்கூடாது. தவறுகளை மறைக்கக்கூடாது.

சிவபெருமான் திருநடனம் புரியும் குற்றாலத்திலுள்ள சித்திர சபையின் அபூர்வ ஓவியங்கள் மாசடைந்து அழியும் நிலையில் உள்ளன. அறநிலையத் துறைக்குப் பன்முறை எழுதியும் பயனில்லை. தாங்களாவது அந்த ஓவியச் சிறப்பை அரசுக்கு உணர்த்தி ஆவன செய்ய உதவலாமே?

வை. குஞ்சிதபாதம்பிள்ளை, திருபுவனம்.

முயற்சி செய்கின்றோம்.

தொடக்கம்... முடிவு, விளக்கி அருளுங்கள்.

தாமரைச் செல்வி சுந்தர், திருபுவனம்.

குறைவில் தொடக்கம். நிறைவில் முடிவு.

இலக்கியம் மனித மனத்தைப் பக்குவப் படுத்துமா? அதுவும் இன்றைக்குப் படைக்கப்படும் இலக்கியங்களால் ஏதும் பயன் உண்டா?

ஆர். பரமசிவம், திருச்சி.

இலக்கியம் மனித மனத்தைப் பக்குவப் படுத்தும். இன்றைய இலக்கியங்களிலும் பயனுடையன உண்டு.


தாங்கள் ஆற்றிய பணிகளில், சமுதாய மேன்மைக்கு எந்தப் பணி சாலச் சிறந்ததெனத் தாங்கள் மதிப்பிடுகிறீர்கள்?

கவிஞர் உ. மணிபாரதி, சிங்கம்புணரி.

1982 ஆம் ஆண்டில் நடந்த மண்டைக்காடு சமாதானப் பணி.

சிவப் பரம்பொருளை இலிங்கத் திருவுருவாக வழிபடுவதன் தத்துவ உட்பொருளை உணர்த்தி அருள் செய்யுங்கள்.

புலவர் சு.கதிரவன், அவினாசி.



உலகம் உருண்டை. சிவலிங்கத்தின் பாணம் உலகம். பாணம் தங்கும் களம் ஆவுடை. "எல்லா உலகமும் ஆனாய்", "ஞாலமே! விசும்பே! இவை வந்து போம் காலமே!" என்ற அருள் வாக்குகள் சிந்திக்கத்தக்கன.

அறிவியல் துறையில் அடிகளார் அவர்களுக்கு ஆர்வம் பிறக்க அடிப்படைக் காரணம் என்ன? ஆன்மிக உணர்வு செழித்தும், அறிவியல் உணர்வு சிதைந்தும் இருப்பதாகக் கருதுகின்றீர்களா?

கோ. வெங்கிடாசலபதி, தேவகோட்டை.

வாழ்க்கையைப் பயனுடையதாக்குவது அறிவியல் என்பது ஒரு காரணம். காரைக்குடி மத்திய மின் வேதியியல் ஆய்வக விஞ்ஞானிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. ஒரு காரணம்.

ஆன்மிகம் செழித்து வளர்கிறது என்பது உண்மையன்று அதுபோலவே அறிவியல் உணர்வு சிதைந்து வருகிறது என்பதும் உண்மையன்று ●

ஸ்ரீ

சப்தமில்லாமல் ஒரு...”

ஸ்ரீரங்கநாதன்

சிரஞ்சீவி கணேசனுக்கும் ...பாக்கியவதி மாரியம்மா... ...ம் பாணிக்கிரகணம் செய்வ... பெரியோர்களால் நிச்சயிக்... ...ட்டு...

...றுபடியும் ஒரு தடவை ...க கல்யாணப் பத்திரிகை ...ப் படித்துவிட்டு உடனிருந்த ...த்தில் கண்களை ஓட்டினார், ...மாறன்.

...ட்டாரம் திருமணத்துக்கு ...கு சேரவேண்டுமென்றும் ...ல் வந்து அழைக்க முடியாத ...ு மன்னிப்புக் கேட்டுக் கொண் ... பார்கவிதான் எழுதியிருந் ...

...பதினோரு வருஷங்களுக்கு ...பு அவருடன் பார்கவி இதே ...ளையில் ஒன்றாய் ஒரே ...சில் வேலை பார்த்தவள். ...ு வருஷப் பழக்கம்தான். ...றுதல் அவளுக்கு மதுரைக்கு ...றலாகிவிட்டது. பார்கவியின் ...வர் ஒரு பிசினஸ் கன்ஸல் ...ட். அவருக்கு எந்த ஊரும் ...ஒருதான்.

...பார்கவியின் நட்பு அறி ...சனைப் பொறுத்தவரை மறக்க ...யாத ஒன்றென்றால் ...றுக் காரணம் உண்டு. பார் ...வியின் கணவன் ராமச்சந்திரனை ... அவன் ஆசாரம். தீவிரமான ...ஷ்ண பக்தை. அநியாச ...கோ கடவுள், ஜாதி, மதம் ...ன்ற எந்த 'மூடப் பழக்கம் ...ம்' கிடையாது. ராமகிருஷ்ணன் ...ற தன் பெயரைக்கூட ...ரசன் என்று சட்டபூர்வமாக ...றிக் கொண்டுவிட்ட சீர்திருத்த ...தி அவர். நேரம் கிடைத்த ...தெல்லாம் பார்கவியின் வாயைக் கிண்டி வயிற்றெரிச் சலைக் கொட்டிக் கொள்வது அவர் வழக்கம்.

ஆனால் அவளுடைய ஆசார அநுஷ்டானங்கள் பூஜை புனஸ் காரங்கள் பற்றி அவர் கிண்ட லாய்ப் பேசும் போதெல்லாம், "உங்களுக்கு ஏன் சார் அதெல் லாம்? எனக்குப் பிடிக்கறதுன்னு செய்றேன். உங்களுக்குப் பிடிக்க லேன்னா விட்டுடுங்களேன்" என்று சிரித்துக் கொண்டே ஒதுங்கி விடு வாளே தவிர, கோபம் என்பதே அவளுக்கு வந்து அவர் பார்த்த தில்லை.

அந்தப் பார்கவியின் மக னுக்குத்தான் கல்யாணம். அவள் இப்போது தஞ்சாவூர் கிளை அலுவலகத்தில் இருப்பதாய்க் கேள்விப் பட்டிருந்தார். முகூர்த் தம் தஞ்சாவூரில்தான்.

அவள் இங்கிருந்தபோது அவளுக்குக் குழந்தை குட்டி ஒன்றும் இல்லை. அதற்கப் புறமும்கூடப் பிறந்ததாக ஏதும் தெரியவில்லை. ஆனால் ஏதோ ஒரு சிறுபிள்ளை எடுத்து வளர்ப்ப தாகக் காதில் விழுந்திருந்தது. மற்றபடி. விவரம் ஒன்றும் அவ ருக்குத் தெரியாது.

ஆபீஸ் நட்பு ரயில் சிநேகம் போல் தேய்ந்துதான் போய் விட்டது. அதுவும் ஒரு பெண் ணுடன் எப்படி நீடித்திருக்க முடியும்? ஆனாலும் அவளை மறந்துவிடாமல் கல்யாண அழைப் பிதழை அனுப்பியிருக்கிறாளே!

கட்டாயம் போக வேண்டியது தான். அவளுடைய மூடப் பழக் கங்கள், நம்பிக்கைகள் தாம் அவருக்குப் பிடிக்காதே தவிர அவளைப் பிடிக்கும்; அவளுடைய அமைதியான, இதமான குண இயல்புகளைப் பிடிக்கும். அதற் காகவாவது போய்த்தான் தீர வேண்டும்.

வேன்டி புறப்பட இன்னும் ஐந்து நிமிடம் இருந்தது.

ஊர்க் கதைகளையெல்லாம் பேசிவிட்டு மறுபடியும் கல்யாண விஷயத்துக்கு வந்துவிட்டான், கணேசன்.

"இதோ பார், மணி, இரண்டு நாள் முன்னதாக நீ வந்துடணும். தெரியுமா? ஏதாவது ஒரு கார ணத்தைச் சொல்லிட்டுக் கடைசி நிமிஷத்தில வராம இருந்திடாதே... என்ன?" - உரிமையோடு அவன் தோளில் தட்டினான், கணேசன்.

"எத்தனை தரம்தான் சொல்வே, கணேஷ்? நிச்சயமா வரேன்... ஆனா, இந்த இரண்டு நாள் முன்பு வரணுங்கறதுதான்..." என்று இழுத்தான், மணிமாறன்.

"ஏன்? ஏன் வரமுடியாதுங் கறேன்? ஒரு வருஷமா நாம பழக றோம். எத்தனையோ தடவை நான் கூப்பிட்டுங்கூட நீ எங்க வீட்டுக்கு வந்ததில்லே. இப்போ என் கல்யாணச் சாக்கிலாவது நீ வரத்தான் வேணும்... ப்ளீஸ் மணி... எங்க சிஸ்டர் கூட நீ பழகிப் பார் தெரியும். ஹௌ நைஸ் ஷீ ஈஸ்... யூ... நோ...?" என்று கண்கள் பளிச்சிடச் சிரித்தான், கணேசன்.

"அதுக்கில்லே கணேஷ்! நானோ மூணாவது மனுஷன். கல் யாண வீட்ல எல்லாம் சொந்தக் காரங்களா இருப்பாங்க. நான் எப்படி...?"

"அதெல்லாம் ஒன்னுக்கும் கவலைப்படாதே. நானிருக்கேன் 'கம்பெனி'க்கு... நீ வர்றே. அவ் வளவுதான்" என்று தீர்மானமாய்க் கட்டளை போட்டவன், "அது சரி...! நீ எப்ப கல்யாணச் சாப்பாடு போடறதா உத்தேசம்?" என்றான், திடீரென்று நினைவுக்கு வந்த வனாய்.

"ப்ச..." என்றான், மணிமாறன். "அதையேன் கணேஷ் கிளறிக் கிட்டு? அதான் ஒரு தடவை சொன்னேனே... எங்கப்பா எங்க காதலைத் தீவிரமாய் எதிர்க் கிறாரே! இந்த ஜாதி ஒண்ணு

நடுவில... நாங்க பிள்ளைமார். உஷா கவரை நாயுடு. எதிர்த்துக் கிட்டு செய்றதுக்கும் எனக்கு இஷ்டமில்லை. அவர் மனசு மாறட்டும்னு காத்திருக்கோம்" அவன் குரலில் ஆதங்கம் வேதனையுடன் ஒலித்தது.

கணேசன் ஆதுரத்துடன் அவன் கைகளைப் பிடித்து அழுத்தினான். "ஈஸி... ஈஸி... கடவுள் நிச்சயமா வழிகாட்டுவார். கவலைப்படாதே, மணி... வரட்டுமா?"

அன்றைக்குத் தஞ்சாவூர் வந்ததுமே முதல் வேலையாய் ஒரு நல்ல லாட்ஜில் ரூம் போட்டு விட்டார், அறிவரசன்.

என்னதான் பழக்கமானவர்கள் என்றாலும் பார்கவியின் ஆசாரங்களுக்கு இடையே போய் மூக்கை நுழைத்துக் கொண்டு ஒருநாள் முழுவதும் இருப்பது அத்தனை உசிதமாய்ப் படாததால்தான் இந்த முடிவுக்கு வந்துவிட்டிருந்தார்.

லாட்ஜுக்குப் பக்கத்தில்தான் கல்யாண மண்டபம். முகூர்த்த நேரத்துக்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே போய்ச் சேர்ந்து விட்டார், மண்டபத்துக்கு.

ஹோமப்புகைக்கு நடுவே புரோகிதர் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருக்க, மனிதர்கள் பட்டுகளிலும் வைரங்களிலும் புகுந்து கொண்டு அலைந்து கொண்டிருந்தார்கள்.

இவர் முகத்தைக் கண்டாளோ இல்லையோ, "வாங்கோ... வாங்கோ..." என்று மலர்ச்சியோடு வரவேற்றாள் பார்கவி.

"எங்கே, நீங்க வராமப் போயிடுவேளோ'ன்னு பயந்துண்டிருந்தேன். ஒருநாள் முன்னாலே ஆத்துக்கு வந்திருக்கப்படாதோ? அத்தனை அந்நியமா நீங்க? நாம பாத்துப் பதினோரு வருஷமாச்சே?" என்றாள், படபடவென்று.

"இட்'ஸ் ஆல்ரைட்! அதான் இப்போ வந்திட்டேனே?" என்று சிரித்தார், அறிவரசன். வீட்டுக்கு வர விரும்பாத காரணத்தைச் சொல்லி ஏன் வீணாய் ஒரு தர்க்கத்தைத் தொடங்க வேண்டும்?



"ஆனா பாருங்கோ. நீங்க வராத குறையை உங்க பிள்ளை தீர்த்து வைச்சுட்டான்!" என்று சிரித்தாள் அவள்.

"என்னது? என் மகனா?" – அவருக்கு ரொம்ப ஆச்சர்யம். 'பார்கவியை அவனுக்கு எப்படித் தெரியும்?'

"ஆமாம், சார். மணிமாறன் ரெண்டு நாளைக்கு முன்னேயே வந்துட்டான். ரூம்லதான் இருக்கான். வாங்கோ போகலாம்".

பார்கவியைத் தொடர்ந்தார், அறிவரசன். அவள் நடந்து கொண்டே சொன்னாள் :

புத்தகத் துறை விற்பன்னர்!

❑ வெனிஸில் அல்டஸ் மனுசியஸ் மெத்தப் படித்த அச்சுத் தொழில் மேதை. இவர்தான் புத்தகத்துக்கு வடிவம் கொடுத்து உதவியவர். பிரான்சஸ்கோ கோலன்னா என்பவர் எழுதிய 'ஹைப்னரோட்டோ மச்சியா போலிப்பிலி' என்ற நாவலைச் சித்திரங்களுடன் வெளியிட்டு உதவியவர் அல்டஸ் மனுசியஸ். இது 1499 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. புத்தகத் தயாரிப்பில் வித்தகம் கண்டவர் அவர். 'இடாலிக்' அச்சு முறை உருவாவதற்குக் காரணகர்த்தாவும் அவரே. புத்தகப் பிரியர்களின் ஆசைக்கேற்ப விலை அதிகமில்லாத சாசுவதப் புத்தகங்களை உருவாக்கிக் கொடுத்தவர். புத்தகங்களுக்குக் 'கார்டு போர்டு' அட்டையைப் பயன் படுத்தத் தொடங்கியவர் மனுசியஸ்தான்.

"என் தம்பிதான் மாப்பிள்ளை, கணேசன். அவனும் உங்க பிள்ளையாண்டான் மணிமாறன் கூடத்தான் 'ஒர்க்' பண்றான். கணேசனோட வார்த்தையைத் தட்ட முடியாம முன்னாலேயே வந்திட்டான், மணிமாறனும்".

இதெல்லாம் அவருக்குப் புதிய செய்திகள். பார்கவிக்கு ஒரு தம்பி இருக்கிறான் என்பதைத் தவிர வேறெதுவும் தெரியாது.

"ஆனா... அவன் வந்தப்பறம் தான் பேச்சு வாக்கில அவன்தான் உங்க 'சன்'ங்கறதே எனக்குத் தெரிஞ்சுது... எப்படியும் நீங்க வருவேள்'னு சொல்லிண்டிருந்தான்".

அறையில் மணிமாறன் மட்டும் உட்கார்ந்து இலைக் கட்டுகளைப் பிரித்து அடுக்கிக் கொண்டிருந்தான். இரண்டு பேரும் உள்ளே நுழைந்ததும் அப்பாவைப் பார்த்துச் சிரித்தான்.

"உட்காருங்கோ! இதோ... காபி கொண்டு வர்றேன்" என்று நகர்ந்த பார்கவி சிறிது நேரத்தில் ஆவி பறக்கும் காபித் தம்ளர்களுடன் திரும்பி வந்தாள்.

"சரி... சித்த நீங்க பேசிண்டிருங்கோ! 'அவர்' கூப்பிடறாராம்... இதோ வந்துடறேன்" என்று உடனே விரைந்தாள்.

"அப்பா! என்னப்பா நீங்க...? இந்த 'ஆண்ட்டி'யைப் பத்தி என்கிட்ட சொல்லாமலே விட்டுட்டீங்க" என்று குறைபட்டுக் கொண்டான், மணிமாறன்.

"ரியலி ஷீ ஈஸ் எ ஜெம், டாடி...! இவங்களைப் பத்தி எதுவும் தெரிஞ்சுக்காம இருந்துட்டீங்க" என்றான் வியப்புடன்.

"அதென்னடா, எனக்குத் தெரியாதது?" என்றார், அறிவரசன் அலட்சியமாய். அங்கே கிடந்த ஒரு ஸ்டூலில் உட்கார்ந்தார்.

"ஆமாம்பா. நீங்க எத்தனையோ சீர்திருத்தம் பேசநீங்க... மேடை மேடையாய் முழங்கறீங்க. ஆனா நீங்க வரிஞ்சு கட்டிகிட்டு சாடறீங்களே, அந்த 'உசந்த' ஜாதியான இவங்க - ஆசார அனுஷ்டானம் பாக்கற ஜாதி - தன் கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்து இன்னிக்குக் கட்டிக் குடுக்கறாங்களே அந்த மாரியம்மா யார் தெரியுமா? ஒரு கீழ்ஜாதிப் பொண்ணு! அவ சமைக்கறதைத் தான் இவங்க சாப்பிடறாங்க. தன் தம்பி இவமேல ஆசைப்பட்டதும் சந்தோஷமா இன்னைக்கு அவனுக்கே கல்யாணமும் செய்து வைக்கிறாங்க தெரியுமா?" என்றான் மணிமாறன். உணர்ச்சி மேலீட்டால் அவனுக்குக் குரல் அடைத்தது.

அதிர்ந்து போனார், அறிவரசன். அவர், "நிஜமாவா?" என்று வியப்புடன் கேட்டதைக் காதில் வாங்கிக் கொண்டே வந்த பார்கவி, "என்னது நிஜம்மாவா'ங்கறேள்?" என்றாள்.

"மிஸஸ் பார்கவி... இது... இவன் சொல்றதெல்லாம்... வந்து உண்மையா...? மாரியம்மா... ஒரு?"

"சொல்லிட்டானா?" என்று அலுத்துக் கொள்ளும் பாவனையில் ஒரு விநாடி அவனைப் பார்த்துவிட்டு அவர் பக்கம் திரும்பினாள், அவள்.

"கணேசன் இவன்கிட்டே உளறினதைக் கேட்டுட்டு, வந்ததிலேர்ந்து ஒரே புலம்பல்தான் போங்கோ" என்று சிரித்துக் கொண்டாள்.

"புலம்பலா பார்கவி! என்ன இப்படிச் சாதாரணமாய்ச் சொல்றீங்க? இத்தனை ஆசாரம் பாக்கற நீங்க... எப்படி உங்களால இதெல்லாம் செய்ய முடிஞ்சுதுன்னு தெரியாம நான் திணறிக்கிட்டிருக்கேன். நீங்க என்னடான்னா...?"

"இப்போ நீங்க பேசறதுதான் எனக்குப் புரியலை சார்...! தயவு செஞ்சு நான் சொல்றதைத் தப்பா எடுத்துக்காதீங்கோ! நீங்க ஜாதியை மட்டும் பாக்கறேள். அது ஒழியணும்னு பிரசங்கம் பண்றேள். நான் அப்படி ஒண்ணு இருக்கறதுண்ணே நெனைக்கறதில்லே! மனுஷாதான் என் கண்ணுக்குத் தெரியறா. மாரியம்மா ஒரு நல்ல பொண்ணு. அவளை எனக்குப் பிடிக்கறது. மத்தபடி அவ ஜாதி, குலம், கோத்ரம் என் கண்ணிலே படலலே. தாய் தகப்பனில்லாத அவளை அவ மாமனோட சம்மதத்தோடு தத்து எடுத்துண்டு வளர்த்தேன். என் வீட்டுக்கு வரப்போக இருந்த தம்பி அவளைக் கல்யாணம் செஞ்சுக்க ஆசைப்பட்டான். அவளும் சம்மதிச்சா. அப்புறம் எங்க ஜாதியையோ அவஜாதியையோ நான் நெனைச்சுக்கூடப் பாக்கல்லே. 'ஒரு பொண்ணை என் தம்பி விரும்பினான்' - அவ்வளவுதான் இதுல விஷயம்... ஆசாரம், அனுஷ்டானம் எல்லாம் தெய்விக விஷயங்கள். பகவான் கிருஷ்ணனுக்கு நாம எல்லாரும் ஒண்ணுதான் இல்லையோ?"- அமைதியான புன்னகையுடன் பேசி முடித்த பார்கவி, "சரி... சரி... நம்ம புராணம் இருக்கட்டும். பந்தலுக்கு வாங்கோ... முகூர்த்த நேரமாயிடுத்து" என்று விரைந்தாள்.

"சரிடா, மணி! ஊருக்குப் போனதும் உடனே நீ உஷாவுக்குச் சொல்லிட்டு அவ அட்ரஸை எனக்கு எழுது" என்று நிறைவாய்ச் சிரித்தார், அறிவரசன்.

	சூரி, புத கேது		
சுக் சனி	இம்மாத கிரக நிலை		செவ்
	குரு (வ)	ராகு	

14.4.95 அன்று கிரக பாதசாரம் :

சூரியன் - அசுவனி 1, சந்திரன் - உத்திரம் 4, செவ்வாய் - ஆயில்யம் 2, புதன் - அசுவினி 1, குரு - கேட்டை 2 (வக்ரீ),சுக்கிரன் - பூரட்டாதி 3, சனி - பூரட்டாதி 2, ராகு - சுவாதி 2, கேது - அசுவினி 4.

கிரக மாறுதல்

17-04-1995 முதல் மீன சுக்கிரன்

29-04-1995 முதல் ரிஷப புதன்

10-05-1995 முதல் சிம்ம செவ்வாய்

11-05-1995 முதல் மேஷ சுக்கிரன்

மேஷம் : *(அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம் முடிய)*

சனி, சுக்கிரன் ஆகியோரது அனுகூலமான நிலை காரணமாக உங்கள் ஆற்றல் வெளிப்படும். தோற்றப் பொலிவு கூடும். முக்கியமான எண்ணங்கள் ஒன்றிரண்டு ஈடேற வழிபிறக்கும். கணவனால் மனைவிக்கும் மனைவியால் கணவனுக்கும் அனுகூலங்கள் உண்டாகும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் லாபம் கூடப் பெறுவார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றின் சேர்க்கை நிகழும். தொழிலாளர்களது குறிக்கோள் நிறைவேறும். அலைச்சல் சற்று அதிகரிக்கும்.

நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். வியாபாரிகளுக்கு மந்தநிலை விலகும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் புகழ் பெறுவார்கள். மாணவர்கள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். அரசியல்வாதிகள், அரசுப் பணியாளர்கள் ஆகியோர் தங்கள் கொள்கைகளுக்கு வரவேற்பு கூடப் பெறுவார்கள். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்து வரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். பொருள்வரவு சீராக

யுவ ஆண்டு சித்திரை மாதத்திற்கு

உங்கள் ராசி பலன்

14.04.1995 முதல் 14.05.1995 வரை

பாலஜோசியர்
வித்வான் வே. லட்சுமணன்

இருந்து வரும். சுபகாரியங்களுக்காக ஓரிரு செலவுகளை மேற்கொள்ளவும் நேரும். ஏப்ரல் 14, 20, 24, 26, 27, 28, 2[illegible] மே 2, 3, 5, 6, 7, 10, 12 தேதிகள் சிறப்பானவை. மேற்கு தென்கிழக்குத் திசைகள் நலம் தரும். ரிஷப, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6, 8 எண்கள் நலம் தரும்.

பொதுவில் சுமாரான மாதமிது.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ஆம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)*

குரு, செவ்வாய், சனி ஆகியோரது பலம் காரணமா[illegible] உங்கள் அறிவாற்றலும், செயல்திறமையும் பளிச்சிடு[illegible] எடுத்த காரியங்களைத் திறம்பட ஆற்றி, மற்றையோர[illegible] நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவீர்கள். பணவர[illegible] திருப்தி தரும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளு[illegible] கூடிவரும். பொறியியல்துறை லாபம் தரும். சட்டம், காவல் இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்[illegible] நடை போடுவார்கள். பிறமொழி, மதக்காரர்களால் அ[illegible] கூலம் உண்டாகும். தெய்வீக மார்க்கங்களில் ஈடுபா[illegible] கூடும். பெரியவர்கள், தனவந்தர்கள் ஆகியோரது ஆத[illegible]வும், ஆசிகளும் பெறச் சந்தர்ப்பம் கனிந்து வரும்.

உழைப்பு வீண்போகாது. தோல் பொருட்கள் ஏற்றுமதி-இறக்குமதி இனங்கள், விளைபொருட்க[illegible] ஆகியவை ஆதாயம் தரும். அலுவலகங்களில் ப[illegible] புரிபவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் செழிப்பா[illegible] பாதை தெரிய வரும். 17-ஆம் தேதி முதல் உங்க[illegible] ராசிநாதன் பலம் பெறுவதால் மனத்தில் உற்சாகம் கூ[illegible] பெறுவீர்கள். முக்கியமான எண்ணங்கள் ஈடே[illegible] வழிபிறக்கும். எதிர்ப்புக்கள் அகலும். வழக்கு, வியாஜ்[illegible]யங்களில் வெற்றி கிட்டும். கலைத்துறையினருக்கு[illegible] மாதர்களுக்கும், சமுதாய நலப்பணியாளர்களுக்கும் புக[illegible] கூடும். 29-ம் தேதி முதல் வியாபாரிகள் மந்தநிலை விலக[illegible] பெறுவார்கள். 10-ஆம் தேதி முதல் அலைச்சல் சற்[illegible] அதிகரிக்கும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்ல[illegible] ஏப்ரல் 14, 16, 18, 24, 26, 27, 28, 29, மே 2, 3, 5, 6, 7, 10, 1[illegible] 14 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்கு திசைகள் அனுகூலமானவை. கடக, துலா, விருச்சிக, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6, 8 எண்கள் நலம் தரும்.

மொத்தத்தில் விசேடமான மாதமிது.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ஆம் பாத[illegible] முடிய)*

11-ஆம் இடத்தில் உள்ள கிரகங்கள் பிரச்சினைகளை சமாளிக்கக் கூடிய வல்லமையை வழங்குவார்கள். நிர்வா[illegible]

றம் மேலோங்கும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் ங்கள் லாபம் தரும். அரசாங்கத்தாரால் ர்பார்த்திருந்த ஓரிரு காரியங்கள் நிறைவேறப் ுவீர்கள். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ன்ற இனங்கள் ஆக்கம் தரும். உடன்பிறந்தவர்கள் பலமாக விளங்குவார்கள். நண்பர்கள், உற்றார், வினர்களாலும் ஓரிரு நன்மைகளை எதிர்பார்க்கலாம். தயால் அனுகூலம் உண்டாகும். வியாபாரம், கணிதம், ுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு ிச்சமான பாதை தெரிய வரும். பக்தி மார்க்கத்திலும் மார்க்கத்திலும் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மனத்தில் விவும் தன்னம்பிக்கையும் கூடும்.

ரமூலான காரியங்களில் சீரான வளர்ச்சியைக் லாம். நூதனமான முயற்சிகளில் அடியெடுத்து க்கலாகாது. பேச்சில் சூடான வார்த்தைகளை ர்க்காமல் இருப்பது அவசியமாகும். மக்கள் நலனில் ம் செலுத்த வேண்டி வரும். பொருளாதார நிலை இறக்கமாகவே அமையும். சிக்கன நடவடிக்கை வை. ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் ங்களில் அதிக ஆதாயத்தை எதிர்பார்க்க இயலாது. 10-ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் பெறுவதால் ர்ப்புக்கள் என்பவை குறையும். இயந்திரப் பணிகள் ம் தரும். 11-ஆம் தேதி முதல் முக்கியமான ங்கள் ஒன்றிரண்டு ஈடேற வழிபிறக்கும். ஏப்ரல் 6, 16, 20, 24, 26, 27, 28, 29, மே 2, 3, 5, 6, 7, 10, 12, 14 திகள் சிறப்பானவை. கீழ்த்திசை அனுகூலமானது. மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 5, 6, 7 கள் அதிர்ஷ்டமானவை.

மாத்தத்தில் சுமாரான மாதமிது.

டகம் : (புனர்பூசம் 4-ஆம் பாதம் முதல், ம், ஆயில்யம் முடிய)

ருபலம் காரணமாக உங்கள் அபிலாஷைகள் இனிது றவேறும். மனத்தில உற்சாகம் கூடும். நல்லவர்களின் த்தால் நலம் பெறுவீர்கள். பண நடமாட்டம் திருப்தி ம். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் ாயம் தரும். நிறுவன நிர்வாகத்துறைகளைச் ந்தவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் பார்கள். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு யவை பெறுவதற்குரிய சந்தர்ப்பம் கனிந்து வரும். ்துவர்கள் நற்பெயர் பெறுவார்கள். ஆசிரியர் க்கும் பேராசிரியர்களுக்கும் மதிப்பு உயரும். சியல்வாதிகள் தங்கள் கொள்கைகளுக்கு வரவேற்பு ப் பெறுவார்கள். அரசினரால் எதிர்பார்த்திருந்த ஓரிரு ங்கள் இப்போது நிறைவேறும்.

யாபாரம் வளர்ச்சி பெறும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் றைகளைச் சேர்ந்தவர்கள் வளர்ச்சிக்கான மார்க்கத்தைக் பார்கள். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் களுக்கும் அனுகூலம் உண்டாகும். சினிமா, நாடகம், டனம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஒப்பந்தங்கள் கைவரப் பெறுவார்கள். மாதர்களது கோள் நிறைவேறும். கணவன், மனைவியர் நிலை திருப்திகரமாக இருந்து வரும். நிலபுலங்களால் ரோடு அனுகூலம் உண்டாகும். மாணவர்கள் றநடை போடுவார்கள். உழைப்பும், அலைச்சலும் ரிந்தாலும் அதற்கான பலனும் கிடைத்து வரும்.

ஏப்ரல் 14, 16, 18, 20, 27, 28, 29, மே 2, 3, 5, 6, 7, 10, 12, 14 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத் திசை அனுகூலமானது. விருச்சிக, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 5, 6, 7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் விசேடமான மாதமிது.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் *1*- ஆம் பாதம் முடிய)

3-ல் உள்ள ராகு உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துவார். பிரச்சினைகள் என்பவை ஓரிரு கோணத்தில் தென்படும் என்றாலும் அவற்றைச் சமாளிப்பீர்கள். பிறமொழி, மதங்களைச் சார்ந்தவர்கள் உங்களுக்குப் பக்கபலமாக விளங்குவார்கள். தோல் பொருட்கள் லாபம் தரும். ஏற்றுமதி - இறக்குமதி இனங்களால் ஆதாயம் கிடைத்து வரும். பயணத்தால் பயனுண்டு என்றாலும் பாதுகாப்புடன் மேற்கொள்ளுவது அவசியமாகும். மாணவர்கள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். நிறுவன நிர்வாகத்துறையினருக்கு மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. தொலைதூரத் தொடர்பு நலம் தரும். 17-ஆம் தேதி முதல் சுக்கிர பலம் கூடுவதால் கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் மந்தநிலை விலகப் பெறுவார்கள்.

கணவன் மனைவியர் உறவுநிலை சீர் பெறும். மாதர்களது நிலைமையில் அபிவிருத்தி தெரிய வரும். செய்து வரும் தொழிலில் வளர்ச்சி காணச் சந்தர்ப்பம் கனிந்து வரும். 29-ஆம் தேதி முதல் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். எழுத்தாளர்களுக்கும் பத்திரிக்கையாளர்களுக்கும் வரவேற்பு கூடும். தெய்வீக மார்க்கங்களிலும் தருமப் பணிகளிலும் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்து வரும். மே 10-ஆம் தேதி முதல் துணிச்சலான செயல்களில் ஈடுபாடு கூடும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் செயல்பட்டால் பிரச்சினைகளுக்கு ஆட்படாமல் தப்பலாம். பணநடமாட்டம் சீராகவே இருந்து வரும். ஏப்ரல் 14, 16, 18, 20, 24, 29, மே 2, 3, 5, 6, 7, 10, 12, 14 தேதிகள் நலம் தரும். தென்மேற்குத் திசை அனுகூலமானது. துலா, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 4, 5, 6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சுமாரான மாதமிது.

கன்னி: (உத்திரம் *2*- ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை *2*-ஆம் பாதம் முடிய)

சனி, செவ்வாய் ஆகியோரது பலம் காரணமாக உங்கள் பராக்கிரமம் கூடும். எதிர்ப்புக்களைக் கடந்து வாழ்க்கைப் பாதையில் முன்னேற்றம் காண்பீர்கள். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். பொறியியல் துறை லாபம் தரும். சட்டம், காவல், ராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சாதனை படைப்பார்கள். நிலபுலங்கள் லாபம் தரும். விவசாயிகள், தொழிலாளர்கள், சமுதாய நலப்பணியாளர்கள் ஆகியோர் வெளிச்சமான சூழ்நிலையைக் காண்பார்கள். உடன்பிறந்தவர்களால் உங்களுக்கும், உங்களால் அவர்களுக்கும் அனுகூலம் உண்டாகும். வழக்கு வியாஜ்ஜியங்களிலும் போட்டிப் பந்தயங்களிலும் வெற்றி கிட்டும்.

செந்நிறப் பொருட்கள் ஆதாயம் கொண்டு வரும். கடல் வாணிபம் செய்வோர் ஏற்றம் பெறுவார்கள்.

எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் அவ்வப்போது உண்டாகும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. பேச்சில் நிதானம் தேவை. உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியமாகும். பிறமொழி, மதக்காரர்களை நம்பி எதிலும் ஈடுபட வேண்டாம். உஷ்ணாதிக்கத்தால் உடல்நலம் பாதிக்கப்படலாம் என்பதால் உடல்நலனில் கவனம் செலுத்தி வருவது நல்லது. மாதர்கள், கலைஞர்கள் ஆகியோர் பொறுப்புடன் காரியமாற்றினால் சரிவுக்கு ஆளாகாமல் மீளலாம். மே 10-ஆம் தேதி முதல் எக்காரியத்திலும் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது நல்லது. ஏப்ரல் 14, 16, 18, 20, 24, 26, 27 மே 2, 3, 5, 6, 7, 10, 12, 14 தேதிகள் சிறப்பானவை. மேற்கு, தென்கிழக்குத் திசைகள் நலம் தரும். கும்ப, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5, 8, 9 அதிர்ஷ்டமானவை.

பொதுவில் நல்லதும் நல்லவை அல்லாததும் கலந்தவாறு பலன்கள் நிகழும் மாதமிது. இறைவழிபாட்டால் மன நிம்மதி பெறலாம்.

துலாம் : *(சித்திரை 3- ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ஆம் பாதம் முடிய)*

குரு, செவ்வாய் ஆகியோரது பலம் காரணமாக அறிவாற்றல் கூடும். செயல்திறமை பளிச்சிடும். எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும். நல்லவர்கள் உங்களுக்கு நலம் புரிய முன்வருவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். பணவரவு கூடும். ஸ்பெகுலேஷன் கொடுக்கல் வாங்கல் இனங்களில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு ஆதாயம் கூடும். பேச்சு வன்மை பிரகாசிக்கும். முக வசீகரம் கூடும். ஆசிரியர்கள், ஆன்மீக வாதிகள், மேடைப் பேச்சாளர்கள் ஆகியோர் தங்கள் செல்வாக்கு உயரப் பெறுவார்கள். பொறியியல் துறை லாபம் தரும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் உண்டாகும். நிலபுலங்களால் அனுகூலம் உண்டாகும்.

வழக்கு, வியாஜ்ஜியங்களிலும், போட்டிப் பந்தயங்களிலும் அனுகூலமான போக்கைக் காணலாம். மக்களால் நலமுண்டாகும். எதிர்ப்புக்கள் குறையும். 29-ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு மந்தநிலை அகலும். எழுத்தாளர்கள், பத்திரிக்கையாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோர் புகழ் பெறுவார்கள். மே 10-ஆம் தேதி முதல் செல்வநிலை உயரும். எதிர்பாராத ஓரிரு அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் கூடி வரும். உடன்பிறந்தவர்கள் மூலம் உங்களுக்கும் உங்களால் அவர்களுக்கும் அனுகூலம் உண்டாகும். மாதர்கள், கலைஞர்கள், பொதுநலப் பணியாளர்கள் ஆகியோர் விழிப்புடன் இருப்பது நல்லது. ஏப்ரல் 14, 16, 18, 20, 24, 26, 27, 28, 29, மே 5, 6, 7, 10, 12, 14 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத் திசைகள் அனுகூலமானவை. விருச்சிக, கும்ப, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் விசேடமான மாதமிது.

விருச்சிகம் : *(விசாகம் 4-ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)*

6-ல் உள்ள கிரகங்கள் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துவார்கள். எதிர்ப்புக்களைக் கடந்து வாழ்வில் வெற்றி காண்பீர்கள். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்கும், மதிப்பும் உயரும். நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். நண்பர்கள் அளவோடு உதவுவார்கள். நிலம், மனை, வீடு, வாகனங்களால் ஓரளவு நலம் உண்டாகும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான சூழ்நிலையைக் காண்பார்கள். வியாபாரிகளுக்கு ஆதாயம் கூடும்.

கணவன், மனைவியர் உறவுநிலை திருப்திகரமாக இருந்து வரும். மக்கள் நலம் சீர்பெறும். பெற்றோரால் அனுகூலம் உண்டாகும். ஞானமார்க்கத்திலும் பக்தி மார்க்கத்திலும் ஈடுபாடு கூடும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். மாதர்களது எண்ணம் ஈடேறும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ கிடைக்கப் பெறுவீர்கள். 29-ஆம் தேதி முதல் வியாபாரிகள் விழிப்புடன் இருப்பது அவசியமாகும். மே 10-ஆம் தேதி முதல் உங்கள் ராசிநாதன் பலம் பெறுவதால் தொழில் துறையில் வளர்ச்சி காண்பீர்கள். முக்கியமான ஓரிரு காரியங்கள் நிறைவேறும். வாழ்வில் வளம் காண்பதற்குரிய நல்ல வாய்ப்புக்கள் கூடிவரும். ஏப்ரல் 14, 16, 18, 20, 24, 26, 27, 28, 29, மே 2, 7, 10, 12, 14 தேதிகள் சிறப்பானவை. கீழ்த் திசை அனுகூலமானது. மீன, மேஷ, ரிஷப, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 6, 7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் சுமாரான மாதமிது.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம் முடிய)*

சனி, ராகு ஆகியோரது பலம் காரணமாக உங்கள் ஆற்றல் பிரகாசிக்கும். எதிர்ப்புக்களைச் சமாளிக்கும் சக்தியும் பிறக்கும். நூதனமானவர்களது தொடர்பால் நலம் பெறுவீர்கள். தோல் பொருட்கள் லாபம் தரும். ஏற்றுமதி, இறக்குமதி இனங்களைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். தொழிலாளர்களது எண்ணம் நிறைவேறும். உழைப்புக்குப் பின்வாங்காமல் கடுமையாகப் பாடுபடுபவர்களுக்கு இரட்டிப்பு வெற்றி கிட்டும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். மக்களால் அளவோடு நலம் உண்டாகும். உடன் பணிபுரிபவர்கள் பக்கபலமாக விளங்குவார்கள்.

பொருள்வரவு சீராக இருந்து வரும். நற்காரியங்களுக்காக ஓரிரு செலவுகளை மேற்கொள்ள வேண்டி வரும். 8-ல் செவ்வாய் உலவுவதால் பயணத்தின்போதும் இயந்திரங்களின் பக்கம் நெருங்கும் போதும் பாதுகாப்புத் தேவை. உடன்பிறந்தவர்களுக்கும் உங்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் சூழும். பக்குவத்துடன் பழகிவருவது நல்லது. வீண்சண்டை, சச்சரவுகளைத் தவிர்ப்பது அவசியமாகும். சுக்கிரபலம் கூடியிருப்பதால் கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். புதிய பொருட்களின் சேர்க்கை நிகழும். 29-ஆம் தேதி முதல் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். 10-ஆம் தேதி முதல் மக்கள் நலம் சீர்பெறும். புனிதமான

காரியங்களில் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்து வரும். ஏப்ரல் 14, 16, 18, 20, 24, 26, 27, 28, 29, மே 2, 3, 5, 10, 12, 14 தேதிகள் சிறப்பானவை. மேற்கு, தென்மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கும்ப, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4, 6, 8 எண்கள் நலம் தரும்.

பொதுவில் சுமாரான மாதமிது.

மகரம் : *(உத்திராடம் 2-ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ஆம் பாதம் முடிய)*

குரு, சுக்கிர பலம் காரணமாக உங்கள் தோற்றப் பொலிவும் புத்திசாலித்தனமும் பிரகாசிக்கும். பணநடமாட்டம் திருப்திதரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் கூடிவரும். குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். பேச்சில் திறமை பளிச்சிடும். நல்லவர்களும் வல்லவர்களும் உங்களுக்குப் பக்கபலமாக விளங்குவார்கள். நண்பர்கள், உற்றார், உறவினர்களது சேர்க்கை நலம் தரும். வியாபாரம் பெருகும். அலுவலகப் பணியாளர்கள் உத்தியோக உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறுவார்கள். நிறுவன, நிர்வாகத்துறையினருக்கு மதிப்பு உயரும். கலைத்துறை ஆக்கம் தரும். மாதர்களது எண்ணம் நிறைவேறும். பொதுநலப்பணியாளர்கள் பாராட்டுக்களுக்கு உரியவர்களாவார்கள்.

மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் அனுகூலம் உண்டாகும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் நிலையில் வளர்ச்சி காண்பார்கள். கடிதப் போக்குவரத்து நற்செய்தி கொண்டு வரும். உடன்பிறந்தவர்களால் ஒரிரு எண்ணங்கள் ஈடேறும். பிறமொழி, மதக்காரர்களது தொடர்பு பயன்படும். அலைச்சலும் உழைப்பும் கூடினாலும் அதற்கான பயன் கிடைக்கத் தவறாது. கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவமாகப் பேசிப் பழகுவது நல்லது. இயந்திரப் பணியாளர்கள் விழிப்புடன் இருப்பது அவசியமாகும். ஏப்ரல் 14, 16, 18, 20, 24, 26, 27, 28, 29, மே 2, 3, 5, 6, 7, 12, 14 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. மீன, ரிஷப, விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 4, 5, 6, எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சிறப்பான மாதமிது.

கும்பம் : *(அவிட்டம் 3-ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ஆம் பாதம் முடிய)*

குரு, சனி ஆகியோர் கோசாரப்படி அனுகூலமான நிலையில் உலவாததால் விசேடமான நன்மைகளை இந்த நேரத்தில் எதிர்பார்க்க இயலாது என்றாலும் மாமூலான காரியங்கள் சீராகவே நடந்து வரும். குடும்பத்தில் அமைதி காணலாம். உற்றார், உறவினர்களால் அளவோடு நலம் உண்டாகும். எதிர்ப்புக்கள் கட்டுக்குள் அடங்கியிருக்கும். அரசாங்கத்தாரால் ஒரிரு நன்மைகள் உண்டாகும். அரசியல்வாதிகள் தங்கள் கொள்கைகளுக்கு வரவேற்புப் பெறுவார்கள். நிர்வாகத்திறமை கூடும். பொதுநலப் பணியாளர்கள் நற்பெயருக்குப் பாத்திரமாவார்கள். பிறருக்கு உதவக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும். 17-ஆம் தேதி முதல் செல்வநிலையில் வளர்ச்சி காணலாம். கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். மாதர்களது நிலை உயரும். புதிய ஆடை அணிமணிகளின் சேர்க்கை நிகழும். கேளிக்கை, உல்லாசங்களிலும் விருந்து உபசாரங்களிலும் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். 29-ஆம் தேதி முதல் வியாபாரிகள் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வருவார்கள். மாணவர்களது திறமை பளிச்சிடும். புதிய பொருட்களின் சேர்க்கை நிகழும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் தங்கள் புகழ் ஓங்கப் பெறுவார்கள். மே 10-ஆம் தேதி முதல் கூட்டாகத் தொழில் செய்பவர்கள், விழிப்புடன் இருப்பது நல்லது. வீண் அலைச்சல் வேண்டாம். ஏப்ரல் 16, 18, 20, 24, 26, 27, 28, 29, மே 2, 3, 5, 6, 7, 14 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, தெற்குத் திசைகள் அனுகூலமானவை. மீன, ரிஷப, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 6, 7, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் சுமாரான மாதமிது.

மீனம் : *(பூரட்டாதி 4-ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

குரு, சுக்கிர பலம் காரணமாக உங்கள் புத்திக் கூர்மை பிரகாசிக்கும். வசீகரச் சக்தி கூடும். உடல் ஆரோக்கியம் சீராக இருந்து வரும். மற்றையோரால் பாராட்டப் படுவதற்குரிய சந்தர்ப்பம் கனிந்து வரும். முயற்சிகள் வெற்றி பெறும். எதிர்ப்புக்களின் பிடியிலிருந்து விடுபடச் சந்தர்ப்பம் கூடிவரும். மக்கள் நலம், வாழ்க்கைத்துணை நலம், பெற்றோர் நலம் யாவும் சீராகவே இருந்து வரும். கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். மாதர்களது குறிக்கோள் ஈடேறும். பொதுநலப் பணியாளர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உதயமாகும்.

வியாபாரிகள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்கு முன்னேற்றமான பாதை புலப்படும். ஆசிரியர்கள் போற்றப்படுவார்கள். புனித யாத்திரை, சாதுக்கள் தரிசனம், மகான்களின் ஆசிகள் ஆகியவை கிட்டும். அதனால் மனத்தில் தெளிவும் தன்னம்பிக்கையும் பிறக்கும். தருமப் பணிகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்து வரும். 29-ஆம் தேதி முதல் கணிதம், விஞ்ஞானம், வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் பொறுப்புடன் காரியமாற்றுவது அவசியமாகும். 10-ஆம் தேதி முதல் செவ்வாய்பலம் கூடுவதால் வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். பிரச்சினைகள் என்பவை குறையும். பொறியியல்துறை லாபம் தரும். பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது அவசியமாகும். நூதன நட்பு வேண்டாம். ஏப்ரல் 14, 18, 20, 24, 26, 27, 28, 29, மே 2, 3, 5, 6, 7, 10 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத் திசை அனுகூலமானது. விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 5, 6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் விசேடமான மாதமிது.

* * * * * * * *

வாக்கு

மாலா உத்தண்டராமன்

இரயில் நிலையம் களேபரப் பட்டுக் கொண்டிருந்தது. புத்தகக் கடைகளிலும், உணவகங்களிலும் வியாபாரம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. பயணிகள் இங்கும் அங்கும் கொத்துக் கொத்தாகச் சிதறியிருந்தனர். அத்தனை பேரின் பார்வையும் இன்னும் பத்து நிமிடத்தில் அங்கே வந்து நிற்கப் போகிற இரயில் வரும் திசை நோக்கி லயித்திருந்தது.

இந்தி – கீழே தமிழ் – அதன் கீழே ஆங்கிலத்தில் அந்த ஊரின் பெயரை கறுப்பு எழுத்துகளால் தாங்கிக்கொண்டு, நின்றிருந்த மஞ்சள் வர்ணப் பலகையை ஒட்டி, சுற்றிலுமாய் மூட்டை முடிச்சு, சாமான் செட்டோடு ஒரு கூட்டம் உட்கார்ந்திருந்தது. அறுபதைக் கடந்த முதியவரிலிருந்து, மூன்று மாதக் குழந்தை வரை அதில் அடக்கம். கசங்கிப் போன அழுக்காடையும், கிழிந்து தைக்கப் பட்ட புடைவையும் அவர்களது வறுமைச் சூழலைப் பறை சாற்றின.

"ஏலே, பொன்னுச்சாமி! எல்லா டிக்கெட்டையும் பத்திரமாக வச்சிருக்கியாடா? நீ பாட்டுக்கு அலட்சியமா அங்கே இங்கே போட்டுடாதே. அப்புறம் வண்டியில சோதிக்கும்போது மாட்டிப்போம். நான் சொல்லிட்டேயிருக்கேன். நீ பராக்கு பாக்கிறியே!" பழுப்பேறிப் போன தாடி, மீசையுடன் தோற்ற மளித்த கந்தப்பன் காட்டுக் கத்தலாய்க் கேட்டான்.

"அதை கவனமா என்னோட ஜேப்பியில் பொட்டலம் கட்டிப் போட்டு வச்சிருக்கேன். நீ ஒண்ணும் கவலைப்பட வேணாம்... சும்மா ஒடம்பைப் போட்டு அலட்டிக்காதே. அப்புறம் இருமல் வந்திடப் போவுது..." மீண்டும் ஒருமுறை சட்டைப் பையில் கை நுழைத்து ஊர்ஜிதம் செய்தான், பொன்னுச்சாமி.

அங்கிருந்து ஐம்பது கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இன்னோர் ஊருக்கு டிக்கெட் எடுத்திருந்தார்கள் அவர்கள். அந்த ஊரில் இப்போது மணிலா சாகுபடி நேரம். மணிலாச் செடியைப் பிடுங்கி, அதன் வேரில் காய்த்திருக்கும் மணிலாக்கொட்டையைத் தனியே பிரித்தெடுத்துக் குவியலாக்கும் வேலை, அவர்களுக்கு. மணிலா ஆய்வதற்காக வருடா வருடம் மணிலா சாகுபடிப் பருவத்தில் அவர்கள் அந்த ஊருக்கு வருவது வழக்கம்.

ஊர் எல்லையில் தனித்தனியே தற்காலிகக் குடிசை அமைத்து, பொங்கி சாப்பிட்டு பிழைப்புக்குப் போவார்கள். கிட்டத்தட்ட மூன்று, நான்கு மாதங்கள் அந்த வேலை அவர்களுக்குக் கிடைக்கும். கை நிறையக் கூலி சேரும். இலவசமாகக் கொஞ்சம் மணிலாக் கொட்டை வேறு உண்டு. இவர்களின் வருகைக்காக அந்த ஊரின் நிலத்துக்காரர்கள், மணிலா பிடுங்கும் சமயத்தில் எதிர்பார்த்திருப்பார்கள். நிறைய எண்ணிக்கையில் ஆண்கள் தேவைப்படுவார்கள். அப்பபாதுதான் எல்லா நிலங்களிலிருந்தும் மணிலா பிரித்தெடுக்கப்பட்டு, சீக்கிரத்தில் குவியலாக்கப்பட இயலும்.

மணிலா பருவம் முடிந்ததும், தங்களது மூட்டை, முடிச்சோடு கிளம்பி, தங்கள் சொந்த
ஊருக்குத் திரும்பி விடுவார்க
அந்த நாடோடிப் பிழைப்பு
காரர்கள். ஏறக்குறைய ஐநூ
பேர் அங்கே வருவார்கள்.

இரண்டு மணி நேரம் அவ
களைச் சுமந்து, அந்த ஊருக்
வந்து சேர்ந்தது, இரயில்.

"ஊர் வந்தாச்சு... ஏ
காமாட்சி! உம்... புள்ளை தூ
கிட்டான் பாரு... தோளில சாய்
சுக்கோ...! 'மளமள'ன்னு இறங்கு
ரயிலு கிளம்பிடப் போவுது. இந்
டேஷன்ல ரொம்ப நாழி நிக்காது..
'மசமச'ன்னு நிக்காம மூட்
முடிச்சை சீக்கிரம் இறக்குங்க
எல்லாரையும் உசுப்பினா
மாரப்பன். வேகமாகப் பாத்தி
மூட்டைகளை வெளியே தூக்கி
போட்டான். அத்தனை பேரு
ரயிலிலிருந்து இறங்கி முடிக்
சரியாக ஐந்து நிமிடங்க
பிடித்தது. வழக்கமாக வ
பவர்கள் என்பதால் தானே
என்னவோ அவர்கள் இறங்கியது
ரயில் கிளம்பியது.

டிக்கெட்டை எண்ணி நிலை
அதிகாரியிடம் ஒப்படைத்து விட்
ஊர் எல்லை நோக்கி நடக்
லானார்கள், அவர்கள். இந்
முறை தொடர்ந்து வேலை
கிடைத்து, நிறையக் கூலி பெ
வேண்டும் என்ற ஆவல் அத்தனை
நெஞ்சங்களிலும் படர்ந்திருந்தது.

அடுத்த நாள் காலை...

முதியவர்களிடம் குழந்தைகளை
ஒப்படைத்துவிட்டு, குடிசைக
லிருந்து வெளியேறி மணில
விளைச்சல் நிலங்களை நோக்கி
புறப்பட்டனர், அந்தக் கூட்டத்தி
ஆண்களும், பெண்களும்! நில
துக்குச் சொந்தக்காரர்களை
பார்த்தபின், தனித்தனிக் குழுவி
ராகப் பிரிந்து மணிலா பிடுங்கு
வேலையைத் தொடங்கினர்.

மில்லி மீட்டருக்கு மில்லி
மீட்டர் பணத்தால் இழைக்க
பட்டிருந்தது, அந்தப் பிர
மாண்டமான பங்களா. நீளமா
முகப்பு. பெரிய கதவு, ஏகப்பட்
வேலைப்பாடமைந்த இருக்கைகள்
பூத்தொட்டிகள் என ஒவ்வொ
பகுதியும் பளிச்சிட்டன.

உள்ளே...

ஊஞ்சல் நாற்காலியில் ந
நாயகமாகக் காலாட்டிக் கொண்

அமர்ந்திருந்தார், செல்வதுரை. பெயருக்கு ஏற்றாற்போல அவரது உடல், உடை அனைத்திலும் செல்வச் செழிப்பு அதிகமாகத் தெரிந்தது. அவர் எதிரே பயபக்தியோடு வெள்ளையும் சள்ளையுமாகத் தொண்டர்கள் நின்றிருந்தார்கள். அடுத்த ஆண்டில் நடைபெற உள்ள தேர்தலில் போட்டியிடப் போகும் செல்வதுரையை வெற்றி பெறச் செய்வதற்கான ஆலோசனைகளையும், திட்டங்களையும் வழங்க அங்கே குழுமியிருந்தனர்.

"ரெண்டு கட்சியுமே நம் தொகுதியில் சரிசமமா சக்தி பெற்றிருக்கு...! பாதி நம்ம கட்சி, பாதி அந்தக் கட்சின்னு போட்டி பலமா இருக்குது. யார் ஜெயிப்பாங்கன்னு சரியா எடை போட முடியல. எங்கேயாவது ஒரு பகுதியில மக்கள் எதிர்க்கட்சி பக்கம் திடீர்னு சாஞ்சாங்கன்னா அவ்வளவுதான். நான் தோத்துடுவேன்... ஆயிரம் ஓட்டாவது அதிகமாக நம் பக்கம் தேவைப்படுது... அதுக்கு ஏதாவது ஒரு வழி பண்ணனும்" மோவாயைத் தடவியபடி யோசனை கேட்டார், செல்வ துரை.

தொண்டர்களும், உள்ளூர்க் கட்சித் தலைவர்களும் தங்களுக்குள் கிசுகிசுத்தார்கள். இது போன்ற காரியங்களுக்கு வழி சொல்லத்தானே அவர்கள் இருக்கிறார்கள்! திட்டம் தீட்டுவதில் கை தேர்ந்தவர்களாயிற்றே!

"அதுக்கு கவலைபடாதே. வழி ஒண்ணு நான் சொல்றேன்!" திடீர் குரல் கொடுத்தார், சுந்தரேசன்.

"என்னப்பா அது? சீக்கிரம் சொல்லு...!" புருவத்தை உயர்த்தினார், செல்வதுரை.

"தலைவரே...! எங்க ஊர் எல்லையில் மணிலாக் கொட்டை பிடுங்கும் வேலைக்காக ஒரு பெரிய கூலிக்கூட்டம் வருஷா வருஷம் வந்து தங்குதுங்க...! மொத்தமா ஐநூறு பேருக்கு மேல இருப்பாங்க... இந்த வருஷம் ஓட்டர்லிஸ்ட் எடுக்கும்போது, அவங்க பேரையும் சேர்த்திடணும். அடுத்த வருஷம் தானே எலெக்ஷன் வருது? அந்த ஊர்க்காரனான என்னை அவங்களுக்கு நல்லாத் தெரியும். நான் எதைச் சொன்னாலும் தட்டமாட்டாங்க. அவங்களை நம்ம கட்சிக்கு ஓட்டுப் போட வைக்க என்னால முடியும். எப்போ வரச் சொன்னாலும் வருவாங்க... அது என் பொறுப்பு... அந்த ஐநூறு ஓட்டு உங்களுக்கு விழுந்தா, நிச்சயம் வெற்றி நம் கட்சிக்குத்தான். எப்படி என்னோட யோசனை?" புன்னகை பூத்தபடி கூறினார். ஜெயித்துவிட்டால் அவருக்கு தனிக் கவனிப்பு கண்டிப்பாக உண்டு.

"வெரிகுட், சுந்தரேசன்! நல்ல யோசனை சொன்னே" தோளில் தட்டிக் கொடுத்தார், செல்வ துரை. ஆனந்தம் அவரை முழுதுமாய் ஆட்கொண்டது.

"ஓட்டர் லிஸ்ட்டில அவங்க பேரைச் சேர்த்துகிறதுக்கு அங்கே கணக்கெடுக்கப் போற ஆபீசர்கள் ஒப்புக்கணுமே... முடியுமா தலைவரே?" சந்தேகம் எழுப்பினார் இன்னொரு பிரமுகர்.

"அந்த வேலையை எங்கிட்டே விட்டுடுங்க...! அதை நான் பார்த்துக்கிறேன். பி.டி.ஓ. ஆபீசிலிருந்து, பஞ்சாயத்து யூனியன் பியூன் வரை கவனிக்க வேண்டியதை கவனிச்சா காரியம் தானாக நடக்கும்... இன்னிக்கே அதுக்கு ஏற்பாடு செய்திடறேன்".

"கண்டிப்பா நீங்கதான், ஜெயிக்கப் போறீங்க. நம்ம தொகுதிக்கு எம்.எல்.ஏ. ஆகறீங்க" வாழ்த்துகளை வழங்கிவிட்டு, விடை பெற்றார்கள், கட்சித் தொண்டர்கள்.

செல்வதுரையின் செல்வாக்கால் ஓட்டுக் கணக்குப் பட்டியலில் அந்த நாடோடிப் பிழைப்புக் காரர்களின் பெயர்கள் பதிவாயின. பல பிரதிகளில் புது எண்ணிக்கை சேர்க்கப்பட்டது. பணம் பாதாளம் வரை பாய்ந்து காரியம் நடத்தியது.

அடுத்த ஆண்டில்...

விதியோ, தலையெழுத்தோ தெரியவில்லை. சதி செய்யும் அரசியல்வாதிகளுக்குச் சாதகமாக மணிலா சாகுபடி சமயம் பார்த்து... சரியான தருணத்தில்... தேர்தல் நாள் குறிக்கப்பட்டது.

ஊர் எல்லைப்பகுதி குடிசைகள் பக்கம் சுந்தரேசன் ஒரு நாளைக்கு இரண்டு வேளையும் நடையாய் நடந்து, அந்தக் கூலி யாட்களிடம் பல்லிளித்து, ஜால வார்த்தைகளை அள்ளி வீசி மயக்கினார்.

செல்வதுரை வாரம் இருமுறை சுந்தரேசனோடு 'குளுகுளு' காரில் வந்திறங்கி தன் பங்குக்குக் கூழைக் கும்பிடு போட்டார். பிச்சை கேட்பது போல கையேந்தினார்.

"நீங்க எல்லாரும் இந்த மாதிரி குடிசைகளில் தங்கி கஷ்டப்படக் கூடாது. என்னை வெற்றிபெறச் செஞ்சீங்கன்னா உங்களுக்கு நிரந்தரமான வீடுகளை அரசிடம் வாதாடி, இலவசமாக் கட்டித்தர ஏற்பாடு செய்வேன். அல்லல் படும் தாய்க்குலத்துக்கு புடைவை வழங்குவேன்... பொருளுதவி அளிப்பேன்... இன்னும் நெறய நல்ல காரியங்களை உங்களுக்காகச் செய்யக் காத்திருக்கேன். இது சத்தியம்! நான் வாக்கு தவறமாட்டேன். ஆகவே, உங்கள் பொன்னான வாக்குகளை எனக்கு அளிக்கும்படி கும்பிட்டுக் கேக்கிறேன்... உங்கள் நலன்தான் என் கொள்கை. நீங்கள்தான் என் உயிர் மூச்சு. ஏழைகளுக்குப் பாடுபட எனக்கு சந்தர்ப்பம் தாருங்கள். உங்கள் பங்காளன், நான்! என்னைத் தேர்ந்தெடுங்கள்" காலில் விழாத குறையாகக் கெஞ்சினார்.

பூரித்துப் போனது ஏழை வர்க்கம். இப்படியொரு பெருதவியைச் செய்ய மனதார முன்வந்த கருணை வள்ளலாக செல்வ துரையைக் கணக்கிட்டது. இதற்கெல்லாம் முக்கிய காரணம் அவ்வூரைச் சேர்ந்த சுந்தரேசனே என்று அவரைக் கரம் கூப்பி நன்றி கூறியது.

"நாம படற கஷ்டத்தைப் பார்த்திட்டு உதவி செய்யப் போறவர்க்குத்தான் நாம ஓட்டுப் போடணும்... நமக்குச் சோறு போடும் இந்த ஊர்க்காரர் சுந்தரேசன் யாருக்குத் துணை போறாரோ, அவருக்கே நாமும் துணை போகணும்.. செல்வதுரை வாக்கு தவறமாட்டார். நாமும் சொன்னது சொன்னபடி அந்த மனுஷருக்கே ஓட்டுப் போடணும்!"

ஏராளமான எதிர்பார்ப்புகளோடும், நம்பிக்கையோடும்



முடிவெடுத்தது. கள்ளம் கபடமில் லாத அந்த ஏழை உள்ளங்கள்.

தேர்தல் நாளும் வந்தது.

வாக்களிப்பு நடந்தது.

தேர்தல் முடிவுகள் தெரிந்தன.

செல்வதுரை வெற்றி!

சரியாக ஐநூறு வாக்குகள் வித்தியாசத்தில்!

விண்ணுக்கும், மண்ணுக்கும் எம்பிக் குதித்தார், செல்வதுரை - எம்.எல்.ஏ! சுந்தரேசனின் சமயோசித புத்திக் கூர்மையால் தனக்கு இப்படியோர் இன்ப அதிர்ச்சி கிடைத்தது என அகமிக மகிழ்ந்தார். மேலிடத்தில் வேண்டிக் கேட்டு அந்த ஊரில் கட்சியின் முக்கிய பதவியை வாங்கித் தந்து அவருக்கு நன்றிக் கடனைச் செலுத்தினார். இம் முறை தேர்தலில் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்பதற் காக அவர் லட்சக்கணக்கில் முத லீடு செய்ய வேண்டியதாயிற்று. இழந்ததை ஈடுகட்ட இப்போதி லிருந்தே முனைப்பாகக் காரியத் தில் இறங்கினார். பதவி இருக் கிறவரை பயன்படுத்திக் கொண் டால்தான் உண்டு. இப்போ தெல்லாம் ஓர் அரசு நிலையாக நீடிப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறதே! ஆகவே, துரிதமாகப் பணம் சேர்க்கும் வழிகளைத் தேட ஆயத்தமானார், அவர். ஓராண்டு பதவி காலத்துக்குள் அவரது பணப்பெட்டி நிரம்பி வழியலாயிற்று. இன்னும் நிரப்ப அதிதீவிரம் காட்டினார்.

பொன்னுச்சாமி, மாரப்பன் கூட்டத்தினரைச் சுமந்தபடி அந்த ரயில் விரைந்து கொண்டிருந்தது.

"நாம போட்ட ஓட்டால செல்வ துரை ஐயா ஜெயிச்சிட்டாரு... நமக்கெல்லாம் இலவசமா நி யான வூட்டைக் கட்டித் த போறாரு... இனிமே மழை நனைய வேணாம்... வெயி காய வேணாம்... அவருக்கு வளவு பெரிய மனசு... நம்ம பார்க்க எப்படியும் சுந்தரே வருவாரு... அவர்கிட்டே எல்ல தியும் சொல்லிக் கும்பிடணு அத்தனை மனங்களிலும் இ நினைவு வட்டமிட்டு, சந்தோ ஷத்தைத் தந்து கொண்டிருந்தது.

ரயில் அதிக இரைச்ச எழுப்பியபடி அவ்வூர் இர நிலையத்தில் வந்து நின்றது.

மணிலா பிடுங்கும் பணிக்க வழக்கம்போல ஊர் எல் நோக்கி நடந்தார்கள், அவர்கள்.

அத்தனை முகங்களி பெரும் ஏமாற்றம்.

அங்கே வீடுகளே இல்லை.

இனிமேல்தான் ஏற்பாடு யப் போகிறார்கள் போலி கிறது' என மனதைத் தேற்றிக் ண்டு, தற்காலிகக் குடிசை ள வேய்ந்தார்கள். பிள்ளை டிகளை முதியவர்கள் காவல் க, மற்றவர்கள் பரபரப்பாக லை வயல் நோக்கிப் பறந் ர். கொளுத்தும் வெயிலில் சுறுப்பாக வேலையில் இறங் ர்.

அடுத்த நாள் மாலை...

அந்தப் பகுதியில் நீலநிற பாசிடர் கார் ஒன்று புழுதி க் கிளப்பியபடி வந்து நின்றது.

உள்ளிருந்து இறங்கினார், ந்தரேசன்.

வேலையிலிருந்து திரும்பி ந்த கூட்டம் ஆர்வத்தோடு ரை நெருங்கியது.

"ஐயா வணக்கமுங்க...! ல்வதுரை ஐயா ஜெயிச்சிட்டாங் னு கேள்விப்பட்டோமுங்க. ங்க வந்ததைத் தெரிஞ்சுகிட்டு னே பார்க்கறதுக்கு வந்தீங் ா? என்ன விஷயமுங்க?" மரி தையோடு வணங்கி வினவி ர்கள்.

"ம்... ம்... வணக்கம்..." என்று ட்சியமாகச் சொன்னவர், கு "நீங்க எல்லாம் இந்த த்தை உடனடியா காலி ண்ணிடுங்க. இது அரசாங்கத் ட சொத்து... இங்க பூங்கா ன்னு கட்டப்போறோம். இன் ம் ரெண்டு நாளில வேலை டங்கப் போவுது. அதனால கிரமா உங்க குடிசையைப் ச்சிடுங்க" வெட்டு ஒன்று, ண்டு இரண்டாக கட்டளை டார், முகத்தைக் கடுப்பாக்கிக் ாண்டு.

தலையில் சம்மட்டியால் த்தது போலிருந்தது. அவர் க்கு. ஒரு கணம் ஸ்தம்பித்து று அதிர்ந்தார்கள். அத்தனை ஞ்சங்களிலும் மூச்சு அடைத் . நிலனேயில்லாது சிலை ல ஆனார்கள். தாய்மார்கள் ண்டு விழித்தார்கள். சிறு கள் ஒன்றும் புரியாமல் டிக்கை பார்த்தார்கள்

"ஐயா...! எங்களுக்கு இது ந்த ஊர் இல்லீங்க! வருஷம் தடவை வந்து, இந்தப் புறம்போக்கு இடத்திலே மூணு, நாலு மாசம் தங்கி பொழப்பு நடத்தறோம். வயக்காட்டுக்குப் பக்கத்திலேயே இருந்தாத்தான் வேலை கிடைக்குமுங்க... போயிட்டுத் திரும்பறதுக்கு எளி சாவும் இருக்குமுங்க... நீங்க இப்படி மடார்ன்னு காலி பண்ணச் சொல்றீங்களே... நாங்க எங்கே போறது? இது என்ன நியாயமுங்க? குடிசை உங்களுக்கு சரிப்படாது... நிரந்தர வீடு கட்டித் தர்றதாகச் சொன்னீங்களே... இப்ப இப்படி பேசிட்டீங்களே..." துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, தழுதழுத்த குரலில் கேட்டான், மாரப்பன்.

"நிசந்தான்.. சொன்னேன்... ஆனா, இப்போ அரசாங்கம் கேக்குதே... நான் அதைத்தான் செஞ்சாகணும்... சும்மா 'தொண, தொண'ன்னு பேசிட்டிருக்க வேணாம். உடனே இங்கிருந்து போயிடுங்க. ஆத்தோரம் போய்த் தங்கிக்குங்க..." எரிச்சலுடன் சுந்தரேசன் முறைத்துக் கொண் டிருந்தபோது...

குங்குமச் சிவப்பில் மாருதி கார் ஒன்று அங்கே வந்து நின்றது.

எல்லாரும் அந்தப் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார்கள்.

கரைபோட்ட வேட்டி, ஜிப்பா சகிதமாக இறங்கி, வேக, வேக மாக நடந்து வந்து எல்லாரையும் கும்பிட்டார், செல்வதுரை.

"சுந்தரேசன்! போதும் நிறுத்து...! இந்த ஏழைகளை மிரட்டறியே... குடிசைகளை வீடாக்கித் தரேன்னு நான் சொன்னதாலதான் அவுங்க ஓட்டு நமக்கு கிடைச்சுது. ஜெயிச்சேன்... அதை மறந்திட்டு இப்போ காலி பண்ணச் சொல்றியே... இது என்னப்பா நியாயம்? பேசாம உன் வேலையைப் பார்த்துட்டுப் போ... மேலே பேசாதே... இங்க பாருங்க... நீங்க போட்ட ஓட்டால நான் ஜெயிச்சேன்... உங்களுக் கெல்லாம் ரொம்ப நன்றி... நான் உங்ககிட்டே வாக்கு கொடுத்தபடி நிச்சயமாக சீக்கிரத்தில் நிரந்தர வீடு கட்டித்தர ஏற்பாடு செய் றேன். நீங்க கவலைப்படாதீங்க. இன்னும் பத்து, பதினைந்து நாளில உங்களை நேரில் வந்து பார்க்கிறேன்" எல்லாரது கைகளை யும் பிடித்து, குலுக்கி வாக்குறுதி தந்தார்.

"ரொம்ப சந்தோஷமுங்க. நீங்க நல்லாயிருக்கணுங்க" அன் போடு செல்வதுரையையும், கோபத்தோடு சுந்தரேசனையும் பார்த்தார்கள். திருப்தியோடு தங்கள் குடிசைப் பக்கம் திரும்பி னார்கள்.

காரை நெருங்கி, கதவைத் திறந்தார், செல்வதுரை.

"என்னங்க இது? திடீர்னு இப்படி மாட்டி விட்டுட்டீங்க? ஒன்னுமே புரியலையே" திகைப் போடு கிசுகிசுத்தான் சுந்தரேசன்.

"இப்பதான் சேதி வந்துது... நாளைக்கு நம்ம ஆட்சி கவிழப் போவுதாம்... விரைவில் தேர்தல் வர இருக்குதாம்... இப்பப் புரிஞ்சுதா, சுந்தரேசன்?" பதி லளித்து விட்டு காரை உசுப்பிப் புறப்பட்டார், செல்வதுரை.

"அதுவும் சரிதான்... நல்லாப் புரியுது..." சிரித்துக்கொண்டே தன் காரை நெருங்கினார், சுந்தரேசன்.

ஒன்றுமறியாத அந்த அப்பாவி மக்கள், இரவுக் கஞ்சிக்காக, கலயங்களை அடுப்பில் ஏற்றி வைத்துக் கொண்டிருந்தனர். ○

○○

● பங்களாதேசத்தில் தஸ்லீமா நஸ்ரீன் எழுதிய 'லஜ்ஜா' – அவ மானம் – என்ற கதை, பங்களா தேசத்தில் அயோத்யா நிகழ்ச்சி களுக்குப் பிறகு சிறுபான்மை இந்துக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை விவரிக்கிறது. பங்களாதேச அரசு அந்த நூலுக் குத் தடை விதித்தது. ஆனால் பங்களா தேசத்திலுள்ள அறி வாளிகள் 'லஜ்ஜா' மீதான நட வடிக்கையை விரும்பவில்லை. பங்களாதேசக் கட்டுரையாளர் டாக்டர் அஹமத் ஷரீப், "இந்நூல் உண்மைக்கு முரணானதல்ல!" என்று விளக்கியிருக்கிறார். டாக்டர் ரெஹ்மான், "தஸ்லீமா வகுப்பு வாதத்தைத் தூண்டவில்லை. அவள் உண்மையை எடுத்துரைத் திருக்கிறாள்!" என்றார். உண்மை யான எழுத்தாளரின் சேவையே இது என்பது டாக்டர் ரெஹ்மான் அளித்த நற்சான்று. ○○



பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிகளின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு ஸ்ரீ பரத்வாஜ சுவாமிகள் வெள்ளிக் கிரீடம் சூட்டினார்.

உடல் நலத்திற்குத் தண்ணீர்ப் படுக்கை

ஆழ்ந்த உறக்கம் உடல் நலம் காக்கும் நல்ல மருந்து. ஆரோக்கியமான உறக்கத்திற்குத் தேவை நல்ல படுக்கை.

தற்போது சுஷ்ராம்ஸ் இன் ஃபிளேட் டபிள்ஸ் பி. லிட் நிறுவனம் அதி நவீன முறையில் தண்ணீர்ப் படுக்கை, காற்றினால் விரியக்கூடிய நாற்காலி, நீரில் மிதக்கும் படுக்கை, நீச்சல் ஜாக்கெட், சிறுவர், சிறுமியர் நீந்தக் கூடிய நீச்சல் குளம் ஆகியவற்றைத் தயாரித்து விற்பனைக்குக் கொணர்ந்துள்ளார்கள். நல்லுறக்கம் கொள்வீர்! உடல் நலம் காப்பீர்!

வீட்டுக் குறிப்புகள்

★ வீட்டில் பிரிஜ் வைத்து இருப்பவர்கள் ரசம் மிகுந்து விட்டால் மறுநாளைக்கு அதை பிரிஜ்ஜில் வைத்து உபயோகிக்காமல் இருக்க மாட்டார்கள். அப்படி முதல்நாள் வைத்து மறுநாள் சூடு செய்து உண்ணும்போது முதல் நாள் அளவு மணமாக இல்லையே என்று வருத்தப் படாமல் இருக்கவும் மாட்டார்கள். அப்படி முதல் நாள் ரசத்தை மறுநாள் கொதிக்க வைத்து இறக்கியபின் புதியதாக நிறைய கடுகு பெருங்காயத்தைத் தாளித்து உபயோகப்படுத்திப் பாருங்கள். ரசம் அன்றுதான் செய்ததுபோல மணமாக இருக்கும். சுவையாகவும் இருக்கும்.

★ தக்காளியை வெந்நீரில் போட்டு எடுத்து, தோல் உரித்து வைத்துக் கொண்டு அத்துடன் தோல் சீவிய மாங்காய்த் துண்டுகளைக் கொஞ்சம் சேர்த்து சிறிது தண்ணீரில் வேகவிட்டு பிறகு, அதில் சிட்டிகை உப்பும் தேவையான அளவு வெல்லமும் சேர்த்து வெல்லப்பச்சடியாகத் தயாரித்துப் பாருங்கள். பிரமாதமாக இருக்கும். விரும்புபவர்கள் கடுகு, பெருங்காயம், உளுத்தம் பருப்பு, ஓரிரு பச்சைமிளகாய் தாளித்தும் உபயோகிக்கலாம். சப்பாத்தி, தோசை போன்ற டிபனுக்கும் நன்றாக இருக்கும்.

★ அடுப்பில் தாளிக்கும் கரண்டியைப் போட்டு இரண்டு ஸ்பூன் எண்ணெய் விட்டு, கடுகு, பெருங்காயம் தாளித்தபின் அதே எண்ணெயில் இரண்டு பூண்டுத் துண்டுகளையும் சாம்பார்ப் பொடியையும் சேர்த்து, நல்ல மணமாக பொரிந்ததும் உப்பையும் சேர்த்து எடுத்து வைத்துக் கொண்டால் தோசைக்கு திடீர் மிளகாய்ப் பொடி தயார்! சாம்பார் பொடிக்குப் பதில் ரசப்பொடியையும் உபயோகிக்கலாம். மணம் புதுவிதமாக நன்றாக இருக்கும்.

★ முட்டைக்கோஸ், கேரட், பீட்ரூட், பீன்ஸ் போன்ற காய்கறிகளை வேகவைத்து தண்ணீர் மிகுந்து விட்டால், அந்தத் தண்ணீரில் ஒரு தக்காளியை வேகவிட்டு மிளகுப் பொடி, உப்பு சேர்த்து சூப்போல குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். காரம் பிடிக்காத குழந்தைகளுக்கு பச்சைக் கொத்துமல்லி இலைகளைப் போட்டு மணமாக்கிக் குடிக்கக் கொடுக்கலாம். உடம்புக்கும் நல்லது. சுவையும் மிக நன்றாக இருக்கும்.

★ கேரட்டை அப்பட
கடித்துத் தின்னக் கொடு
மல் துருவி, குழந்தைகளு
கொடுத்துப் பாருங்கள். மிக
விரும்பிச் சாப்பிடுவார்கள்.

திருமதி. ரமணி ரங்கநா
திருவனந்தட

பாவையர் பக்கங்கள்



குழந்தைகளி
பாதுகாப்பு


எதிர்வீட்டில் இருக்கும் இரண்டு வயதுப் பெண்குழந்தை மிகவும் சுட்டியாக இருக்கும். ஒரு நாள் தனியாக விளையாடிக் கொண்டிருக்கும்போது, ஓர் அறையில் நுழைந்து தெரியாமல் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டது. அந்தத் தாழ்ப்பாள் இறுக்கமாக இருந்ததால் அதனால் மீண்டும் சரியாகத் திறக்க முடியவில்லை. அவள் அம்மா, பாட்டி அனைவரும் அந்த அறையின் ஜன்னலிலிருந்து அந்தக் குழந்தையிடம் அப்படித் திற, இப்படித் திற என்று சொல்லியும், புரிந்து கொண்டு அதனால் திறக்க முடியவில்லை. பயந்து கொண்டு அழ ஆரம்பித்து விட்டது. நேரம் ஆக, ஆக இரண்டு மணி நேரம் வரை திறக்க முடியாமல் அழுது, அழுது மூர்ச்சை ஆகும் நிலைக்கு வந்துவிட்டது குழந்தை.

பக்கத்து வீட்டில் இருக்
ஒருவர் அந்த வீட்டின் மே
ஏறி, அது ஓட்டு வீடு ஆதல
ஓட்டின் நடுவில் இருக்
கண்ணாடியை அகற்றி, அ
இடைவெளியிலிருந்து ஏணி
இறக்கி வைத்து நிறு
அதிலிருந்து அந்த அறை
இறங்கிப் போய், தாழ்ப்பாள
திறந்து குழந்தையை ப
வந்தார்.

தற்போது எல்லா இ
களிலும் 'ப்ளாட் சிஸ்டம்' எ
மாடி வீடு கட்டிக் கொ
வருகிறார்கள். இந்த மாதிரி
களில் குழந்தைகள் உள்ளே தே
இப்படி தாழ்ப்பாள் போட
கொண்டால் எப்படி மே
இருந்து இறங்கி மீட்பது..?

இந்த அபாயத்தைத் தவிர
நாம் குழந்தைகள் உள்ள வீட்
அறைக் கதவில் மேலே உ
பெரியவர்களுக்கு மட்டும் எட
படியாக உள்ள தாழ்ப்பா
மாத்திரம் வைத்துக் கொ
நடுவில் உள்ள குழந்தைக
கைக்கு எட்டும்படியாக உ
தாழ்ப்பாளை அகற்றி
லாமே...!

— சூர்யா பிரேம்



இம்மாதக் கோலத்தை வரைந்து பரிசு பெறுபவர்: ஏ. மஹாலக்ஷ்மி, 4, ஆனந்தன் தெரு, தி-நகர், சென்னை – 600 017.



மூன்று நாளில்

மாதவிலக்கு சமயங்களில் சில பேருக்கு வயிற்று வலி பாடாய்ப் படுத்திடும். அதிலேர்ந்து விடுதலை கிடைக்கணுமின்னா வாரத்துக்கு ரெண்டு தடவையாவது வாழைப்பூவைச் சேர்த்துக்கணும். அதுமட்டுமில்லாம மாதவிலக்கு சமயத்திலே வெறும் தயிர்சாதம், வாழைப்பூ (கூட்டு அல்லது பொரியல்) மட்டுமே சாப்பிடணும்.

...ணிப் பார்த்த போது . . .

...அன்று, வெள்ளிக் கிழமை, ...காலையில், வாசல் தெளித்துக் ...ம் போடக் குனிந்திருக்கிறாள். ...ப் பெண், சைக்கிளில் வந்த ...ன், அவள் கழுத்தில் இருந்த ...ச் சரட்டை, வெடுக்கென்று ...கிக் கொண்டு , மின்னல் ...த்தில் ஒடிவிட்டான்.

அந்தப் பெண் முதலில் ...த்துப், பின் தெளிந்து, கூப்பாடு ...டவே, கூட்டம் சேர்ந்தது. ...யத்தைச் சொல்லி அழுதாள் ...ள்.

அது மார்கழி மாதம், இருட்டு ...த பனிக்காலம் எங்கே போய் ...னைப் பிடிக்க முடியும்? அவள் ...ளர் வந்து, அவளைத் தான் ...ரார்கள். அவள் மாமியார், ...சவரன் செயின், இன்னிக்குப் ...இரண்டு ஆயிரம் ரூபா ...யிலே, போக்கிட்டியே" என்றார்.

...ஒரு பாட்டி, "பணம் போனது ...மா? வெள்ளிக் கிழமையும், அதுவுமா, தாலியை அறுத்துட்டானே! இதுக்கு என்ன பரிகாரமோ? கடவுளே" என்று கலங்கினார். இது முன்பு, நான், குடி இருந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் உண்மையாக, நடந்த நிகழ்ச்சி தான்.

நான் எண்ணுகிறேன்: தாலிக் கயிறு, என்று தானே, சொல்கிறோம்? அதை நிஜமாகவே, தாலியை மட்டும், ஒரு மஞ்சள் கயிற்றில் அணிந்து கொண்டிருந்தால் அது திருடர்கள் கண்ணில் மின்னாது, அல்லவா? வேண்டுமானால், விசேஷ நாள்களுக்கு மட்டும் தனியாக ஒரு செயினை, தங்கத்தில், அணிந்து கொள்ளலாமே! அதனால் தாலி, அறுபடுவதைத் தவிர்த்து விடலாம், அல்லவா? தங்கத்தின் விலை இன்று தலைக்கு மேல் போய் விட்டது! அதனால், தாலியை, மட்டும் காப்பாற்ற வேண்டும். தாலி, பவித்ரமானது சகோதரிகளே! இதைச் சற்று எண்ணிப் பாருங்கள்.

என். கே. ஈசுவரி
பெங்களூர் – 560010

மருத்துவக் குறிப்புகள்

நல்ல பசி எடுக்க: சீரகத்தை இலேசாக வறுத்துப் பொடி செய்து அதில் பனைவெல்லத்தைச் சேர்த்துச் சாப்பிட்டால் நல்ல பசி எடுக்கும்.

குரல் கட்டிக் கொண்டால்: குரல் கட்டிக் கொண்டவர்கள் உலர்ந்த திராட்சையை நான்கைந்து தின்றால் பழைய படி குரல் உரம் பெறும்.

காச இருமல் குணமாக: காச இருமல் நன்கு குணமாகச் சப்பாத்திப் பழத்தைக் கொண்டு வந்து முள் நீக்கி, தோல் நீக்கி, விதை நீக்கிச் சாப்பிட்டால், காச இருமலும் இரத்தம் கக்கும் இருமலும் குணமாகும்.

தொண்டைக்கட்டா? பச்சை மாவிலையைக் கிள்ளி நெருப்பில் போட்டால் புகை வரும், அந்தப் புகையை வாயை அகலத் திறந்து பிடித்தால் தொண்டைக்கட்டு நீங்கும்.

உங்கள் மேனி பொன் மேனியாக: குப்பைமேனி இலைகளை உப்புடன் சேர்த்து அரைத்து சொறி சிரங்குகள் இருக்கும் இடத்தில் தேய்த்துக் குளியுங்கள், குப்பையாக இருக்கும் உங்கள் மேனி பொன் மேனியாகிவிடும்.

தொகுப்பு: இரா.பாலு
வரக்கால்பட்டு – 607 109



வேலூரில் எழுத்தாளர் சங்க கிளைத் தொடக்கம் (வ.ஆ.அ.மாவட்டம்)

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், சென்னை (பதிவு)யின் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டக் கிளைத் தொடக்க விழா வேலூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேனிலைப் பள்ளியில் நடந்தது.

விழாவிற்குச் சங்கத்தின் தலைவர் கலைமாமணி விக்கிரமன் தலைமை வகித்துப் பேசினார். சமூக சேவகி திருமதி திலகவதி ராமையா குத்துவிளக்கேற்றினார். சங்கப் பொதுச் செயலாளர் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதா கிருஷ்ணன், துணைத் தலைவர் டாக்டர் தாமரைக் கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சி. ஞானசேகரன் வேலூர் சங்கக்கிளையின் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார். அறிஞர் பெருமக்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் - வேலூர் கிளையின் தலைவராக நீலவன் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ●

எழுத்தாளர் தின விழா

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் புதுவை மாநிலக் கிளை - கலைமாமணி விக்கிரமன் அவர்களின் பிறந்த நாளை, எழுத்தாளர் தினமாக வருடந்தோறும் கொண்டாடுகிறது.

29.3.1995 காலை அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், சென்னை (பதிவு)யின் தலைவர் கலைமாமணி விக்கிரமன் புதுச்சேரியில் உள்ள பாரதியார், பாரதிதாசன் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து, எழுத்தாளர் தின விழாவைத் தொடங்கி வைத்தார்.

மாலை புதுச்சேரி ரோஸ்மா திருமண நிலையத்தில் எழுத்தாளர் தினச் சிறப்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. நிகழ்ச்சிக்கு, புதுவை மாநில முன்னாள் தலைமை நீதிபதி எஸ். இராமலிங்கம் தலைமை வகித்தார். சிவ. கண்ணப்பா முன்னிலை வகித்தார். புதுவை மாநிலக் கிளையின் பொதுச் செயலாளர் எஸ். குமாரகிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்த, மாநிலக் கிளையின் தலைவர் பாஞ். இராமலிங்கம் தொடக்கவுரையாற்றினார்.

புதுவை மாநில முதலமைச்சர் மாண்புமிகு வெ. வைத்திலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, புரவலர் வேல் சொக்கநாதன் அறக்கட்டளை நிதியுதவியுடன் புதுச்சேரி இலக்கிய அன்பர்களை ஒருங்கிணைக்கும் ஒரு புதிய முயற்சியாக கவிஞர் பாரதி வசந்தன் எழுதி இயக்கும் 'புதுவையின் மறுபெயர் இலக்கியம்' வீடியோ படப்பிடிப்பினைக் குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்து, சுந்தர, ஆவுடையப்பன் எழுதிய 'வாங்க சிந்திக்கலாம்', எஸ். குமார கிருஷ்ணன் எழுதிய 'முட்டாள் குருவும் மூட சீடர்களும்' ஆகிய நூல்களை வெளியிட்டு வாழ்த்திப் பேசினார். நூல்களை, புதுவைக் கம்பன் கழகத்தலைவர் புரவலர் ந. கோவிந்தசாமியும், கலைமாமணி விக்கிரமனும் பெற்றுக் கொண்டனர். கவிஞர் துரை. மாலிறையனுக்கு 'சிறந்த எழுத்தாளர்' விருது வழங்கப்பட்டது.

புதுவை மாநிலக் கல்வி அமைச்சர் மாண்புமிகு அ. காந்திராஜ் அவர்கள் பாஞ். இராமலிங்கம் எழுதிய 'அந்தமான் தமிழர்' நூலினை வெளியிட்டு, தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசு பெற்ற புதுவை எழுத்தாளர்களுக்குப் பாராட்டிதழ் அளித்துப் பேசினார்.

கலைமாமணி விக்கிரமன் அவர்கள் சிறப்புரையாற்றினார். டாக்டர் தாமரைக் கண்ணன், இரா. பகவானந்ததாசன், எம்.கே. செபஸ்தியன், திருமதி நாக. செங்கமலம், கவிஞர் சாலிவாகனன், இரா. தனிகைத் தம்பி, ப. பத்மநாபன் ஆகியோரின் பாராட்டுரைகள் எழுத்தாளர் தினத்தைச் சிறப்பாக்கித் தந்தன.

அறிஞர் பெருமக்கள், இலக்கிய அன்பர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்று பெரும்பாலோர் எழுத்தாளர் தின விழாவில் கலந்து கொண்டு கலைமாமணி விக்கிரமன் அவர்களின் பிறந்த தினத்தை எழுத்தாளர் தினமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.



அரசன் கெமிகல்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

சிவகாசியில் அமைந்துள்ள அரசன் கெமிகல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் இதுநாள் வரை 'செராமிக்' உற்பத்திக்குத் தேவையான 'பிளாஸ்டர் ஆப் பாரிஸ்' தயாரித்து வந்தது. இப்போது ஏற்றுமதி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந் நிறுவனத்தின் சித்தா பிரிவு, மூலிகைகளினால் தயாரிக்கப்பட்ட மூன்று சிறந்த பொருள்களைத் தயாரித்து பொது மக்கள் பயனுக்காக வெளியிடத் திட்டமிட்டுள்ளார்கள்.

ஸ்ரீகொங்கனார் ஹெர்பல் ஆயில் : 20 வித மூலிகைகளைக் கொண்டு சிறந்த சித்த முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

இளநரை, முடி உதிர்தல், ஆகியவை தடுக்கப்பட்டு தலையில் வழுக்கை உள்ள பாகங்களில் புதிய முடி வளரவும் வழிவகை செய்கிறது.

ஸ்ரீகொங்கனார் நுடவாத தைலம் : பலவிதக் காரணங்களினால் இன்றைய மக்களைப் பெரிதும் பாதித்துவரும் முடக்கு வாதம், கால்களில் வீக்கம், மூட்டு வலி, உடம்பு வலி, கழுத்து வலி, இடுப்பு வலி ஆகிய எல்லாவித வலிகளுக்கும் உடனடி நிவாரணம் அளிக்கவல்லது. இதை வலியுள்ள இடத்தில் சிறிதளவு தடவி நீவி விட்டு அரைமணிக்குப்பிறகு வெது வெதுப்பான நீரில் கழுவினால் போதும். வலி பறந்தே போய் விடும் எனக் கூறுகின்றனர்.

'நடராஜ்' சுத்தம் செய்யும் பவுடர்: முதன் முறையாக மூலிகையினால் தயாரிக்கப்பட்ட 'நடராஜ்' சுத்தம் செய்யும் பவுடர், பாத்திரங்களைத் துலக்க மிகவும் உகந்த பவுடர். காஸ்டிக் சோடா போன்ற கை அரிப்பு ஏற்படுத்தக் கூடிய' பொருள்கள் தவிர்க்கப்பட்டு, முழுவதுமாக மூலிகைகளினாலேயே தயாரிக்கப்பட்டது.

இந் நிறுவனத்திலிருந்து ஆ... வேத ஹெர்பல் சோப்பையு... ஆஸ்துமா, நீரிழிவு, சிறுநீரகக்க... ரத்தத்தில் கொழுப்பு ஆகியவ... றிற்கான மூலிகை மருந்துகளை... யும், 40 வயதுக்கு மேற்பட்டவர்க... திரும்பவும் இளமைத் துடிப்புட... செயல்பட மூலிகைகளினால் த... ரிக்கப்பட்ட ஊட்டச் சக்தி மிகு... காப்சூல்களையும் தயாரிக்க இரு... கிறார்கள்.

—டிஆர்...

சிந்தாதிரிப்பேட்டையி... கந்தகோட்ட முருகனி... உலா


சென்னை பார்க் டவு... பகுதியிலுள்ள பாடல் பெற்ற பழ... வாய்ந்த கோயிலான ஸ்ரீகந்த கோட்... உற்சவர் ஸ்ரீமுத்துக்குமாரசுவா... ஆண்டுக்கோர் முறை சிந்தாதிரி... பேட்டையிலுள்ள ஸ்ரீ ஆதிபுரீஸ்வ... ஆலயத்திற்கு எழுந்தருளி பின்... சிந்தாதிரிப்பேட்டையில் முக்கிய வீதிகளி... திருவீதி உலா வந்து அன்பர்களுக்... அருள்பாலிக்கும் விழா சமீபத்தி... நடந்தேறியது.

ஆலய மண்டபத்திலே பழமுதிர் சோலை... போன்ற தோற்றத்தினை, திரையுலக... கலைஞர்களைக் கொண்டு சிறப்பாக... செய்திருந்தனர். கந்தகோட்டம் சீனிய... அறங்காவலர் திரு. பி.பாலசுப்பிரமணிய... அவர்களது ஒத்துழைப்புடன் செயலா... திரு டி.வேணுகோபால் பொருளாளர்க... திரு.முருகதாஸ் ஏ.சுப்பிரமணிய... ஆகியோர் விழா ஏற்பாடுகளைப் பாரா... டும் விதமாகச் செய்திருந்தனர்.



சலங்கை விழா

குரு. நளினி பாலகிருஷ்ண... னிடம் ஒன்றரை ஆண்டுகள் நடன... பயின்ற செல்வி. நிரஜாவின் சலங்கை... விழா, சென்னை வாணி மகாலி... சிறப்பாக நடந்தது. பாரதியா... பல்கலைக்கழக முன்னாள் துணை... வேந்தர் டாக்டர் கே.எம். மாரிமுத்... ஸ்ரீ துர்க்கை சித்தர், திரு. ஏ.எ... சுந்தர்ராஜ், திரு. எஸ்.ஆர். கோ... திரு. அமாவாசை ஆகியோர் செல்வ... நிரஜாவின் நாட்டியத்தை... பாராட்டினர்.



மிஸ் ராகா '95

நேச்சர் கேர் புராடக்ட்ஸ் றுவனத்தின் அழகிப் போட்டியின் றுதிச் சுற்று. நடைபெற்ற இடம் மராசர் நினைவரங்கம். இந்தியா வில் இருந்து மொத்தம் 200க்கும் மேற்பட்ட அழகிகள் போட்டியில் கலந்து கொள்ள இறுதிச் சுற்றுக்கு 25 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந் தனர். போட்டியின் நடுவர்கள்: எழுத்தாளர் சிவசங்கரி, கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த், நடிகை குஷ்பு, பூர்ணிமா பாக்யராஜ், தொழில் அதிபர்கள் சி.கே.ராஜ்குமார், சுகுமாரன்.

போட்டியில் 'மிஸ் ராகா 95' பட்டத்தை வென்றவர் எத்திராஜ் கல்லூரி மாணவி தருணா. நடிகை குஷ்பு சிறந்த அழகிக்கான பட்டத்தை தருணாவிற்குச் சூட்டி, லலிதா ஜுவல்லர்ஸ் வழங்கிய ரூ. 10,000த்திற் கான பரிசையும் அளித்தார்.

இரண்டாவது இடத்தை குளோரிட்டாவும், மூன்றாவது இடத்தை ஸ்ரீவள்ளியும் அடைந்தனர்.

அழகிப் போட்டி நிகழ்ச்சிக்குப் பின் நேச்சர் கேர் புராடக்ட்ஸின் புதிய தயாரிப்பான 'ராகா ஹெர்பல் ஹிபிஸ்கஸ் ஆயில்'லை குஷ்பு அறி முகப்படுத்தினார். தூய தேங்காய் எண்ணெயில் செம்பருத்தி இதழ் களில் இருந்து எடுக்கப்பட்ட எண் ணெய்ச் சத்துகளும், மருதாணி, கறிவேப்பிலை, நெல்லி, கீழா நெல்லியுடன், சிறிது சந்தனமும் கலந்துள்ள 'ராகா ஹெர்பல் ஹிபிஸ்கஸ் ஆயில் கேசப் பராமரிப்புக் குக் கிடைத்துள்ள இயற்கை மூலிகை எண்ணெய் எனலாம்.

100 மி.லி.அளவுக்கு ரூ.22.50 என்ற விலையில் இதன் விற்பனை தென்னிந்தியாவில் தொடங்கப் பட்டுள்ளது.

ராகா ஹெர்பல் பவுடர் மூலம் பெண்களின் மனத்தில் இடம் பெற் றுள்ள நேச்சர் கேர் புராடக்ஸ் 'ராகா ஹெர்பல் ஹிபிஸ்கஸ் ஆயில்' அறிமுகத்தின் வாயிலாக அனைவரின் மனத்திலும் இடம் பெற வாழ்த்து வோம்.

அம்முறை சரியல்ல என்று அறிந்தவுடன் மிகப் பெருந் தன்மையுடன் அதனை மாற்றி. யமைக்க இசைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகப் பெருமைப் படுகிறேன்.

- கே.பி. பாஸ்கர்,
சென்னை 600 084.

★ பாச உணர்வுகளுக்குப் பட்டுக் கம்பளம் விரிக்கும் வகையில் ஒன்றையும், தூக்கி எறியப்பட்ட எச்சில் இலையாய் பாசப் பந்தாடப்படும் ஒரு கதையுமாக இரு சிறப்பான பரிசுப் பெற்ற சிறுகதைகளைக் கொடுத்து நெகிழ்ச்சியடையச் செய்து விட்டீர்கள்.

- நாகை சந்திரா
நாகப்பட்டினம்.

☆ அமுதசுரபி மார்ச் இதழில் பாவையர் பக்கங்கள், இளைய அமுதம் இல்லாத குறையை புத்தகத் தொழில் மலர் போக்கிவிட்டது.

- அன்பின் செபா,
கடையல்.

☆ சிலம்புச் செல்வரின் 'என் இலக்கிய வாழ்க்கை'ரசனை மிக்கதாக அமைந்திருக்கிறது.

- ஸ்ரீரங்கம் ரா. ராகவன்,
ஸ்ரீரங்கம் 620 006.

மனம் விட்டுப் பேசுவோம்

★ அனைத்துப் பதிப்பாளர் ளையும் ஒருசேர ஒரு புத்தகக் ட்சியில் சந்தித்து வெகுநேரம் பேசிக் கொண்டிருந்த உணர்வு ம்மாத புத்தகத் தொழில் மலர் த்து என்றால் அது மிகையல்ல.

- ரவி தமிழ்வாணன்,
சென்னை 600 017.

☆ குன்றக்குடித் திருக் கோயில் நவக்கிரகங்கள் பற்றிய ஒரு வாசக அன்பர் கேட்ட கேள்விக்கு தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அற்புதமான பதிலைப் படித்து நான் மெய் மறந்து விட்டேன். பக்தர்கள் உபாசிக்கும் தெய்வங்களின் குணம் அவர்களை அதட்டிக்கும் என்ற காரணத்தால் நவக்கிரகங் களை ஒருமுகமாக வைத்தார் அடிகளார். ஆனால் தற்சமயம்

தனிமரத் தோப்பு

★ 'தன்வினை தன்னைச் சுடும்' என்பதற்கு வினிதா ஓர் உதாரணம். ஒரு பெண் தன் ஏமாற்றங்களையெல்லாம் சகித் துக் கொண்டு, புது வாழ்க் கையில் ஏற்பட்ட எல்லா கஷ்டங்களையும் எதிர் நீச்சல் போட்டு தனி மரமாகிய பின்பும் துணிவோடு நின்று போராடி 'தனி மரத் தோப்பாக' மாறிய அனாமிகாவுக்கு நிகர் அனாமிகாதான். ராஜேந்திர குமாரின் 'தனிமரத் தோப்பு' அருமையான தொடர் நாவல்.

- இந்திரா ஆராவமுதன்,
திருச்சி.

84, டி.டி.கே. சாலை, சென்னை-600018-இல் உள்ள 'தமிழ் அரசி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீராம் டிரஸ்ட்-600001- சார்பில் வெளியிட்டவர் ஏ.வி.எஸ்.ராஜா. ஆசிரியர்: கலைமாமணி விக்கிரமன். நிர்வாக அலுவலகம்: 145, லிங்கச் செட்டி தெரு. த.பெ.எண்: 5043, சென்னை- 600 001. தொலைபேசி: 5228545, 510535